

பக்கம் 06

சீன ஊடுருவலுக்கு விரைவில் முடிவு



பக்கம் 07

21 ஆண்டுகளின் பின்னர் வெடித்துச் சீறுகிறது எட்னா



பக்கம் 22

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பொது மைதானம் வேண்டும்



பக்கம் 23

பெய்லி சாதனை


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 022 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 03, புதன் 18.12.2013

பககம: 32

வன்னி : ரூபா.20

யாழ். : ரூபா.20

கொழும்பு : ரூபா.30




மப்பான வானிலை

29 C 24 C

# கடுமையான பிரேரணை இலங்கை அரசின் மீது

## மார்ச் மாதத்தில் ஜெனிவா மாநாட்டில் கொண்டுவர சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் தீவிர பரப்புரை

கொழும்பு, டிசெம்பர் 18

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் ஏற்கனவே இரண்டு தடவைகள் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களை இலங்கை அரசு நிறைவேற்றத் தவறிய தால் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக மிகவும் கடுமையான பிரேரணையை நிறைவேற் றுமாறு உலக நாடுகளை வலியுறுத்தி தீவிர பரப்புரை கள் தற்போதே முடுக்கி விடப் பட்டுள்ளன. சர்வதேச மனித உரிமை அமைப்புகளும், சர் வதேச அரசசார்பற்ற நிறுவ னங்களுமே இந்தப் பரப்புரை களில் இறங்கியுள்ளன எனத் தெரியவருகின்றது.

இதற்கு ஆதரவாக இலங்கை யிலுள்ள மனித உரிமை அமைப்புகளும், அரசசார் பற்ற நிறுவனங்களும் தகவல் களைத் திரட்டி வழங்கும் நட வடிக்கையில் ஈடுபட்டுள்ளன என்றும் அறியமுடிகின்றது.

இதன் முன்னோடியாக சர்வ தேச மனித உரிமைகள் தின மான கடந்த 10ஆம் திகதி திரு கோணமலை நகரில், காணா மற்போனோருக்கு நீதி வேண்டி அவர்களின் உறவினர்கள் நடத்திய கவனவீர்ப்புப் போராட் டத்தின் மீது இராணுவப் புல னாய்வாளர்கள் உள்ளிட்ட காடையர்கள் நடத்திய காட்டு மிராண்டித்தனமான தாக்குத லின் புகைப்படங்கள், காணொ லிகள் ஆகியவற்றை இலங்கை யிலுள்ள மனித உரிமை

21 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. பிரதிநிதி கோத்தபாய திடீர்ச் சந்திப்பு

ஜெனிவா, டிசெ 18

போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கை உள்ளக விசாரணை நடத்தவில்லையென்றால், ஐக்கிய நாடுகள் சபையினூ டாகச் சர்வதேச விசாரனை மேற்கொள்ள நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று பிரிட்டன் எச்சரித்துள்ள நிலை யில், ஐ.நா பிரதிச் செய லாளர் எலியாசனுடன் தீடீர்ச் சந்திப் பொன்றைப் பாதுகாப் புச் செயலரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ மேற்கொண்டுள் ளார்.

அமெரிக்காவுக்கு இரகசியப் பயணம் மேற்கொண்டுள்ள பாதுகாப்புச் செயலர் கோத்த பாய ராஜபக்ஷ, நியூயோர்கி லுள்ள ஐ.நா பொதுச் சபைக் கட்டடத்தில் பிரதிச் செய லாளருடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலை சந்திப்பை நடத்தியுள்ளார்.

இந்தத் தீடீர் சந்திப்புத் தொடர் பில் தகவல்கள் எதுவும் தெரி விக்கப்படாத நிலையில், இன்ன சிற்றி பிரஸ் பிரதிச் செயலரிடம்

21 ஆம் பக்கம் பார்க்க

## கமல் ஓர் அப்பாவியாம்



யாழ்ப்பாணம், டிசெ.18

சுட்டுக்கொல்லப்பட்ட நெடுந் தீவு பிரதேச சபைத் தலைவர் பானியல் றெக்ஷ்யனது கொலை வழக்கில் கைது செய்யப்பட் டுள்ள சந்தேகநபரான ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல் எனப்ப டும் கமலேந்திரன் ஓர் அப்பாவி என்று தெரிவித்த அவரது

21 ஆம் பக்கம் பார்க்க

## விக்கி பதவி விலகுவது நாட்டுக்கு நல்லதல்ல

### மனோ கணேசனிடம் கூறினார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ 18

விக்னேஸ்வரன் வடக்கு முதல மைச்சர் பதவியிலிருந்து விலகு வது நாட்டுக்கு நல்லதல்ல. யாழ்ப்பாணம் சென்று நான் அவரைப்பார்க்கிறேன். இல்லா விட்டால் உடனடியாக கொழும் புக்கு அழைத்து அவருடன் கலந்துரையாடுகின்றேன் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்துள்ளார். ஜனநாயக மக்கள் முன்ன ணியின் தலைவர் மனோ கணேசனின் பிறந்த நாளான நேற்று அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும்போதே ஜனாதி பதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## கலைப் பீடத்துக்கு பட்டமளிப்பு ஜனவரியில் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர் வரும் ஜனவரி மாதம் நடை பெறவுள்ள பட்டமளிப்பு விழா வில் கலைப்பீட மாணவர் களுக்கு பட்டமளிப்பு இடம்பெ றாது. அவர்களுக்கு எதிர்வரும் மார்ச் மாதமே பட்டமளிப்பு

21 ஆம் பக்கம் பார்க்க

## தொண்டர்களுக்கு ஆதரவாக அனைவரும் இன்று போராட்டம்

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ்.போதனா வைத்திய சாலையில் பணியாற்றும் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு வலி யுறுத்தி அங்கு பணிபுரி யும் மருத்துவர்கள், தாதியர்கள், நிறைவு காண் தொழில் வல்லு நர்கள், சிற்றூழியர்கள் அனை வரும் இன்று புதன்கிழமை ஒரு மணி நேரம் கவனவீர்ப் புப் போராட்டத்தில் ஈடுபடவுள் ளனர்.

தொண்டர்களின் போராட்டத்

21 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு, கிழக்கு தமிழருக்கு தேசிய கீதம் தேவையில்லை

### தமிழில் இசைக்கத் தடையெனில் இதுவே முடிவு என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, டிசெ. 18

தேசிய கீதத்தை தமிழ்மொழி யில் இசைப்பதற்கு அனுமதி வழங்கப்படா விட்டால் வடக்கு, கிழக்குக்கு தேசிய கீதம் தேவை யில்லை என்று நேற்று நாடா ளுமன்றில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

கல்முனை பிரதேச செயலக தர முயர்வுக்கு முஸ்லிம் தலை மைகள் தடங்கலாக இருப் பார்களானால் மட்டக் களப்பு, திருகோணமலை போன்ற

21 ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்களின் ஒத்துழைப்பு இன்றி தேசிய ஒருமைப்பாடு ஏற்படாது

### நாடாளுமன்றில் அமைச்சர் வாசு எடுத்துக்காட்டு

கொழும்பு, டிசெ. 18

தமிழர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் தேசிய ஒருமைப் பாட்டை ஏற்ப டுத்த முடியாது என நேற்று சபையில் சுட்டிக் காட்டிய அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, தமிழர் ஒருவ ருக்கு சிங்களமொழியில் மாத் திரம் கடிதம் எழுதுவது கத்தி யால் குத்தும் செயல் போன் றது என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் நேற்று நடை பெற்ற தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு

21 ஆம் பக்கம் பார்க்க


## ஹாட்லிக்கு 167 வெட்டுப்புள்ளி

யாழ்ப்பாணம், டிசெ. 18

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து தரம் 6 இல் பிரபல பாட சாலைகளுக்கு அனுமதி பெறு வதற்கான வெட்டுப்புள்ளி நேற்று வெளியாகியுள்ளது.


இதன்படி பருத்தித்துறை ஹாட் லிக் கல்லூரியில் தரம் 6 இல் அனுமதி பெறுவதற்கான வெட் டுப்புள்ளி 167 எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் தமிழ் மொழி மூலமான ஆண்கள் பாடசாலைகளில் பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரிக்கு 167 புள்ளிகளும், யாழ். இந் துக் கல்லூரிக்கு 164 புள்ளிக ளும், பெண்கள் பாடசாலைக ளில் வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலைக்கு 163 புள்ளி களும், கலவன் பாடசாலை யான கொக்குவில் இந்துக் கல் லூரிக்கு 162 புள்ளிகளும் வெட்டுப் புள்ளிகளாக நிர்ண யிக்கப்பட் டுள்ளன. (த-400)



காரைநகர் ஈழத்துச்சிதம்பர திருவாதிரை உற்சவ பஞ்சரதப் பவனி பக்தர்களின் அரோகரா கோஷத் துடன் மிகவும் பக்திபூர்வமாக நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது. வசந்தமண்ட பப் பூசையை அடுத்து நடராஜப்பெருமான் தனது பரிவாரமூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருளி னார். சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் இதில் கலந்துகொண்டனர். (த-250)

# இளைஞருக்கு வாள்வெட்டு



யாழ்ப்பாணம், டிசெ.18
கையில் ஆழமான வாள் வெட்டுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கோண்டாவில் ரயில் கடவையை அண்மித்து இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் சிக்கி அதே இடத்தைச் சேர்ந்த எஸ். மகிந்தன் (வயது 22) என்பவரே படுகாயமடைந்தார்.

இது குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-4)

# தெற்கில் அரசைப்போல வடக்கில் கூட்டமைப்பு உள்ளூராட்சி சபைகளின் 'பட்ஜெட்' தோல்வி

யாழ்ப்பாணம், டிசெ. 18
தெற்கில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் வரவு - செலவுத் திட்டம் தொடர் தோல்வியைச் சந்தித்துவருகின்ற நிலையில், வடக்கில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்" ஆளுகைக் குட்பட்ட உள்ளூராட்சி சபைகளின் வரவு - செலவுத் திட்டங்களும் தோற்கடிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வல்வெட்டித்துறை நகரசபையின் வரவு - செலவுத் திட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மூன்று வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொறுப்பிலுள்ள வலி. தென்மேற்கு பிரதேசசபை, வலி.கிழக்கு பிரதேச சபை, வல்வெட்டித்துறை நகர சபை ஆகியவற்றின் வரவு - செலவுத் திட்டங்களே சர்ச்சைக்குரியனவாகவுள்ளன.

இதன் காரணமாக கடந்த சனி, ஞாயிறு தினங்களில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை.சேனாதிராசாவினால் மேற்படி மூன்று உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இதில், வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்ற சகல உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும்எனவும், மீறிச் செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராகக் கட்சியினால் ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

> **"இதற்கு ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் இருவரும் நடுவு நிலைமை வகித்த போதும், ஆளுங்கட்சியின் 5 உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்தை எதிர்ப்பதாகவும் தவிசாளரும் மற்றுமொரு உறுப்பினருமே ஆதரிப்பதாகவும் தெரிவித்தனர்.**


இந்த நிலையில் வல்வெட்டித்துறை நகர சபையின் வரவு - செலவுத் திட்டம் சபையில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை எதிர்ப்பதாகத் தெரிவித்துகங க்ஆளுங்கட்சி உறுப் பினர் எஸ்.குலநாயகம் முன் மொழிய அதனை கோ.கரு ணானந்தராஜா வழிமொழிந் தார்.

இதற்கு ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் இருவரும் நடுவு நிலைமை வகித்தபோதும், ஆளுங்கட்சியின் 5 உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்தை எதிர்ப்பதாகவும் தவிசாளரும் மற்றுமொரு உறுப்பினருமே ஆதரிப்பதாகவும் தெரிவித்தனர். இதனால் மூன்று வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் தோல்வியடைந்தது.

வல்வெட்டித்துறை நகர சபையின் வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த மாதம் வலி.கிழக்குப் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டமும் ஒரு வாக்கினால் தோல்வியடைந்திருந்தது. வலி.தென் மேற்கு பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் கடந்த இரு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக தோல்வியடைந்திருந்தது.

இதேவேளை தெற்கில் மத்திய அரசின் ஆளுகைக்குட்பட்ட 16 பிரதேச சபைகளின் வரவு - செலவுத் திட்டங்களும் தோற்கடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)




வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனம் கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவியுடன் இரண்டு பஸ்களை அன்பளிப்புச் செய்துள்ளது.
இந்தப் பஸ்களை முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட விவசாயத் திணைக்களங்களிடம் நேற்று வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் உத்தியோகபூர்வமாகக் கையளித்துள்ளார். திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இந்தக் கையளிப்பு வைபவம் இடம்பெற்றது. (த-5)

# அரச ஊழியருக்கு இடையூறு ஒருவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,டிசெ.18
அரச உத்தியோகத்தரைக் கடமை செய்யவிடாமல்தடுத்த நபரை14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

கெற்பேலி - பாலாவிப் பகுதியில் வழக்கு தொடர்பாக விசாரணைக்குச் சென்ற பொலிஸாரை அங்கு சட்ட விரோதமாக மணல் ஏற்றிக்கொண்டிருந்த 15 பேர் கடமை செய்யவிடாமல் இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதால் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு திரும்பிச் சென்று முறைப்பாடு செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் தேடுதல் வேட்டை நடத்திய போது அனைவரும் தலைமறைவாகியதால் திரும்பி வந்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுமுன் தினம் மாலை மீசாலை மேற்கில் அவர்களில் ஒருவர் மறைந்திருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து சாவகச்சேரிப் பொலிஸார் சுற்றி வளைத்து குறித்த நபரைக் கைதுசெய்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் நேற்று சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்தியபோது டிசெம்பர் 31 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-9)

# கைகலப்பில் ஈடுபட்ட மனைவியருக்கு சிறை

*தென்மராட்சி, டிசெ.18*
*இரு துருவங்கள் ஓரிடத்தில் சந்தித்த போது வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியதால் இருவரும் ஒரு வாரகாலச் சிறைத் தண்டனை அனுபவிக்க உத்தரவிடப்பட்டது.*
*இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் ஏற்பட்டது.*
*ஒரு கணவனின் இரு மனைவிகளே இவ்வாறு சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. வழக்கு விசாரணையைப் பார்க்க வந்த இருவருக்குமிடையில் திடீரென வாக்கு வாதம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியது.*
*இருவரையும் கைது செய்த நீதிமன்றப் பொலிஸார் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் இருவருக்கும் ஒரு வார சிறைத் தண்டனை விதித்தார். (வ-9)*

# தாலி அபகரிப்பு; சந்தேக நபருக்கு விளக்க மறியல்

மன்னார், டிசெ.18
மன்னார் தோட்டவெளி பிரதான வீதியால் சென்றுகொண்டிருந்த் பெண்ணின் தாலிக் கொடியை அபகரித்தமை தொடர்பாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த பெண் ஒருவர் அணிந்திருந்த 8 லட்சம் ரூபா பெறுமதியான தாலிக் கொடியை அந்த வீதியில் நின்றிருந்த நபர் ஒருவர் அபகரித்துக்கொண்டு தலைமறைவாகி விட்டார்.

இது தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சந்தேகத்தின் பெயரில் புதுக்குடியிருப்பு கோணர் பண்ணை பகுதியிலுள்ள நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேக நபரை நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட நீதிமன்றில் நீதிபதி ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் முன்னிலைப் படுத்திய போது அவரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-12-400)

# 50 இந்திய மீனவருக்கு டிசெ. 31 வரை மறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 18
இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டதாகத் தெரிவித்து கைது செய்யப்பட்ட 50 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி இந்தியாவின் புதுக்கோட்டை, ஜனதாப் பட்டினம் மற்றும் கோட்டைப் பட்டினம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30 மீனவர்கள் 8 படகுகளில் யாழ். அனலைதீவை அண்மித்த கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்ததாகத் தெரிவித்துக் காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று செவ்வாய்க்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிபதி கே. கஜநிதிபாலன் முன்னிலையில் இடம்பெற்றது. குறித்த 30 மீனவர்களையும்எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இதேவேளை கடந்த மாதம் 20 ஆம் திகதி காங்கேசன் துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 20 இந்திய மீனவர்களையும் மேலும் 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார். (த-17-400)


## வவுனியாவில் தொழில் தேடும் இளைஞர், யுவதிகளுக்கான ஒரு அரிய சந்தர்ப்பம் !

**நிதியியலில் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேசத் (UK) தராதரம் ஒன்றினை இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு....**
**வடமாகாணத்தில் இப்போது "கேற்வே" இடமிருந்து மட்டுமே......**

நீங்கள் :
கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கணித, உயிரியல் அல்லது வணிகவியல் துறைகளில் பயின்று சித்தியடைந்தவரா?
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருக்கிறீர்களா?
24 வயதுக்கு உட்பட்டவரா?

ADB EKSP
Education for Knowledge Society Project

CISI
CHARTERED INSTITUTE FOR SECURITIES & INVESTMENT



**கல்வி அமைச்சின்** EKSP **செயற்றிட்டத்தின் அனுசரணையுடன் வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம்** CISI
(The Chartered Institute for Securities & Investment - UK)
**நிறுவனத்தின் கற்கைநெறியில் இணைந்திடுங்கள்**

**விபரங்களுக்கு :**

புதிய பிரிவுகள் ஆரம்பம் 22.12.2013

UTHAYAN IT ISLAND
GATEWAY CENTRE @
Sunbritish College,
NO:26 Station Road,
Vavuniya.

(C.10352)

# 100% புலமைப்பரிசில் இலவசம்

மறைமுகக் கட்டணங்கள் எதுவுமில்லை

# முழங்கினார் சிறிதரன் எம்.பி. முடக்கினார் முதல்வர் சி.வி.

### இரணைமடுக் குள குடிதண்ணீர் திட்டத்தில் கசமுசா

யாழ்ப்பாணம், டிசெ.18

இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்.குடாநாட்டுக்குக் குடிதண்ணீர் எடுத்துவரக் கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உணர்ச்சிவசப்பட்டு ஆற்றிய உரைக்கு. மக்கள் நலத் திட்டங்களை உணர்ச்சி வசப் படாமல் ஆராயப் பழக வேண்டும் என்று அறிவுரை கூறினார் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

இரணைமடுக் குளத்தில் இருந்து தண்ணீரை யாழ். குடாநாட்டுக்கு எடுத்து வருவதைத் தான் கடுமையாக எதிர்க்கிறார் என்று தென்மராட்சி கல்வி வலயம் நடத்திய மார்கழித் திங்கள் முழுநிலா நாள் நிகழ்வில் முழங்கினார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

"இந்தத் திட்டத்தை கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் விரும்பவில்லை. இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டால் ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். குளத்தின் உயரத்தை அதிகரித்து யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் கொடுக்க முடியும் என்கிறார்கள்.

குளத்தின் உயரம் தற்போது 34 அடிகள். இதிலிருந்து 34 ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு நீர் பாய்ச்ச வேண்டும். ஆனால் சிறுபோகத்தில் 8 ஆயிரம் ஏக்கருக்குத்தான் நீர் வழங்குகிறார்கள். இதனை 16 ஆயிரம் ஏக்கராக மாற்றும்படி விவசாயிகள் கேட்கின்றனர். ஆனால் அது நடைபெறவில்லை. இப்போது குளத்தில் 12 அடி தண்ணீர்தான் இருக்கிறது. 20 ஆயிரம் மில்லியன் பணம் திரும்பிச் சென்றுவிடுமே என்பதற்காக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்வதை ஏற்க முடியாது. இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு முன்னர் அதிகாரிகள் யாருடன் பேசினார்கள்? கூட்டமைப்புடன் அவர்கள் பேசவில்லை"- என்றார் சிறிதரன்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தனது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட உரையை ஆரம்பிப்பதற்கு முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்துக்களுக்குப் பதிலளித்தார்.

செயற்றிட்டங்கள் பற்றி பேசும் போது உணர்ச்சி வசப்பட்டுப் பேசிப் பயனில்லை என்றார் முதல்வர். "உணர்ச்சி வாயிலாக வருவது மனத்திலிருப்பதும் , உள்ளத்திலிருப்பதும் தான். ஒரு செயற்றிட்டத்தின் நன்மை, தீமைகளைப் பற்றி ஆராயும் போது அவற்றை அப்புறப்படுத்தி விட வேண்டும். இந்தச் செயற்றிட்டம் வடமாகாண மக்களுக்கு நன்மையளிக்குமா இல்லையா என்பதைத் தான் அறிவுபூர்வமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த விடயத்தை நாங்கள் ஆராய்ந்து பார்த்து அது மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற நிலையில்தான் இதனை ஏற்றோம்.

அதிகாரிகள் யாருடன் பேசினார்கள், யாருடன் பேசவில்லை என்பதெல்லாம் முக்கியமல்ல. திட்டம் நன்மையானதா இல்லையா என்பதுதான் முக்கியம். அதிகாரிகள் கூட்டமைப்புடன் பேசவில்லை என்று சிறிதரன் கூறினார். அவர்கள் எங்களுடன் பேசினார்கள். மாகாண சபையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புஇல்லாமல்வேறு எந்தக் கூட்டமைப்பு இருக்கிறது?" என்றார் முதலமைச்சர்.

இரணைமடுக் குளத்தில் போதிய நீர் இல்லாவிட்டால் அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர் பெறப்படாது என்றும் 20 வருட காலத்துக்குள் குடாநாட்டுக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெற புதிய திட்டங்கள் ஆராய்ந்து தயாரிக்கப்படும் என்றும் அது வரையே இரணைமடுக்குள நீர் குடாநாட்டுக்கு தேவை என்றும் அவர் மேலும் கூறினார். (உ)

## பத்திரிகையாளர்களிடம் முதல்வர் படு கவனம்

பத்திரிகையாளர்கள் முன் சற்றுக் கவனமாகத்தான் பேச வேண்டும் என்றார் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். தென்மராட்சி முழுநிலா நாள் கலைவிழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனுக்குப் பதிலளித்துப் பேசிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நான் அரசியலுக்கு வருவதில் தம்பி சிறிதரனின் பங்கு நிறைய உண்டு. அதனால் அவரிடத்தில் எனக்கு விசேட பாசம் உண்டு. ஆனால் அவரது உணர்வுசார் பேச்சை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

அதற்காக நான் அதைப் பற்றி அதிகம் கூறினால் நாளைய பத்திரிகையில் முதலமைச்சருக்கும் சிறிதரனுக்கும் இடையில் கருத்து மோதல் என்று எழுதிவிடுவார்கள். அப்பேர்ப்பட்ட பத்திரிகையாளர்கள் இருக்கும் போது சற்றுக் கவனமாகத்தான் பேச வேண்டியிருக்கிறது" என்றார். (உ)

## கஞ்சா வைத்திருந்தவர்கள் மன்னாரில் பிடிபட்டனர்

மன்னார், டிசெ.18


மன்னார் தாழ்வுபாடு கிராமத்தில் சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா போதைப்பொருளுடன் இருவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

37 கிலோ கஞ்சா போதைப் பொருளுடன் வத்தளை மற்றும் கல்முனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவரே விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு கைப்பற்றப்பட்ட 37 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-12)

## 'பி' நெக்கடிவ் இரத்தம் தேவை



யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அவசரமாக பி நெக்கடிவ் வகை இரத்தம் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை விடுதியில் தங்கியுள்ள மூன்று நோயாளர்களுக்கு இது உடனடியாகத் தேவைப்படுவதாகவும், உயிர் காக்கும் உயரிய பணியில் நல்லுள்ளங்களை இணைந்து இரத்தம் வழங்குமாறும் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி கேட்டுக் கொண்டுள்ளது. (வ-5)



மன்னார் நாகதாழ்வுமோட்டை கிராமத்தில் தனியார் ஒருவரால் அமைக்கப்பட்ட மடுமாதா சிற்றாலயத்தை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காத்தான்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை வசந்தகுமார் சிறப்பு திருப்பலியுடன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். (க-12)

## மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராகப் போராட்டம்

*பாரவூர்தி உரிமையாளர் சங்கம் முன்னெடுக்கும்*

மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது பாரவூர்தி உரிமையாளர் சங்கம், தமக்கு மணல்ஏற்றியிறக்கும்உரிமையை மீளவும் வழங்கினால் தற்போதைய பெறுமதியை விட 3 ஆயிரம் ரூபா குறை வான பெறுமதியில் செயற்படத் தயார் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தினர் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். இது தொடர்பில் பாரவூர்தி உரிமையாளர் சங்கத் தலைவர் செ.ஜெயகுமார் கருத்துத் தெரிவிக்கையில்;

எமக்கு முன்னர் தரப்பட்டதைப் போன்று அரச அதிபர் ஊடாக மணல் ஏற்றிப் பறிக்கும் உரிமை வழங்கப்படல் வேண்டும். அத்துடன் எமது உறுப்பினர்களிடமிருந்து மகேஸ்வரி நிதியம் பெற்றுக் கொண்ட 5 ஆயிரம் ரூபா பணம் மீளத் தரப்படுதல் வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன் வைத்து நாம் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இது தொடர்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

மேலும் எமக்கு முன்னர் தரப்பட்டதைப் போன்று அரச அதி பர் ஊடாக மணல் ஏற்றியிறக்கும் உரிமைவழங்கப்படுதல் வேண்டும். இது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அரச அதிபர் எதிர்வரும் 26 ஆம் திகதி எம்மை அழைத்துள்ளளார் - என்றார். (வ-5-86)

## வடமாகாண அதிபர்கள் ஆசிரியருக்கு இடமாற்றம்

*7 வருடங்கள் தொடர்ச்சியாக கடமையாற்றியவர்களுக்கு*

அச்சுவேலி, டிசெ.18

வடக்கு மாகாண பாடசாலைகளில் ஏழு வருடங்கள் தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் - ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது. இது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட நடைமுறையில் கல்வி வலயங்களால் மேற்கொள்ளப்படவுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு பாடசாலையில் தொடர்ச்சியாக குறிப்பிட்ட காலம் சேவையாற்றியவர்கள் கல்விக் கோட்டம், வலய மட்டத்தில் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். முதலாம் தவணை ஆரம்பத்தில் இந்த இடமாற்றம் நடைமுறைக்கு வரலாம்.

ஆசிரியர், அதிபர்களின் பாடசாலை ரீதியிலான சேவைக் காலவிவரங்கள் மற்றும் தகவல்கள் வலயக் கல்வி அலுவலகங்களால் திரட்டப்பட்டு கணினி மயப்படுத்தப்பட்டிருப்பதால் இடமாற்றம் தொடர்பான பட்டியலை தயார் செய்து வெளியிடுவதில் கால தாமதம் ஏற்படாது.

> வலயக் கல்வி அலுவலகங்களால் திரட்டப்பட்டு கணினி மயப்படுத்தப்பட்டிருப்பதால் இடமாற்றம் தொடர்பான பட்டியலைத் தயார் செய்து வெளியிடுவதில் கால தாமதம் ஏற்படாது.

ஒரே பாடசாலையில் அதிபர்கள், ஆசிரியர்கள் தொடர்ச்சியாகக் கடமை புரிவதால் ஏற்படக் கூடிய சிறப்பு இயல்புகள் ஏனைய பாடசாலைகளுக்கும் சேர வேண்டும் என்ற அடிப்படையில் இந்த இடமாற்ற வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.


"நீண்ட காலம் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் - ஆசிரியர்களுக்கான இடமாற்றம் எந்த விதமான பாரபட்சமும் இன்றி உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும்" - என்றார். (வ-11)

## ஆலய ஒலிபெருக்கிகளின் ஓசையால் பரீட்சை எழுதும் மாணவர்கள் பாதிப்பு

*கட்டுப்படுத்த மத நிறுவனங்கள் முன்வரவேண்டும்*

வவுனியா, டிசெ.18

வடபகுதி இந்து ஆலயங்களில் திருவெம்பாவை உற்சவத்தை முன்னிட்டு ஒலிபெருக்கிகளை அளவுக்கு அதிகமான சத்தத்தில் ஒலிக்க விடுவதால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



அதிகாலை 4 மணிக்கே சில ஆலயங்களில் ஒலிபெருக்கிகள் ஒலிக்க ஆரம்பித்து விடுகின்றன. இதனால் வயோதிபர்கள், நோயாளிகள், சிறு குழந்தைகள், சாதாரண பொது மக்கள் அனைவரும் தூக்கம் கலைந்து அவஸ்தைப்படுகின்றனர். குறிப்பாக ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் உட்பட ஏனைய மாணவர்களும் இதனால் அதி காலை வேளைகளில் தமது கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட நிலையில் சிரமப் படுகின்றனர்.

உற்சவ தினங்கள், நவராத்திரி விரதம், கந்தசஷ்டி விரதம், பிள்ளையார்கதை விரதம், திருவெம்பா விரதம் ஆகிய விசேட உற்சவ காலங்களிலும் வெள்ளிக்கிழமைகளிலும் இந்து ஆலயங்களிலிருந்து போட்டி போட்டுக் கொண்டு ஒலிபெருக்கிகள் அதிக ஒலியுடன் முடுக்கி விடப்படுகின்றன.

இதைக் குறைக்குமாறு வவுனியா மாவட்டத்தில் கலாசார உத்தி யோகத்தர், வவுனியா பிரதேச செயலகம், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூக ஆர்வ லர்கள் உட்படப் பலரும் குறிப்பிட்ட ஆலயங்களுக்குச் சென்று அறிவித்தல்களை வழங்கிய போதிலும் இதுவரை இந்த நடவடிக்கை மாற்றமின்றித் தொடர்கின்றது.

இதனைக்கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் முன்வந்து அதிக சத்தத்தில் ஒலிக்கும் ஒலிபெருக்கிகளை இயக்கி வரும் ஆலய நிர்வாகங்களின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாணவர் கள், பெற்றோர்கள், மக்கள் அமைப்பினர் எனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

# சிறுவர் இல்லத்தை மூட உத்தரவு

*பிக்குவுக்கும் விளக்கமறியல் நீடிப்பு*

வவுனியா, டிசெ. 18

வவுனியா அட்டம்பகஸ்கட செத்செவன சிறுவர் இல்லத்தின் செயற்பாடுகளுக்குத் தடை விதித்துள்ள வவுனியா மாவட்ட நீதிமன்றம், மறு அறிவித்தல் வரை அதனை மூடுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

அட்டம்பகஸ்கட சிறுவர் இல்லம் சிறுவர் இல்ல விதிமுறைகள், ஒழுங்குகளைக் கடைப்பிடித்து நடத்தப்படவில்லை என்று சிறுவர் நன்னடத்தைப்பிரிவு அதிகாரிகள் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் அட்டம்பகஸ்கட சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்ற சிறுவர் மீதான துன்புறுத்தல்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள அந்த இல்லத்தின் நிர்வாகியான பௌத்த மதகுரு கல்யாணதிஸ்ஸ தேரரை மேலும் 14 நாள்க ளுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் வி.இராமகமலன் உத்தரவிட்டுள்ளார். (கு-400)

# வவுனியாவில் எலும்பு எச்சங்கள் மீட்பு

வவுனியா, மெனிக்பாம் பகுதியில் மலக்குழியில் இருந்து ஆண் ஒருவரின் எலும்புக் கூட்டு எச்சங்கள் செட்டிக்குளம் பொலிஸாரால் மீட்டகப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று அந்தப் பகுதியில் இருந்த வீட்டு மலக்குழியிலேயே நேற்று எலும்பு எச்சங்கள் மீட்கப்படுள்ளன.

குறித்த வீட்டில் 2011 ஆம் ஆண்டு வசித்து வந்த கணவன் மனைவி தொடர்பில் எவ்வித தகவலும் இல்லாததோடு வீடும் பூட்டப்பட்டுள்ளதாக புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் புலனாய்வாளர்கள் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் வீட்டு உரிமையாளரான பெண் கடந்த 15ஆம் திகதி பொலிஸாரால் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போது, குடும்ப தகராறு காரணமாக கணவனை தான் கோடாரியால் தாக்கியதாகவும் அப்போது அவர் உயிரிழந்துவிட்டார் என்றும் குறித்த பெண் சாட்சியமளித்துள்ளார். அவரது தகவலின் அடிப்படையில் மலக்குழியை ஆராய்ந்தபோது எலும்புக் கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அந்தியேட்டி அழைப்பு



**அமரர் திருமதி அன்னலட்சுமி கதிரவேலு**

**(S.K. எரி பொருள் நிரப்பு நிலையம், கனகராயன்குளம்)**

17.11.2013 அன்று அமரத்துவம் அடைந்த அமரர் திருமதி அன்னலட்சுமி கதிரவேலு அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் மதிய போசனநிகழ்வும் நாளை (19.12.2013) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு எரிபொருள் நிரப்பு நிலைய மண்டபத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

S.K.எரிபொருள் நிரப்பு நிலையம் A9 வீதி
கனகராயன்குளம் வவுனியா

**மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I
இற்கு 2012.02.02 ஆம் திகதி முதல்
பதவியுயர்வு பெற்றுள்ள எமது பிரதேச
செயலகத்தின் கணக்காளர்

**கிருஸ்ணபிள்ளை யோகேந்திரன்**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு,
மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று
உயர்ந்திட மனதார வாழ்த்துகின்றோம்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் கிழக்கு,
கோப்பாய்.

**பிரதேச செயலரும,
உத்தியோகத்தர்களும்.**

(35805)(6.7.11)

## முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு மைதானகொள்வனவிற்கான பண உதவி கோரல்

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில்
மல்லாகம் யா/ 212 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள
சிறிய கிராமம் கல்லாரை ஆகும். அந்தக் கிராமத்தில் சிறுவர்
முன்பள்ளி உள்ளது. அதற்கு விளையாட்டு மைதானம்
இதுவரையும் இல்லை. 30 வருடங்களாக மைதானமாகப்
பயன்படுத்திய காணியை காணி உரிமையாளர் விற்பனை
செய்யவுள்ளார் அந்தக் காணியைக்கொள்வனவுசெய்வதற்கு
1, 400, 000 /= தேவையாக உள்ளது. இதற்குத் தங்களால்
இயன்றளவு பண உதவி புரியுமாறு
மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பதிவு இல. **J.VC/21 CC/1104,**
வங்கி இல. **HNB - 11702006 8152,**
**T.P. 077 987 4696/ 021 491 5044**

**வளர்மதி சனசமூக நிலைய நிர்வாகத்தினர்.
கல்லாரை, மல்லாகம்.**

(42709) (45.6.3)

## மரண அறிவித்தல்



### பெரியதம்பி முத்துக்குமாரு

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 1514 பிரதான வீதி, இரத்தினபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இ.போ.ச. முன்னாள் ஊழியரும், தனியார் போக்குவரத்துக் கழக முன்னாள் நேரக் கணிப்பாளரும் ஆகிய பெரியதம்பி முத்துக்குமாரு நேற்று (17.12.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும், மகேந்திரராணியின் அன் புக் கணவரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் -மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திரகுமார் (குகன் - லண்டன்), இந்திராகாந்தி (லண்டன்), வற்சலகுமாரி (சுவிஸ்), கௌசலா (பிரான்ஸ்), காலஞ்சென்ற அம்பிகைச் செல்வன் ஆகியோ ரின் அன்புத் தந்தையும், கலா (லண்டன்), கொட்வின் சிசில் (லண்டன்), அம்பிகைபாகன் (சுவிஸ்), யோகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், சிறிஸ் கந்தராசா (இந்தியா), மகேந்திரராசா (வவுனியா), யோகேந்திரராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுலக்ஷா, டக்ஷா, வத்ஷா, பிரசன்னா, பிரியங்கா, கார்த்திகன், மஞ்சுகன், மகீஷா ஆகியோரின் அன் புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12. 2013) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். **தகவல்: குடும்பத்தினர்.**

## இதய அர்ச்சனை



### சிவஸ்ரீ சுப்பிரமணிய சுந்தரராஜக்குருக்கள்

(வரக்பற்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு)

எமது ஆலயத்துக்கு ஆன்மீக ஒளியை
நிறைவாகத் தந்த
என்றும் எம் மதிப்பிற்கும்,
வணக்கத்துக்கும் உரிய

**சிவஸ்ரீ சுப்பிரமணிய சுந்தரராஜக் குருக்கள் ஐயா** அவர்கள்
சிவப்பேறு அடைந்தமையையிட்டு, அவர்களை வணங்கி, எம்
இதயக் கமலத்தால் அர்ச்சிக்கின்றோம்.

பிரம்மவாச்சி தோட்டம், கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம்.
வட்டு.வடக்கு, சித்தன்கேணி.

## கண்ணீர் அஞ்சலி



### நடராசா சிவயோகராசா

**(வீமன் காமம் கேணியடி ஞானவைரவர் கோயில், நிர்வாகசபைப் பொருளாளர்)**

அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் நாமும் பிரிவுத்துயரில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**கேணியடி ஞானவைரவர் கோயில்
அடியார்கள்**

**வீமன்காமம் தெல்லிப்பழை.**

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினர் **கி.கஜீரன்**
அவர்களின் அன்புத்தந்தை

### கிருஷ்ணர் கமலசிங்கம்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக் கின்றோம்

**சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.**

**வளர்மதி முன்னேற்றக்கழகம்**

## மரண அறிவித்தல்

### நாகமுத்து நாகராசா (காந்தி)



யாழ்ப்பாணம் கொட்டடி சீனிவாசகம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது பிரான் ஸில் வசித்து வந்தவருமாகிய நாகமுத்து நாகராசா (17.12.2013) பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், உதயகுமாரன், உதயகுமாரி, சுகுணகுமாரி, சூரிய குமாரன், குமாரன், உருத்திரகுமாரி, குசலகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், அனோஜா, இராஜ குணசிங்கம், கலாமோகன், மதி, சற்குண ராஜா, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ் சென்றவர்களான இராசரத்தினம், அன்னலெட்சுமி, தங்கராசா, தயிரியலட்சுமி மற்றும் நாகபுஸ்பம், நாக ரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**திருமதி கோபாலகிருஷ்ணன் திகம்பரேஸ்வரி. (பெறாமகள்)**

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணர் கமலசிங்கம்



வடலியடைப்பு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் கமலசிங்கம் நேற்று (17.12.2013) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர்- நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், யோகரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியை யா/மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கஜன் மற்றும் குமுதினி (பொறியியலாளர்-மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம்), கஜீரன் (பதவி நிலை உத்தியோகத்தர்- இலங்கை வங்கி, திருநெல்வேலி), குயிலினி (தாதிய உத்தியோகத்தர்- போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜனார்த்தனி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - நல்லூர்), சுரேஸ் (வைத்திய அதிகாரி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், ரிஷிகேசன், ஹாசினி, ஹர்ஷானா ஆகியோரின் அன்பு பேரனும், சுசந்திரா தேவியின் அன்புச் சகோதரனும், தியாகராசா, காலஞ்சென்ற லட்சுமி ஆகியோரின் மைத்துனரும், தர்மேந்திரா, யாழரசி, எழிலரசி, திருவரங்கன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.12.2013) புதன்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"லக்ஷ்மி மகால்",
வராகி அம்மன் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**


(42726) (10.6.3)

**தகவல்:
குடும்பத்தினர்.**

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

**Supper Cup
90 (சைனா)**
மோட்டர்
சைக்கிள்
விற்பனைக்
குண்டு
தொடர்பு:
**075 0435701**

## கண்ணீர் அஞ்சலி



எமது கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர்
**கந்தசாமி முருகவேல்** அவர்களின் தந்தை

### வேலுப்பிள்ளை கந்தசாமி

**(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)**

அவர்கள் இயற்கை எய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!!சாந்தி!!!

**கோட்டக்கல்வி அதிகாரியும்,
அதிபர்களும் ஊழியர்களும், பளைக்கோட்டம்**

## யாழ்.நகரில் தீவன விற்பனை நிலையம்

கொழும்புத்துறை, டிசெ.18

யாழ்.பிரதேச கால்நடை வளர்ப்போர் சங்கத்தால் கால்நடைத் தீவன விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதியில் உள்ள விவசாய நுகர்ச்சி உற்பத்திக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் இயங்கிவரும் யாழ்.பிரதேச கால்நடை வளர்ப்போர் சங்க அலுவலகத்துடன் இணைந்து இந்தவிற்பனைநிலையம்செயற்படுவதாக சங்கச் செய லாளர் தெரிவித்துள்ளார். (வ-135)

## பாடசாலையில் கணினி திருட்டு

அச்சுவேலி, டிசெ.18

அச்சுவேலி பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாசாலையில் இருந்த கணினிகளில் ஒன்று திருடப்பட்டுள்ளது. கதவு திறக்கப்பட்டு கணினி மற்றும் கணினியின் செயற்பாட்டுக்கான உபகரணத் தொகுதி என்பன எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (வ-11)



நெல்லியடி - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நீர்வடிகால் அமைப்பு வேலைகள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தும் வகையில் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. (ஐ-422)

## அபராதம் ரூ.17,000

### ஆவணங்கள் இல்லாததற்கு

*வலி.தென்மேற்கு, டிசெ.18*

*எந்தவிதமான ஆவணங்களுமின்றி மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இளைஞர் ஒருவருக்கு மல்லாகம் நீதிவான் 17 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.*

*இரவு நேரம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட மானிப்பாய் பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவரை மறித்துச் சோதனை செய்த போது அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் உட்பட எந்த விதமான ஆவணங்களும் இல்லாதமை தெரிய வந்தது.*

*பொலிஸாரால் இளைஞருக்கு எதிராக மல்லாகம் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து நீதிவான் அவருக்கு 17 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (வ-15)*

## சாதாரண தரப் பரீட்சை ஒழுங்கு கண்காணிப்பதற்கு விசேட குழு

அச்சுவேலி, டிசெ.18

ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சை நடைமுறை ஒழுங்குகளைச் சோதனையிடுவதில் விசேட கண்காணிப்பு மற்றும் உயர் மட்ட குழுக்கள் 24 மணி நேரமும் ஈடுபட்டுள்ளன. அவதானிப்பு மற்றும் திடீர் மேற்பார்வை நடவடிக்கைகளில் அவை ஈடுபட்டுள்ளன.

கடந்த காலங்களில் பொதுப் பரீட்சைகள் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு இந்தமுறை பரீட்சை நடைமுறை ஒழுங்குகளில் கண்டிப்பான விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

பரீட்சைநிலையங்கள்,இணைப்பு நிலையங்கள் மற்றும் ஒருங்கிணைப்பு நிலையங்கள் விசேட கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. உயர் அதிகாரிகள் குழுநிலையிலும் தனி நிலையிலும் 24 மணி நேர கண்காணிப்பு மற்றும் திடீர் மேற்பார்வைகளை மேற்கொண்டு வருவதோடு அவதானிப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

உயர்நிலை கண்காணிப்பு மற்றும் திடீர் மேற்பார்வைகளை பரீட்சைத் திணைக்களம், கல்வி அமைச்சு மற்றும் வலயக் கல்வி அலுவலகங்கள் தனித்தும் இணைந்தும் மேற்கொண்டு வருகின்றன. பரீட்சை நடைபெறும் தினங்களில் பொலிஸார் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இணைப்பு நிலையங்கள் மற்றும் ஒருங்கிணைப்பு நிலையங்களில் உரிய முறையில் பாதுகாப்பு உள்ளதா, பரீட்சை தகுந்த முறையில் குளறுபடிகளின்றி நடைபெறுகின்றதா என்பன தொடர்பில் 24 மணி நேர கண்காணிப்பு இடம்பெறும். (வ-11)

## விசேட தேவையுடையோருக்கு தொழிற் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ.18

நாட்டில் உள்ள விசேட தேவையுடையோர் எதிர்காலத்தில் சுயதொழில்கள் மூலம் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் தொழிற்பயிற்சி செயற்றிட்டம் சமூக சேவைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ளது.

தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து நடத்தப்படவுள்ள இந்தத் தொழில்பயிற்சித் திட்டத்தில் விசேட தேவையுடைய 18 - 35 இற்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண், பெண் இருபாலாரும் இணைக்கப்படவுள்ளனர்.

மூன்று மாதங்கள் தொடக்கம் இரண்டு வருடங்கள் வரை ஐந்து நிலையங்களில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள் ளன.

தொழிற்பயிற்சிகள் பெறவிரும்பும் விசேட தேவையுடையோர் தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அனுஷா கோகில பெர்னாண்டோ அறிவித்துள்ளார். (வ-9)

## மோட்டார் சைக்கிளால் வீழ்ந்தவர் காயம்

வலி.வடக்கு, டிசெ.18

பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை பொலிஸார் மறிக்க முற்பட்ட வேளை தடுமாறி வீழ்ந்தவர் தலையில் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் திங்கட்கிழமை சேர்க்கப்பட்டார்.

மல்லாகம் சந்தியில் வீதிச் சோதனையில் ஈடுபடும் போக்குவரத்துப் பொலிஸார் வழமை போன்று நேற்று முன்தினமும் மோட்டார் சைக்கிள்களை மறித்து ஆவணங்களைச் சோதனையிடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த வேளை குறித்த நபரான செல்வராசா செல்வமதீபன் (வயது-32) என்பவரையும் பொலிஸார் திடீரென மறித்துள்ளனர். பதற்றம் அடைந்த நிலையில் மோட்டார் சைக்கிளை நிறுத்த முற்பட்டவேளையில் தவறி வீழ்ந்த அவர் தலையில் காயத்துக்கு உள்ளாகிய நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (வ-86)

## மலேரியா பாதிப்புக்கு 4 பேருக்குச் சிகிச்சை

### *கடந்த 2 மாதங்களில் மட்டும்*

வலி.வடக்கு, டிசெ.18

யாழ்.மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் மலேரியா நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகிய 4 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களில் மூவர் இந்தியாவில் இருந்தும் ஒருவர் தென்னாபிரிக்காவில் இருந்தும் வந்தவர்கள் என்று யாழ். மாவட்ட மலேரியா தடுப்பு இயக்கத்தின் பொறுப்பதிகாரி வைத்தியகலாநிதி அ.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலிருந்து இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. குறிப்பாக தற்போது ஐயப்ப சுவாமி விரதத்துக்காக இந்தியாவுக்கு அதிக அடியவர்கள் பயணம் செய்யவுள்ளதுடன் ஏனைய யாத்திரைகளுக்காகவும் தனிப்பட்ட தேவைகளுக்காகவும் இந்தியாவுக்காக எமது பகுதிகளில் இருந்து மக்கள் சென்று வருகின்றனர்.

குறிப்பாக இந்தியாவில் மலேரியாவின் தாக்கம் தற்போது காணப்படுவதாலும் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் மலேரியா தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளமை இங்கு இனங்காணப்பட்டமையாலும் இந்தியாவுக்குச் செல்லவுள்ளோர் தமது பகுதி சுகாதார வைத்தியதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொண்டு மலேரியா தடுப்பு மருந்தை பெற்றுச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மலேரியா தடுப்பு மருந்தை முன்னேற்பாடாக பெற்றுச்செல்வதன் மூலம் மலேரியா வில் இருந்து பாதுகாக்கப்படுவதுடன் மலேரியா நோய் பரவு வதையும்தடுக்கமுடியும்என்றும்அவர் மேலும் கூறினார். (வ-86)

> “ ”
> மலேரியா தடுப்பு மருந்தை முன்னேற்பாடாக பெற்றுச் செல்வதன் மூலம் மலேரியாவில் இருந்து பாதுகாக்கப்படுவதுடன் மலேரியா நோய் பரவுவதையும் தடுக்க முடியும்




# தொலைவில் இல்லை தமிழீழம்

## யஸ்வந்த் சின்ஹா தெரிவிப்பு

சென்னை, டிசெ.18

தமிழீழம் என்பது நீண்ட தொலைவில் இல்லை என்று தெரிவித்துள்ளார் பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினரும், இந்தியாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சருமான யஸ்வந்த் சின்ஹா.

'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை எட்டுதல்' என்பது தொடர்பாக பாரதிய ஜனதாக் கட்சியின் ஒன்றுகூடலில் விவாதிக்கப்பட்டது. அங்கு கருத்துத் தெரிவிக்கும் போதே ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான தீர்வு என்ற நிலையில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் ஜஸ்வந்த் சின்ஹா தெரிவித்துள்ளார்.



"தற்போதைய உலக மாற்றத்தில் ஈழம் என்பது மிக அருகிலேயே உள்ளது. பங்களாதேஷ் சுதந்திர நாடாக மாறியுள்ளது. அதேபோன்று வடசூடான் மற்றும் தென்சூடான் ஆகிய நாடுகளும் சுதந்திரம் பெற்றுவிட்டன. அதேவரிசையில் தமிழீழம்என்பதுவெகுதொலைவில் இல்லை" என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

"கச்சதீவை இந்தியா மீண்டும் தனக்குச் சொந்தமாக்க வேண்டும். அதன்மூலம் இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமைகளை உறுதிப்படுத்தலாம். அவர்களுக்கான மீன்பிடி எல்லைகளை வரையறைப் படுத்தலாம். மீனவர்களின் உயிர்கள் பறிக்கப்படுவதைத் தடுக்கலாம். ஆனால் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை குழப்பகரமானதாக இருக்கின்றது. அவ்வாறான கொள்கைகளால் இந்தியாவின் எதிர்காலம், அதிகாரம் மற்றும் உறுதித் தன்மைஎன்பவற்றுக்கு ஆபத்து ஏற்படும் என்று தோன்றுகின்றது.

தற்போதுள்ள இந்திய மத்திய அரசும், பிரதமரும் பலவீனமானவர்களாக இருக்கலாம். ஆனால் இந்திய மக்கள் பலவீனமானவர்கள் அல்ல. எமது அயல் நாடான இலங்கையின் வடக்கில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியும், இந்தியாவின் தற்போதைய பிரதமர் மன்மோகன் சிங்குமே காரணம். அதை வீடுவீடாகச் சென்று மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும்" என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# டில்லியில் ஜனாதிபதி ஆட்சி: ஆளுநர் பரிந்துரை

புதுடில்லி, டிசெ.18

புதுடில்லியில் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்துமாறு இந்திய மத்திய அரசுக்கு அந்த மாநில ஆளுநர் நஜீப் பரிந்துரைத்துள்ளார்.

டில்லியில் அண்மையில் நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. 32 தொகுதிகளிலும், அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி 28 தொகுதிகளிலும் வெற்றிபெற்றன. எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இதனால் டில்லியில் புதிய ஆட்சி அமைவதில் நெருக்கடி தொடர்கின்றது. தற்போதைய டில்லி சட்டசபையின் பதவிக் காலம் இன்றுடன் முடிவடைகிறது. இதையடுத்து டில்லி மாநில அரசியல் நிலவரம் குறித்து அந்த மாநில ஆளுநர் நஜீப் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு கடிதம் எழுதியுள்ளார்.



இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே கூறுகையில், "ஆளுநரிடம் இருந்து கடிதம் எமக்குக் வந்துள்ளது. அதில் சில பரிந்துரைகளை அவர் அளித்துள்ளார். இதுகுறித்து பரிசீலித்து முடிவெடுக்கப் படும்" என்று தெரிவித்துள்ளார்.

எந்த கட்சியும் ஆட்சி அமைக்க உரிமை கோராததை அடுத்து அந்த மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்தும்படி ஆளுநர் பரிந்துரை செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது. அத்தோடு சட்டசபையையும் சிறிது காலம் முடக்கி வைக்குமாறு அவர் பரிந்துரைத்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ற)

# சீன ஊடுருவலுக்கு விரைவில் முடிவு

## *இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி கூறுகின்றார்*

புதுடில்லி, டிசெ.18

இந்திய எல்லைப் பகுதிக்குள் அடிக்கடி இடம்பெறும் சீன ஊடுருவல்கள் குறித்து விரைவில் தீர்வு காணப்படும் என்று தெரிவித்துள்ளார் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய எல்லைப் பகுதிக்குள் சீன இராணுவம் ஊடுருவும் சம்பவங்கள் அண்மைக்காலமாகப் பெரிதும் அதிகரித்துள்ளன. இதுகுறித்து அந்த நாட்டுடன் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. இந்த விடயத்தில் விரைவில் தீர்வு எட்டப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

நாங்கள் அமை தியை நிலை நாட்டவே முடிவு செய்துள்ளோம். எல்லைப் பிரச்சினை தொடர்பாக திருப்திகரமான தீர்வு காணும் வரையிலும் அது குறித்து அதிகார பூர்வமான பேச்சுக்கள் நடத்தப்பட்டுத் தீர்வு காணப் படும். இந்த விவகாரத்தில் நாங்கள் தாமதிக்காமல்விரைவாக நடவடிக்கை எடுத்து வருகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.



அதேவேளை, கடந்த ஒக்ரோபர் மாதம் இரு நாடுகளுக்கும் இடையே எல்லைப் பகுதியில் நடைபெறும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் எல்லை ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியுள்ளது. (ற)

## மோடியின் தலைமையை ஏற்றாலே கூட்டணி

சென்னை, டிசெ.18

நரேந்திர மோடியைப் பிரதமராக ஏற்கும் கட்சிகளுடனேயே தமிழகத்தில் பா.ஜ.க. கூட்டணி அமைக்கும் என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சி யின் மூத்த தலைவர் இல.கணேசன்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"அ.தி.மு.க.வுடன் நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி இல்லை. ஒரே கூட்டணியில் இரண்டு பிரதமர் வேட்பாளர்கள் இருக்கமுடியாது. தி.மு.க.வுடன் கூட்டணி வைக்க வேண்டும் என்ற எண்ணம் தற்போது இல்லை. பா.ஜ.க. பிரதமர் வேட்பாளரான நரேந்திர மோடியின் தலைமையை ஏற்கும் கட்சியுடனே தமிழகத்தில் கூட்டணி அமைக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஹெலி ஊழல் விவகாரம்: இத்தாலி செல்கிறது சி.பி.ஐ.

புதுடில்லி, டிசெ.18

சொகுசு ஹெலிகொப்டர் பேர ஊழல் வழக்குத் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்காக இந்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் இத்தாலி செல்லவுள்ளனர்.



வி.ஐ.பி.க்களின் பயணத்துக்காக இத்தாலியின் பின்மெக்கனிக்கா நிறுவனத்தின் துணை நிறுவனமான அகஸ்டா வெஸ்ட்லேண்ட் நிறுவனத்திடம் இருந்து இந்திய மதிப்பில் ரூபா 3 ஆயிரத்து 600 கோடி பெறுமதியான சொகுசு ஹெலி கொப்டர்களைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் இந்திய மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தைக் குறித்த நிறுவனத்துக்குப் பெற்றுத் தருவதற்காக இந்திய விமானப்படையின் முன்னாள் தளபதி தியாகி உட்படச் சிலர் இந்திய மதிப்பில் ரூபா 360 கோடி லஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

அதுகுறித்து விசாரணை நடத்தி வரும் சி.பி.ஐ. ஹெலிகொப்டர் பேரத்தில் இத்தாலியின் கிடோ ஹேஸ்கெக் என்பவர் இடைத் தரகராக செயற்பட்டார் என்று தெரிவித்துள்ளது. தற்போது இத்தாலியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள அவரிடம் விசாரணை நடத்துவதற்காக சி.பி.ஐ. குழுவொன்று இத்தாலி செல்லவுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சி.பி.ஐ. வட்டாரங்கள், "மத்திய பாதுகாப்பு அமைச்சகம் அமைத்துள்ள குழு தாக்கல் செய்யும் அறிக்கையில் கிடோ ஹேஸ்கெக் எந்தெந்த நிறுவனங்களுடன் அல்லது நபர்களுடன் தொடர்புகொண்டிருந்தார் என்பது தெரியவரும். அந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்கள் மீது சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்யும். அதனைத் தொடர்ந்து விசாரணை தொடங்கப்படும்" என்று தெரிவித்துள்ளன.

அதேவேளை, இந்த வழக்கில் தொடர்புடைய நிறுவனங்கள் இந்தியாவுக்கு பணத்தை அனுப்பியமை குறித்த மேலதிக தகவல்களை அறிவதற்காக டுனிஷியா, மொரீஷியஸ் ஆகிய நாடுகளின் உதவியையும் சி.பி.ஐ. நாடியுள்ளது. (ற)

## பா.ஜ.க. கூட்டணிக்கு அடிபோடுகிறது தி.மு.க.

சென்னை, டிசெ.17

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தனித்துப் போட்டியிடும் என்று அறிவித்துள்ள அந்தக் கட்சித் தலைவர் கருணாநிதி, பாரதிய ஜனதாக் கட்சியுடனான கூட்டணிக்கும் சாதகமாக சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளார்.

சென்னை கோபாலபுரத்தில் நேற்று இந்திய முஸ்லிம் லீக் கட்சியின் மாநில தலைவர் காதர் மொய்தீனுடனான சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி, "நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தனித்துப் போட்டியிடும். அதே சமயம் பா.ஜனதாவிடம் இருந்து அழைப்பு வந்தால் கூட்டணி குறித்து தி.மு.க. முடிவு செய்யும்" என்று தெரிவித்துள்ளார்.

பா.ஜனதா தலைமையில் ம.தி.மு.க., தே.மு.தி.க., பா.ம.க., புதிய தமிழகம் மற்றும் கொங்கு நாடு முன்னேற்றக்கழகம் உள்ளிட்ட கட்சிகளை ஒன்றிணைத்து புதிய கூட்டணி ஒன்றை அமைக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டு வரும் நிலையில், பாரதிய ஜனதா உடன் கூட்டணி அமைக்க கருணாநிதி விருப்பம் தெரிவித்திருப்பது புதிய திருப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. (ற)



## லெபனானில் குண்டு வெடிப்பு: பலர் காயம்

பால்பெக், டிசெ.18
லெபனானின் கிழக்குப் பகுதியில் ஹிஸ்புல்லாஹ் இயக்கத்தினரின் முகாம் ஒன்றின் அருகில் சக்தி வாய்ந்த கார்க் குண்டு வெடித்ததில் பலர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
உத்தியோகபூர்வ தகவல் எதுவும் வெளியாகாத நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறித்து உறுதிப்படுத்த முடியவில்லை. (ற)

## பிலிப்பைன்ஸில் வாகன விபத்து: 22 பேர் சாவு

மணிலா, டிசெ.18
பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் பஸ் ஒன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 22 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 20 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.
கடும் பனிமூட்டம் காரணமாகவே இரு வாகனங்களும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன என்று கூறப்படுகின்றது.
இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## நியூஸியில் நேற்று நிலநடுக்கம்

லண்டன், டிசெ.18
நியூஸிலாந்தில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.
ரிச்டர் அளவுகோலில் 6.2 ஆகப் பதிவாகியிருந்த அந்த நிலநடுக்கம், அந்த நாட்டின் மேற்கு கடற்பகுதியில் 125 கிலோமீற்றர் தொலைவில் 25 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.
2009ஆம் ஆண்டு இதே பகுதியில் 7.8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது.
தற்போது ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பெருமளவில் சேதங்கள் எதுவும் நிகழவில்லை என்று அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)



மறைந்த தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதிக்கு அந்நாட்டுத் தலைநகர் பிரிட்டோரியாவில் மிகப் பெரிய சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வெண்கலத்தில் உருவாக்கப்பட்டுள்ள அந்தச் சிலை ஒன்பது மீற்றர் உயரமும், நான்கரைத் தொன் எடையும் கொண்டது. ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை நெல்சன் மண்டேலா முன்னெடுத்துச் சென்றார் என்பதைக் குறிக்கும் வகையில் இரண்டு கைகளையும் நீட்டி விரித்த வண்ணம் அவரது சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. (ற)

# ஈரான் விவகாரத்தில் மென்போக்குடன் சீனா

பீஜிங், டிசெ.18
ஈரானின் அணு செறிவூட்டல் விவகாரத்தில் ஈரானுடன் இணைந்து 6 நாடுகள் நடத்தவுள்ள கூட்டத்தில் சீனா மென்போக்குடன் இணக்கமான சூழ்நிலையைக் கடைப்பிடிக்கும் என்று அந்த நாடு அறிவித்துள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சீன வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் குவா சுன் யிங்,
"ஈரானின் அணு செறிவூட்டல் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் சீனா முனைப்புடன் உள்ளது. அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு ஈரானுடன் 6 நாடுகள் நடத்திய கூட்டுப் பேச்சுக்களின்போது உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டுள்ளது. அந்தப் பேச்சுக்களின்போது சீனா மென்போக்குடன் கூடிய இணக்கமான சூழ்நிலையையே கடைப்பிடிக்கும்.
இந்தப் பேச்சுக்கள் மூலம் எட்டப்பட உடன்படிக்கை அணு செறிவூட்டல் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணும் இலக்கை நோக்கி ஈரான் காலடி எடுத்து வைத்துள்ளதையே காட்டுக்கின்றது. அந்த முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு சீனா தன்னாலான உதவிகளை வழங்கும்" என்று தெரிவித்துள்ளார்.
ஈரானுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி ஐ.நா.நிபுணர் குழு ஈரானின் அணு உலைகளைச் சோதனையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ஸ்நோடன் விடயத்தில் மன்னிப்பே கிடையாது

*அமெரிக்கா திட்டவட்டம்*

நியூயோர்க், டிசெ.18
அமெரிக்காவின் உளவு ரகசியங்களை வெளியிட்ட எட்வேர்ட் ஸ்நோடன் தேடப்படும் குற்றவாளி. அவர் சரணடைந்தே தீர வேண்டும். மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது அமெரிக்கா.
அமெரிக்கா பிற நாடுகளின் மின்அஞ்சல், தொலைபேசி உரையாடல்கள் போன்ற முக்கிய தகவல்களை உளவு பார்த்த விடயத்தை வெளியிட்டுப் பரபரப்பைஏற்படுத்தியவர் எட்வேர்ட் ஸ்நோடன். அவர் தற்போது ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ளார்.
ஸ்நோடனிடம் அமெரிக்காவுக்கு எதிரான ஆவணங்கள் ஏராளமாக உள்ளன என்று கூறப்படும் நிலையில், அவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளது.
"ஸ்நோடன் சரணடைந்து விசாரணைகளை எதிர்கொள்வதே சிறந்த வழி. ஸ்நோடனுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் பட்சத்தில் அது மோசமான முன்னுதாரணமாக அமைந்து விடும்" என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா. (ற)

# 21 ஆண்டுகளின் பின்னர் வெடித்துச் சீறுகிறது எட்னா

ரோம், டிசெ.18
இத்தாலியின் சிசிலி தீவின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள எட்னா எரிமலை வெடித்துச் சிதறத் தொடங்கியுள்ளது.



ஐரோப்பாவிலேயே மிக தீவிரமாக உறுமிக்கொண்டிருக்கும் இந்த எட்னா எரிமலையின் முகத்துவாரம் ஆபிரிக்க புவி ஓடு மற்றும் யுரேசியா புவி ஓட்டுக்கும் இடையில் விலகும் விளிம்பின் மேல் 3 ஆயிரத்து 350மீற்றர் உயரத்தில் உள்ளது.
கடந்த பல வாரங்களாக வெடித்துச் சிதறி எரிமலைக் குழம்பை கக்கிக்கொண்டிருக்கும் இந்த எரிமலை தற்போது சாம்பலைப் பீய்ச்சி அடித்து வருகிறது. பல கிலோ மீற்றருக்கு இந்த சாம்பல் மேகங்கள் வானில் மிதந்து வருவதால், எரிமலைக்கு அருகிலுள்ள கடானியா விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.
இறுதியாக 1992ஆம் ஆண்டு எட்னா எரிமலை வெடித்து சிதறியது. தற்போது மீண்டும் அந்த எரிமலை சீற்றமடையத் தொடங்கியுள்ளது. (ற)

## 'சான்ட்விச்' தந்தால்தான் விமானம் செலுத்துவேன்

*விமானியின் பிடிவாதத்தால் பரபரப்பு*

தனக்கு விருப்பமான 'சான்ட்விச்' கிடைக்காததால் விமானத்தை இயக்க மறுத்த விமானியால் பரபரப்பு ஏற்பட்டது.
பாகிஸ்தானின் லாகூர் விமான நிலையத்தில் இருந்து கடந்த 14ஆம் நியூயோர்க் செல்ல வேண்டிய விமானம் புறப்படத் தயாராக இருந்தது. ஆனால் அந்த விமானத்தின் உணவுப் பட்டியலில் விமானி நவுஷாத்துக்கு விருப்பமான 'சான்ட் விச்' இடம்பெறவில்லை.
'சான்ட்விச்' வந்தால் தான் விமானத்தை இயக்குவேன் என்று அவர் பிடிவாதமாகக் கூறியதை அடுத்து கராச்சியில் உள்ள விமானத்துறைதலைமை அலுவலகத்திற்கு விமானியின் கோரிக்கை குறித்து அறிவிக்கப்பட்டது. அதையடுத்து 'சான்ட்விச்சை' கொடுக் கும்படி விமானத்துறை தலைமைகம் உத்தரவிட்டது. இந்தச் சம்பவம் அங்கு பெரும் பர பரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)




## டயானா கொலையானதுக்கு ஆதாரங்கள் எவையுமில்லை

*பிரிட்டன் பொலிஸார் கூறுகின்றனர்*

லண்டன், டிசெ.18
பிரிட்டன் இளவரசி டயானா கொலை செய்யப்பட்டமைக்கான எந்த ஆதாரமும் தமக்குக் கிடைக்கவில்லை என்று பிரிட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இளவரசி டயானா 1997 ஆம் ஆண்டு பரிஸில் இடம்பெற்ற கார் விபத்தில் உயிரிழந்தார். அன்றிலிருந்து அவரது சாவு தொடர்பாகப் பல்வேறு தகவல்கள் வெளியாகியவண்ணம் உள்ளன.
அண்மையில் வெளியாகியிருந்த ஒரு தகவலில் "பிரிட்டன் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவராலேயே இளவரசி டயானா கொலை செய்யப்பட்டார்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதையடுத்து பிரிட்டன் பொலிஸார் டயானாவின் சாவு



தொடர்பாக மீண்டும் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.
இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அதுகுறித்துப் பிரிட்டன் பொலிஸார் வெளியிட்டிருந்த தகவல் குறிப்பில்,
"டயானாவின் சாவு குறித்து விசாரணைகள் நடைபெற்றன. எமக்கு அவர் திட்டமிட்டுக்கொலைசெய்யப்பட்டார் என்பதற்குரிய ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஜேர்மனி பாதுகாப்பு அமைச்சராக பெண்

பேர்லின், டிசெ.18
ஜேர்மனியில் முதன் முறையாக பாதுகாப்பு அமைச்சுக்கு பெண் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
ஜேர்மனியில் கடந்த சில மாதங்களுக்கு முன் நடந்த தேர்தலில் மூன்றாவது முறையாகவும் ஏஞ்சலா மெர்க்கெல் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.
அவரது தலைமையில் புதிதாக அமைக்கப்பட்ட அமைச்சரவையிலேயே பாதுகாப்பு அமைச்சுக்கு பெண் ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ஏழு குழந்தைகளுக்குத் தாயான உர்சுலா டேர் லேயன் (வயது 55) என்ற பெண்மணியே முதன் முறையாக பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். (ற)

# போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் 2014 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 2014 ஆம் ஆண்டுக்கான கீழ்வரும் பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் உற்பத்தியாளர்கள், முகவர்கள்/ பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்/ கூட்டுத்தாபனங்கள்/ அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார தாபனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் **"பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு 30.12.2013 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் **"2014 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**பொருள்கள்/ வேலைகள்- A**

- A-1 எல்லா வகையான காகிதாதிகள், ஆவணங்கள் மற்றும் அலுவலக கடிதங்கள் என்பவற்றுக்கு தேவையான பொருள்கள், கணினிகளுக்கான காகிதாதிகள், நிழற்பிரதி செய்யும் இயந்திரத்திற்கான மை கொள்கலன்கள் (Cartridges), இலத்திரனியல் அச்சு இயந்திரத்திற்கான மை கொள்கலன்கள் (Toners), கணினி அச்சு இயந்திரத்துக்கான பட்டிகள் (Ribbons), மற்றும் ஏனைய தேவையான பொருள்கள்.
- A-2 மேசைகள், கதிரைகள், அலுமாரிகள் மற்றும் எல்லா வகையான அலுவலக தளபாடங்கள்.
- A-3 அலுவலக கணினி, அச்சு இயந்திரங்கள்(Printers), பிரதிகளெடுக்கும் இயந்திரங்கள்(Duplication), நிழற்பிரதி செய்யும் இயந்திரங்கள்(Photocopiers), தொலைநகல் இயந்திரங்கள்(Fax), மற்றும் இயந்திரப் பாகங்கள்.
- A-4 சுகாதார மற்றும் கழிவறைப் பொருள்கள் (தும்புத்தடிகள், ஈக்கில் தடிகள், கழிவகற்றும் தூரிகைகள், மலசல கூட தூரிகைகள், துடைப்பான்கள், தரையைக் கூட்டி ஈரமகற்றும் உபகரணங்கள், பாய்கள், விரிப்புகள்)
- A-5 கட்டடப் பொருள்களான கல், மண், சீமெந்து, செங்கல், இரும்பு, கூரைத்தகடு, மின் இணைப்பு உபகரணங்கள், மின்விசிறி, மின் குமிழ், நீர்க் குழாய் இணைப்புப் பொருள்கள், கைகழுவும் பாத்திரம் (Wash Basin), நீர்க் குழாய்கள் போன்ற பொருள்கள்.
- A-6 மெத்தைகள், (இறப்பர், தும்பு ஏனையவை)
- A-7 மரமும், பலகைகளும்.
- A-8 அலுமினியப் பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள்.
- A-9 ஆரோக்கிய நுகர்வுப் பொருள்கள் (சவர்க்காரம், விம், தொற்று நீக்கிகள் (Harpic) அழுக்ககற்றும் பொருள்கள், பொதுவான களஞ்சியப் பொருள்கள், மெதைல் ஸ்பிரிட், தீப்பெட்டிகள், சவரத் தகடுகள் (Blades).
- A-10 வாகன ரயர்கள், ரியூப்கள், பற்றரிகள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள்.
- A-11 சீருடைகள்/ ரெக்சின் மற்றும் நுளம்பு வலைகள்.
- A-12 இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், அறிவித்தல் பலகைகள்.
- A-13 அலுவலக அடையாள அட்டைகள்.
- A-14 மருந்துப் பொருள்களும் நுகர்வுப் பொருள்களும்.
- A-15 எல்லாவகையான துணிகள்.
- A-16 சப்பாத்துக்கள் (Shoes)
- A-17 தீந்தை பூசுவதற்கான உபகரணங்கள், கலவைகள், தூரிகைகள்.
- A-18 எல்.பி வாயுவும், வாயு அடுப்பும் (Cookers).
- A-19 கழிவுப் பொருள்கள் சேகரிக்கும் வெற்றுப் பைகள், பொலித்தீன் பைகள்.
- A-20 வைத்தியசாலைக் கட்டில்கள், பெட்டகங்கள் (Lockers), தள்ளு வண்டில்கள், செலைன் தாங்கிகள் போன்ற விடுதிகளுக்குத் தேவையான ஏனைய பொருள்கள்.
- A-21 நிர்மாண வேலைகளும் கட்டட வேலைகளும்.
- A-22 நுகர்வுப்பொருள் (ECG,ETT,CTG,EEG recording papers other such things etc)
- A-23 ஆய்வுகூட நுகர்வுப்பொருள் (Distill water, surgical spirit etc)
- A-24 ஆய்வுகூட நுகர்வுப்பொருள் (SAT,ASOT,RH factor, Fibrinogen & such things)
- A-25 ஆய்வுகூட உபகரணங்கள்
- A-26 சத்திரசிகிச்சை, வைத்திய உபகரணங்கள்

**சேவைகள் (Services)- B**

- B-1 கதிரை பின்னுதல், தீந்தை பூசுதல், மெருகூட்டல் வேலைகள், தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்.
- B-2 குளிரூட்டிகளினதும், குளிர்சாதனப் பெட்டிகளினதும் திருத்தங்களும், சேவைகளும்.
- B-3 கணினிகள், தொலைநகல் இயந்திரங்கள் (Fax), தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters), கணிப்பான்கள் (Calculators), பிரதிகளெடுக்கும் இயந்திரங்கள் (Roneo), நிழற்பிரதி செய்யும் இயந்திரங்கள் (Photocopiers), போன்றவற்றிற்கான திருத்த வேலைகள்.
- B-4 ஆய்வுகூட, சத்திரசிகிச்சை மற்றும் அனைத்து வைத்தியசாலை மருத்துவ உபகரணங்களுக்கான திருத்த வேலைகள்.
- B-5 எல்லா மின் உபகரணங்களுக்குமான திருத்தங்கள்.
- B-6 பிரேத அறையின் குளிரூட்டி சாதனங்களுக்கான திருத்தங்களும், பராமரிப்பும்.
- B-7 வாயு அடுப்பு, ஒட்சிசன் வாயு உபகரணங்களுக்கான திருத்தங்களும், பராமரிப்பும்.
- B-8 நீர் இறைக்கும் இயந்திரங்கள், நீர்க் குழாய்களுக்கான திருத்த வேலைகள்.
- B-9 வாகனப் பராமரிப்பு.(Servicing)
- B-10 வாகனத் திருத்தங்கள்.
- B-11 இரும்புப் பொருள்களுக்கான திருத்த வேலைகள் (வர்ணம் பூசுதல், மெருகூட்டுதல்)
- B-12 உரிமை கோரப்படாத உடல்களைப் புதைத்தல்.
- B-13 அச்சு வேலைகள் (Printing)
- B-14 சத்திரசிகிச்சை நிலையம், ஆய்வுகூடங்கள், மற்றும் அனைத்து வைத்தியசாலைக் கட்டடங்கள், சாக்கடை நீர் வடிகால் திட்டங்களுக்குமான திருத்த வேலைகள்.
- B-15 உள்ளக மின்சார அமைப்புகள் மற்றும் தொலைபேசி அமைப்புகளுக்கான திருத்த வேலைகள்.

**கொள்வனவாளர்கள்- C**

C-1 வைத்தியசாலையிலிருந்து பாவனைக்குதவாதென ஒதுக்கப்பட்ட பொருள்களான கண்ணாடிகள், பிளாஸ்ரிக் போத்தல்கள், செலைன் போத்தல்கள், சிரட்டைகள், எக்ஸ்றே பட அட்டைகள், படச்சுருள் கழுவும் தண்ணீர், பிளாஸ்ரிக் மற்றும் மரத்துண்டுகளும் உபகரணங்களும்.

## வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் - 2014
## போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்

1. விண்ணப்பதாரரின் பெயர் :..........................................
2. வியாபார தாபனத்தின் பெயர் :..........................................
   விலாசம் :..........................................
   :..........................................
3. பதிவு செய்யப்படுவதற்கான வழங்கல்(பொருள்கள்) வகை இலக்கம் :..........................
4. பதிவு செய்யப்படுவதற்கான சேவை வகை இலக்கம் :..........................
5. வியாபார பதிவு இலக்கமும் திகதியும் :..........................
6. தொலைபேசி இலக்கம் :..........................
7. வழங்கலுக்கான பொருள்கள் / சேவைகள் விவரம்:

| வகைக்குறி இலக்கம் | வழங்கல்/சேவைகள் விவரம் | காசுக்கட்டளை இலக்கம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

மேற்குறிப்பிட்ட விவரங்கள் யாவும் உண்மையெனவும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் வரையரைகளுக்குட்பட்டு பொருள்கள் சேவைகளை வழங்குவதற்கு இத்தால் இணக்கப்பாட்டினைத் தெரிவிக்கின்றேன்.

திகதி:..................................  ..................................
முகாமைப் பணிப்பாளர்

**நிபந்தனைகள்**

1. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வகை பொருள்கள், சேவைகளுக்கான வழங்குதலுக்கும் ரூபா:500/= ஐ போதனா வைத்தியசாலைக் காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை அல்லது காசுக் கட்டளையினை **"பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
2. காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
3. ஒவ்வொரு வகைப் பொருள்கள், சேவைகள், வழங்கலுக்கும் தனித்தனியான விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட மாதிரிக்கமைய தயாரித்து 30.12.2013 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. பொருள்கள், சேவைகள் வழங்கல்கள் வைத்தியசாலையால் குறிப்பிடப்படும் மாதிரிக்கமைவானதாகவும் தரமானதாகவும் இருக்க வேண்டும்.
5. சம்மந்தப்பட்ட நிறுவனம் செல்லுபடியான வியாபாரப் பத்திர பிரதியினையும் இணைக்க வேண்டும்.
6. பொருள்கள் சேவைகள் விநியோகிக்கும் நிறுவனமானது ஏக விநியோகஸ்தர்களாக இருக்கும் பட்சத்தில் அதற்கான அங்கீகாரக் கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
7. பொருள்கள் சேவைகள் வேலைகளை வழங்கும் நிறுவனமானது குறித்த வேலையில் 3 வருட கால அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.
8. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட VAT பதிவுப்பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும் அன்றேல் VAT விதிவிலக்கு சான்றிதழ் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
9. தேவை ஏற்படுமிடத்து பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களைத் தவிர வேறு தாபனத்திடமிருந்தும் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் நிறுவனத் தலைவருக்கு உண்டு.
10. உடன்படிக்கைக்கு அமைவாக பொருள்கள், சேவைகளை வழங்கத் தவறிய நிறுவனங்கள் வழங்குநர்களுக்கான பதிவுப் பட்டியலிலிருந்து நீக்கப்படுவர்.
11. இது சம்மந்தமான மேலதிக தகவல்களை கணக்காளர், போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம் அவர்களுடன் பின்வரும் தொலைபேசி இலக்கம் 0212223149 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்
12. 30.12.2013 ஆம் திகதிக்குப் பின்பு கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(C/10613)(2.3.6) - **பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவன பட்டமளிப்பு இன்று

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவன 10 ஆவது பட்டமளிப்பு விழா இன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 3 அமர்வுகளாக நடைபெறவுள்ளது. இதில் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தைச் சேர்ந்த 234 மாணவர்கள் பல்வேறு துறை ரீதியாக பட்டம் பெறுகின்றனர்.

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்களில் உயர் தேசிய கணக் கியல் டிப்ளோமா பட்டத்தை 150 பேரும், உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா பட்டத்தை 29 பேரும், உயர் தேசிய தகவல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா பட்டத்தை 35 பேரும், உயர் ஆங்கில டிப்ளோமா பட்டத்தை 14 பேரும், உயர் தேசிய வணிகக் கற்கை பட்டத்தை 6 பேரும் பெற்றுக் கொள்வர். (ந)

## வகுப்புகள் இடமாற்றம்

நெல்லியடி மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த கல்விமாணி பட்ட கற்கை நெறியின் 2013/2015 வகுப்புக்கள் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறுமென நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபரும் கற்கை நெறி இணைப்பாளருமான எஸ்.சேதுராஜா அறிவித்துள்ளார். ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை நடைபெறுவதனாலேயே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-422)

## பயிற்சி நெறிகளுக்கு பதிவு செய்யலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பின்வரும் கற்கை நெறிகளை எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கவுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், கட்டட நிர் மாண உதவியாளர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், காய்ச்சி இணைப்பவர், ஆடை வடிவமைப்பாளர், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துநர், மர வேலை தொழில் நுட்பவியலாளர் என்பவையே அவையாகும். அனைத்துக் கற்கை நெறி களும் தேசிய தொழில் தகைமை சான்றிதழுக்கு உரிய பயிற்சிகளாகும்.

இந்தக் கற்கைநெறிகளைப் பயில விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை மாவட்ட அலுவலகம், முத லாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் அல்லது காரைநகர் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 20 ஆம் திக திக்கு முன்னதாக மேற்கொள்ள லாம் என்று மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (ந)

## கிளினிக் திகதியில் மாற்றம்

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நரம்பியல் விசேட வைத்திய நிபுணர் மருத்துவர் ரி.திவாகரனால் இன்று புதன்கிழமை நடத்தப்படவிருந்த நரம்பியல் நோய் தொடர்பான கிளினிக் தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது. பதிவு செய்த நோயாளர்கள் அன்றைய தினம் சமுகமளிக்குமாறு மருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகர் கேட்டுக்கொண்டுள்ளார். (க)

**கொள்வனவு**

சகலவிதமான நெல் வகைகளும் கொள்முதல் செய்யப்படும்.

(42561)(12.8) தொடர்பு: 077 772 2215

**மணமகள் தேவை**

1986, R.C, உயரம் 6' உதவி முகாமையாளர் மணமகனிற்கு R.C மணமகள் தேவை. துர்க்கா திருமண சேவை, 370/3 பருத்தித்துறை வீதி, நல்லூர்.

தொடர்பு: 077 818 5978/021 321 1814

**ரெலிபோன் ஓடர்**

உங்கள் இடத்துக்கு நிப்போன் சிமெந்து றோயல் ஹாட்வெயார்

T.P:021 221 9300

# பழைய முறிகண்டியில் கள்ள மணல் அகழ்வு

### *தடுத்து நிறுத்தக் கோரிக்கை*

அக்கராயன், டிசெ.18

துணுக்காய் பழைய முறிகண்டி கிராமத்தில் இருந்து தினமும் களவாக மணல் ஏற்றிச் செல்லப்படுவதைத் தடுப்பதற்கு வடமாகாண விவசாய அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தாம் இந்தக் கிராமத்தில் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட நாளிலிருந்து பெருமளவு மணல் இங்கிருந்து வெளி இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும், இது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்ட போதிலும் பயனேதும்கிடைக்கவில்லையெனவும் பழையமுறிகண்டி கிராமமக்கள் தெரிவிக்கின்றனர்.

அயல் கிராமங்களான புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் ஆகிய கிராமங்களிலும் மணல் அகழ்வு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# குளங்களுக்கு நீர் வரத்துக் குறைவு கடும் பாதிப்பில் பெரும் போக சாகுபடி



அக்கராயன்,டிசெ.18

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்களுக்கு எதிர்பார்த்த அளவு நீர் வராததால் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்.சுதாகரன் தெரிவித்தார்.

வழக்கமாக இரணமடுக்குளம் இந்தக் காலப் பகுதியில் சுமார் 27 அடி வரையான நீரைக் கொண்டிருக்கும். ஆனால் தற்போது 15 அடி நீர்மட்டுமே குளத்தில் நிரம்பியுள்ளது. மழைவீழ்ச்சி குறைவாக இருப்பதன் காரணமாக போதிய நீரின்றி நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

150 மில்லி மீற்றர் மழை பெய்யும்போது நிலைமையில் மாற்றம் ஏற்படலாம். தொடர்ந்து மழைவீழ்ச்சி குறைவடையுமானால் கால போகம் மற்றும் சிறு போகம் ஆகியவற்றில் பயிர்ச் செய்கையை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (க-18)

## பழையமுறிகண்டி கிராமத்தில் யானைகளால் தொல்லைகள்

அக்கராயன், டிசெ.18

துணுக்காய் பழைய முறிகண்டிக் கிராமத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இரவுவேளைகளில் வயல்களில் நுழையும் யானைகள் நெற்பயிர்களை மிதித்து நாசம் செய்து வருகின்றன. இதுவரை 150 ஏக்கர் வரையான நெற்பயிர்களை யானைகள் அழித்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

44 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள இந்தக் கிராமத்தில் நெற் பயிர்ச்செய்கையே இவர்களின் உயிர்நாடியாகத் திகழ்கின்றது.

பழைய முறிகண்டிக் கிராமத்துக்கும் கோட்டைகட்டிய குளம் கிராமத்துக்கும் இடையிலுள்ள வீதியில் மாலை வேளைகளில் தனியன் யானை ஒன்று நடமாடி வருவதால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

# வவுனியா விபுலானந்தாக் கல்லூரிக்கு மைதானம் அமைக்க உதவுங்கள்

### *கல்லூரி அதிபர் நிறுவனங்களிடம் கோரிக்கை*

வவுனியா, டிசெ.18

வவுனியா விபுலானந்தாக் கல்லூரிக்கென விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்து உதவுமாறு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கல்லூரி அதிபர் வே.இந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

வவுனியா விபுலானந்தாக் கல்லூரி கல்வியில் பல சாதனைகளைப் படைத்து வருகின்றது. கடந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் சிறந்த பெறுபேறுகள் கிடைத்துள் ளன. இந்தக் கல்லூரியிலி ருந்து பல மாணவர்கள் பல் கலைக்கழகத்துக்கும் தெரிவா கின்றனர். ஆனால் இந்தப் பாடசாலையில் விளையாட்டு மைதானம் இல்லாததால் கடந்த பல வருடங்களாக வரு டாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இடம் பெறுவதில்லை. இணைப் பாடவிதானச் செயற்பாடான விளையாட்டுத் துறையில் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் தமது திறமையை வெளிப்படுத்துவதற்குத் தேவையான விளையாட்டு மைதானம் இல்லாமை ஒரு குறைபாடாகக் காணப்படுகின்றது- என்றார்.

> "–"
>
> **இதுவரை எந்தவொரு நிறுவனமோ, தனிப்பட்ட நபர்களோ இதனைக் கவனத்தில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லையென அவர் கவலை தெரிவித்துள்ளார்.**

மேலும் இது தொடர்பாக கல்லூரி அதிபர் கல்லூரியில் இடம் பெறும் விழாக்களில் சுட்டிக் காட்டி வருகிறார். ஆனால் இதுவரை எந்தவொரு நிறுவனமோ, தனிப்பட்ட நபர்களோ இதனைக் கவனத்தில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லையென அவர் கவலை தெரிவித்துள்ளார். பாடசாலைக்கு அருகில் பொருத்தமான சமதளத்தைக் கொண்ட மைதானமொன்றை அமைத்து உதவுமாறு அவர் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-402)

## வவுனியா மரக்காரம்பளையில் கசிப்பு வியாபாரம் அமோகம்



வவுனியா, டிசெ.18

வவுனியா மரக்காரம்பளைப் பகுதியில் கசிப்பு விற்பனை அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பம்மைமடுப் பகுதியில் இருந்து சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் வரும் நபர்கள் மரக்காரம்பளை மீன்சந்தை, சந்திப்பகுதி, முன்னைய தவறணைப் பகுதி, சாராயக்கடை ஆகிய இடங்களில் பொலித்தீனில் அடைக்கப்பட்ட கசிப்பை விநியோகம் செய்து வருகின்றனர். இதனைப் பலரும் வாங்கி அருந்துகின்றனர். இவர்களால் குடும்பங்களில் தகராறுகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கசிப்பு வியாபாரம் மாலை வேளைகளில் இடம் பெறுவதாகவும் இந்த ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கசிப்பை அருந்தியதால் போதையேறிய பலர் வீதியில் செல்லும் பொதுமக்களிடம் முரண்படுகின்றனர். இது தொடர்பாக வவுனியா நெளுக்குளம் சனசமூக நிலையத்தினர் இவர்களுடன் உரையாடிய போதிலும் இதுவரை சாதகமான பயன்கள் கிடைக்கவில்லை.

கடந்த புதன்கிழமையும் இத்தகைய மதுப்பிரியர்களின் அட்டகாசமும் இந்தப் பகுதியில் அதிகரித்துக் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (க-402)

# வீதிப் புனரமைப்பு பூர்த்தியாகாததால் மக்களுக்கு போக்குவரத்து இடர்கள்

பூநகரி, டிசெ.18

பூநகரி வீதியொன்றின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தி யாக்கப்படாது அரைகுறையான நிலையில் காணப்படுவதால் சில கிராமங்களைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பூநகரி முக்கொம்பன் பகுதிக்கும், 10 ஆம் கட்டைக்கும் இடையிலான வீதிப் புனரமைப்பு பூர்த்தியாகாததால் முக்கொம்பன், ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம், அக்கராயன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

2010 ஆம் ஆண்டு இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் இதுவரை பூர்த்தியாக்கப்படவில்லை. இதன் காரணமாகவே யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி வழியாக அக்கராயன் வரை பயணிக்கும் இ.போ.ச. பஸ் சேவை இடம் பெறாத நிலையும் காணப்படுகின்றது.

இந்த வீதியால் பயணித்த பஸ் ஒன்று புதையுண்டு இரு நாள்கள் கடந்தும் வெளியில் எடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

மேலும் இந்த வீதி புனரமைக்கப்படாததால் பூநகரி மருத்துவமனை, பிரதேச செயலகம் ஆகிய இடங்களுக்குச் செல்வதில் மக்கள் இடர்களை மேற்கொண்டுள்ளனர்.

பூநகரி பிரதேச செயலக பிரிவில் போக்குவரத்து நெருக்கடி அதிகளவில் உள்ள நிலையில் இந்த வீதியின் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்ட ஒப்பந்தகாரரின் பொறுப்பற்ற செயல் காரணமாகவே இந்த நிலை உருவாகியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-18)

# விவசாயம் மூலம் அதிக வருமானம் ஈட்டுகிறது வவுனியா பாடசாலை

### *கல்வி அதிகாரிகள் பாராட்டு*

விவசாயம் மூலமாக அதிக வருமானம் ஈட்டும் பாடசாலையாக வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயம் திகழ்வதாக கல்வி அதிகாரிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

உழுந்து, மரக்கறி வகைகள், வாழை உட்படப் பல்வேறு பயிர்களைப் பயிரிடுவதன் மூலமாக பாடசாலைக்கு வருமானம் ஈட்டிக் கொடுப்பதில் பாடசாலை நிர்வாகம் அக்கறையுடன் செயற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. முன்னாள் அதிபர் தொடக்கம் தற்போதைய அதிபர் வரை இந்தச் செயற்பாட்டில் திறமையாக ஈடுபடுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சில பாடசாலைகளின் வளங்கள் உரிய வகையில் பயன்படுத்தப்படாத நிலையில் இந்தப் பாடசாலை விவசாயத்தை மேற்கொள்வதில் முன் மாதிரியாகத் திகழ்வதுடன் கற்றல் நடவடிக்கையிலும் வளர்ச்சி கண்டு வருகின்றமைக்கு கல்வி அதிகாரிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க-402)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனநாயகம் ஊறுகள் இன்றி மேலெழுவதற்குத் தடுப்பு வேண்டாமே...

ஜனநாயகத்தின் அடையாளச் சின்னமான தேர்தல், எமது நாட்டில் பதவியில் உள்ள அரசால், தனது பக்கத்துக்கு வெற்றியை அள்ளிக் கொடுக்கும் வகையில் இட்டுக் கட்டப்படுகிறது. கடந்த இரண்டு தசாப்தங்களாக, ஜனநாயகத்துக்கு பெரியளவில் ஊறு செய்யும் விதத்தில், ஒவ்வாத இந்தச் செயற்பாடு முன்னர் பதவியில் இருந்த அரசுகளாலும், இப்போதைய அரசாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது–

மக்கள் ஆட்சியின் மகிமையையும், பெறுமானத்தையும் துவம்சம் செய்வதற்கு ஒப்பான இந்தச் செயற்பாடு, குறிப்பாக மாகாண சபைகளுக்கான தேர்தல்களை இடைவெளிகள் விட்டு நடத்துவதால், ஆட்சியில் உள்ள அரசியல் கட்சிகள் வாக்காளர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் தன்மை அதிகரித்து வருகிறது–

அது மட்டுமன்றி, தேர்தல்களை வெவ்வேறு கால இடைவெளிகளில் நடத்துவதால் நாட்டின் நிதி வளமும் ஏனைய வளங்களும் வீணடிக்கப்படுகின்றன–

இவ்வாறு பொறுப்புடன் சுட்டிக்காட்டி உள்ளார் "பவ்ரல்" தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோகண ஹெட்டியாராய்ச்சி.

தேர்தல் ஒழுங்கான முறையில் நடத்தப்பட வேண்டும் என்பது ஜனநாயகப் பண்புகளில் ஒன்றாகும். மிகப் பிரதானமானதும் அதுவே. தென்னிலங்கையின் சில மாகாண சபைகளுக்கான அடுத்த தேர்தல் 2014 ஆம் ஆண்டில் நடத்தப்பட வேண்டியவை. அவற்றை ஒரே காலத்தில் நடத்தாமல் வெவ்வேறு கால இடைவெளிகளில் நடத்த முனைவது, முடிவு செய்வது முற்றிலும் பொருத்தமற்ற ஒன்றே.

தேர்தல்களை இடைவெளிவிட்டு அடிக்கடி நடத்துவதால், அரசியல் கட்சிகள் தம்மை முழு அளவில் தயார்ப்படுத்துவதற்குப் போதிய அவகாசம் இல்லாமல் போய் விடுகிறது. அதுவும், மிக அநேகமாக ஆளும் தரப்பு வெல்வதற்கு வழி செய்வதாக அமைகிறது.

மேலும், தேர்தல் பரப்புரைகளின் போது, அரசாங்கத்தின் வளங்கள் இலங்கையில் அதிகமாகப் பயன்படுத்தப்படுவது குறித்து, பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தமது அறிக்கையில் மிகக் காட்டமாகக் குறிப்பிட்டிருந்தமையும் கருத்திலும் கவனத்திலும் கொள்ளப்பட வேண்டியதாகும். அதனைத் தடுப்பதற்கான சட்ட விதிகள் போதுமானவை அல்ல என்றும் அந்த அமைப்புச் 'சிவப்புக் கோடு' கீறியிருந்தது.

இலங்கையின் அரசமைப்புக்கான பதினேழாவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை போன்று, சுதந்திரமான தேர்தல் ஆணையகம் ஒன்றை நிறுவுவதில் காட்டப்படும் காலதாமதம், அடுத்த பொதுத் தேர்தல் (2016) வரையும் நீடிக்குமோ என்ற சந்தேகத்தை உண்டாக்குகிறது.

தேர்தல்களை நடத்துவதில் எமது நாட்டு அரசு காட்டும் அக்கறை வரவேற்கக் கூடியதே. எனினும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பாளர்களின் பரிந்துரைகளை கவனத்தில் கொண்டு, அவற்றை நடைமுறைப் படுத்திச் சீராக்குவதற்கு தயங்குவது, காலம் தாழ்த்துவது பல சந்தேகங்களை எழுப்புகிறது.

குறிப்பாக, பொதுநலவாயத்தின் தலைமைப் பதவியை இலங்கை ஏற்றுள்ள இந்த வேளையிலாவது, எமது நாட்டு ஆட்சியாளர்கள் இதனைக் கருத்தில் கொள்ளக் கூடாதா? அதற்கும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டுமா?

ஒரே காலத்தில் நடத்த வேண்டிய தேர்தல்களை, வெட்டிப் பிரித்துத் துண்டு துண்டாக்கி, அரச தரப்பே வெல்வதற்கு வாய்ப்பாடு எழுதி, மக்கள் தமது பக்கமே உள்ளார்கள் என்று காண்பிக்கும் தந்திரம்–தந்திரோபாயம்–தொடர்வதற்கு இடமளிக்கலாமா? அதனை எந்த வகை ஜனநாயகம் என்று வகுத்துக் கொள்வது...?

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைமைத்துவத்தை ஏற்ற பின்னர், தாய்லாந்தில் (அந்த நாட்டின் அரசுக்கு எதிராக) நடைபெற்றுவரும் கலவரங்களுக்கு முடிவு கட்டும் முயற்சிக்கு இலங்கை அரசு உதவ முன்வந்துள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

கலவரங்கள் பெரும் வீச்சில் நடைபெற்றதைத் தொடர்ந்து அந்நாட்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது.

ஏனைய நாடுகளில் ஜனநாயகம் முறிந்துவிடாமல் தடுப்பதில் காட்டும் அக்கறையை, எங்கள் நாட்டு விவகாரங்களிலும், மஹிந்த அரசு காட்ட வேண்டும்.

ஊருக்கடி உபதேசம், உனக்கல்லடி என்ற நிலை ஆகாது–

இலங்கையில் ஜனநாயகம் ஊறுகள் எதுவும் இன்றி ஓங்கி உயர்வதற்கு ஒளிக்கீற்று மெதுவாக வேனும் எழுமா? அது எப்போது...?

# தன்னிலை இழக்கும் இலங்கை

கந்தவனம் கோணேஸ்வரன்.

மனித உரிமைகள் தினத்தன்று காணாமற்போன தங்கள் உறவுகளை மீட்டுத்தருமாறு கோரித் தமது எண்ணங் களை அமைதியான முறையில் வெளிப்ப டுத்திய தமிழ் மக்கள் திருகோணமலையில் காடையர்களால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இது இலங்கையின் மனித உரிமைகள் பேணும் நடவடிக்கைக்கு ஒரு சரியான சாட்சியமாகும். அமைதியான முறை யில் போராடிய மக்களை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் அளவுக்கு தமிழர் தலைநகரம் என வர்ணிக்கப்படும் திருகோண மலையில் தாக்குதல் நிகழ்ந்திருக்கிறதெனில் அரசின் கையாலாகாத்தனத்தை எண்ணிக் கவலைப்படுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? தங்கள் பிள்ளைகளைக் காணவில்லை என்று பொது இடத்தில் கூடிநின்று முறையிடுவதற்கான உரிமைகூடத் தமிழ் மக்களுக்கு மறுக்கப் பட்டிருக்கின்றது என்பதன் வெளிப்பாடுதான் இச்சம்பவம்.

### சொந்த மக்களையே தாக்கும் காடைத்தனம்

அரசு, தனது நாட்டு மக்களின் மேல் கோபப்பட முடியும் என்பதும், படைத்தரப்பு ஆத்திரம் மேலிட்டால் பொதுமக்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் என்பதும் ஒரு புதுமையான விடயமாகவே படுகிறது. ஓர் அரசுக்கு எதிராக இன்னோர் அரசு ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்புண்டு. அதேபோல், ஒரு நாட்டு இராணுவத்துக்குப் பிறிதோர் நாட்டு இராணுவத்தால் ஆத்திரமூட்ட முடியும் என்பதும் ஏற்றுக்கொள்ளத்தக்கது. ஆனால், படைத் தரப்பொன்று தன்னாட்டு மக்களின் ஜனநாயகப் போராட்டத்தால் ஆத்திரமூட்டப்படுகிறது என்பது இலங்கையில் மட்டும்தான் இடம்பெறக்கூடிய அதிசய சங்கதி.

எந்தச் சந்தர்ப்பத்திலும் மக்கள் மேல் சொந்தநாட்டு இராணுவம் ஆத்திரமடைவதற்கு எந்த நியாயமும் இருக்க முடியாது. இராணுவத்தளபதி தொடக்கம் சிப்பாய் வரை அந்த மக்களின் உழைப்பின்மூலம் கிடைக்கும் வரிப்பணத்திலிருந்து தான் சம்பளம் பெறுகிறார்கள். ஆபத்துக் காலங்களில் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பாதுகாப்பாளர்களாக இருந்து அந்த மக்களின் உயிர்கள், உடைமைகள், உழைப்புகள் வீண்போகா வண்ணம் பாதுகாப்பது ஒன்றுதான் படைத்தரப்பின் ஆக்கபூர்வமான கடமை.

இராணுவம் மக்கள்மேல் கோபப்படலாமெனில், பாடசாலை அதிபர்கள் கோபப்படலாம்; தபாலதிபர்கள் கோபப்படலாம்; மருத்துவர்கள், ரயில்வே ஊழியர்கள் என்று எவர் வேண்டுமானாலும் மக்கள்மேல் கோபப்படலாம் என்ற நிலை தோன்றிவிடும். மக்களின் ஆணைகளுடாகப் பெற்ற கடமைகளை நிறைவேற்றுவதற்காகத்தான் அரசும், அரச நிர்வாகமும், படைத்தரப்பும் இருக்கின்றனவேயொழிய மக்கள்மேல் ஆத்திரப்படுவதற்கல்ல.

காடையர்களை அடக்க வேண்டியது அரசின் பொறுப்பு. காடையர்கள் அட்டகாசம் புரிகின்ற வேளைகளில் பொலிஸாரோ, இராணுவத்தினரோ கைகட்டி வேடிக்கை பார்ப்பதை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். உணர்வுகளுக்கும், ஆத்திரமூட் டல்களுக்கும் உட்பட்டு கட்டுப்பாடுகளை மீறி அடுத்தவர்களுக்கு துன்பம் விளைவிக்கும் காடையர்களைச் சட்டத்தின் வழி நின்று ஒடுக்க வேண்டிய அரசும், அரசின் ஆணையை நிறை வேற்ற வேண்டிய படைத்தரப்பும் அதிரடியாகவேனும் அவர்களை அடக்கி மக்களைப் பாதுகாக்க வேண்டும். இது அரசினதும், படைத்தரப்பினதும் கட்டாயக் கடமை.

படைத்தரப்பை மீறிய ஒரு சம்பவமோ, அரசை மீறிய ஒரு செயற்பாடோ ஒரு நாட்டில் இடம்பெறுமானால் அந்த நாட்டரசு பலவீனமடைந்திருக்கிறது என்பதுதான் அர்த்தம்.

### இனக்கலவரங்களை உருவாக்கியது அரசே

1956இல் தனிச்சிங்களச் சட்டத்தை பிரதமர் பண்டாரநாயக்கா நடைமுறைப்படுத்தியபோது அன்று தமிழ் மக்கள் கொதித்தெழுந்தனர். நாட்டு மக்கள் ஒருசாராரின் கொதிப்பை உணராத அவர் குமுறிய மக்கள்மேல் கோபப்பட்டார். அவர்வழியே இயங்கிய படைத்தரப்பும் கோபப்பட்டது. காடையர்கள் செயலில் இறங்கினார்கள். இனக்கலவரம் ஆரம்பித்தது.

1983இல் தமிழ்மக்களின் செயற்பாடுகளின் தாற்பரியத்தையும், நியாயத்தையும் புரிந்துகொள்ள மறுத்த ஜே. ஆர்.ஜயவர்த்தன 'போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்' என நிதானமிழந்து தமிழ்மக்கள்மேல் ஆத்திரப்பட்டார். ஆத்திரத்தை வார்த்தைகளில் கொட்டினார். படைத்தரப்பும் அவர்வழியே செயற்பட்டது. வாய்ப்பைப் பயன்படுத்தி காடையர்களும் களத்தில் இறங்கினார்கள். இரண்டாவது பெரும் இனக்கலவரம் இலங்கையில் நிகழ்ந்து முடிந்தது. உலக நாடுகளின் மத்தியில் இலங்கை காடையர்பூமி எனப் பெயரெடுத்தது.

இன்றைய ஜனாதிபதி தமிழ் மக்களின் போராட்டங்களால் ஆத்திரமூட்டப்பட்டார். அவர் நிதானமிழந்ததால் போர் வலுத்தது; முள்ளிவாய்க்கால் அவலம் நிகழ்ந்தது. இலங்கை உலகநாடுகளின்முன் தலை கவிழ்ந்து நிற்க நேரிட்டது.

இந்த நிலைமைக்குக் காரணம் அந்தந்த வேளைய ஆட்சியாளர்களும், படைத்தரப்பும் சட்டத்தின்வழி நின்று செயற்படுவதை விடுத்து ஆத்திரத்தின் வழி நின்று செயற்பட்டமைதான். தமிழர்களும் முஸ்லிம்களும் இந்நாட்டுக் குடிமக்களே. அவர்கள் விடயத்தில் சட்டப் படித்தான் செயலாற்ற வேண்டும் என்று அரசு எண்ணியிருந்தால் யுத்தம் ஏற்பட்டிராது. இந்த ஜனாதிபதியின் ஆட்சிகாலத்திலேயே சமாதானத்தை நிலைநிறுத்தியிருக்க முடியும். அதற்கான அரசியல்பலம் அவரிடம் தாராளமாக இருக்கிறது. சமாதானம் நிலவுகிறது என்று இப்போது அரசு மாத்திரமே சொல்லிக் கொண்டிருக்கும் நிலைமை போலல்லாமல், சகல மக்களும் ஒருவருக்கொருவர் சமம் என்ற எண்ணத்துடன் இலங்கையர் அனைவரும் சமாதானமாகவே செயற்படும் நிலைமை தோன்றியிருக்கும்.

ஆனால் அரசு அதை விரும்பவில்லை. சிங்கள மக்களின் வாக்குகளில் கண் வைத்தே அதன் செயற்பாடுகள் அமைந்து வருகின்றன. தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டுவிட்டதாக சிங்கள மக்கள் நம்பவேண் டும்; தமிழ்மக்கள் தாங்கள் துன்பப்படுத்தப்படுகிறோம் என்பதை வெளியில் சொல்ல முடியாத சூழ்நிலைக் கைதிகளாக இருக்க வேண்டும். இவற்றை அனுசரித்து இலங்கையில் சமாதானம் நிலவுவதாக உலகை நம்பவைக்க வேண்டும் என்ற தந்திரத்துடன்தான் அரசு தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறது.

உண்மையில் தமிழர்களை ஆத்திரமூட்டுகின்ற செயல்களில்தான் அரசதரப்பினர் அறுபதாண்டு காலமாக ஈடுபட்டு வருகின்றனர். இன்றுங்கூட வடமாகாண சபையின் இயல்பான இயக்கத்துக்கு முட்டுக்கட்டை போடவே அவர்கள் விரும்புகிறார்கள். பொது பலசேனா போன்ற இனவாத சக்திகளை அரவணைத்து முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்களை ஊக்கப்படுத்துகிறார்கள்.

### ஆபத்தில் சிக்கித் தவிக்கும் இலங்கை அரசு

அரசும் படைத்தரப்பும் தமிழர்கள்மேல் ஆத்திரங்கொண்டு செயற்பட்டதால்தான் நெறிமுறையற்ற மிகப்பெரிய மனித அவலம் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்து முடிந்தது. ஒருஇலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் அரசின் ஆத்திரத்துக்கு இரையாகினர். பலகோடி ரூபா பெறுமதியான தமிழர் சொத்துகள் படைத்தரப்பாரின் ஆத்திரங் காரணமாக அழிவுண்டன. ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம் என்றாற்போல் அரசும் படைகளும் செயற்பட்டதால்தான் இன்று இலங்கை சிக்கலில் மாட்டிக்கொண்டு தவிக்கிறது.

இந்திய விமானங்கள் இலங்கையின் வான்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து உணவுப் பொட்டலங்களைப் போட்ட போது கூட இலங்கையின் இறைமைக்கு ஊறு நேரவுமில்லை; அரச படைகள் ஆத்திரமூட்டப்படவுமில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்காக இலங்கையை நெருக்குதலுக்குள்ளாக்கி, இந்தியப் பிரதமர் இலங்கையில் கால் வைத்தபோது ஒரேயொரு சிப்பாயைத் தவிர ஏனையோர் எவரும் ஆத்திரமூட்டப்படவில்லை.

அண்மையில் இலங்கை வந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கை அரசின் விருப்பத்துக்கு மாறாக, வடபகுதி சென்று அங்குள்ள மக்களுடன் உரையாடியதன் பின் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து காரசாரமான எச்சரிக்கையை விடுத்தபோதும்கூட அது இலங்கை அரசுக்கு ஆத்திரமூட்டும் நடவடிக்கையாகத் தென்படவில்லை. வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவர் ஆனையிறவில் வைத்து போரில் உயிர்நீத்த உயிர்களுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தியபோதும் அதைப் பார்த்துக் கொண்டிருந்த எந்தப் படைத் தரப்புக்கும் ஆத்திரம் ஏற்படவில்லை.

இலங்கை அரசும் படைகளும் தமிழர்கள் விடயத்தில் அதீதஆத்திரங்கொண்டு செயற்பட்டதால் இன்று வெளிநாட்டுத் தலையீடுகள் மெல்லமெல்ல அதிகரித்து வருகின்றன. பிறநாடுகளின் எச்சரிக்கைகள் இலங்கையை நிலைகுலைய வைத்து வருகின்றன. ஐ.நாவின் மனிதஉரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை அம்மையார், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், இந்திய மத்தியஅமைச்சர் ப.சிதம்பரம், ஐக்கியநாடுகள் சபையின் உள்ளக இடம்பெயர்வாளர்களின் நிலைமை தொடர்பான அறிக்கையிடும் அதிகாரி சலோகா பெயானி ஆகியோரின் எச்சரிக்கைகளாலும் அமெரிக்கா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளின் இலங்கை குறித்த நிலைப்பாட்டாலும் இலங்கை மிகமோசமாகத் தன்னிலை இழந்து கொண்டிருக்கிறது.

கத்தோலிக்க ஆயர்கள் சபையும் இலங்கை அரசுக்கு முதன்முறையாக எச்சரிக்கை விடுத்திருக்கிறது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஆயர்கள் கேட்டிருக்கிறார்கள். இது ஒன்றே உலக நாடுகளின் தலையீட்டிலிருந்து இலங்கையைக் காப்பாற்றும் வழி என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இதே கருத்தை ஐரோப்பிய நாடாளுமன்றமும் தீர்மானம் ஒன்றின் மூலமும் வலியுறுத்தியிருக்கிறது.

இலங்கையின் ஆதரவாளர்களாகச் செயற்பட்டு வந்த ஜப்பானும், சீனாவும் மனிதஉரிமைகள் விடயத்தில் இலங்கைக்கு இப்போது அறிவுரை பகிர தொடங்கியுள்ளன. இவையெல்லாம் இலங்கைக்கான அபாய அறிவிப்புகள் என்பதை அரசு கருத்திற்கொள்ள வேண்டும். புத்திசாலித்தனமற்ற பேச்சுக்களால் இனிமேலும் ஜனாதிபதியும் அவருடைய அமைச்சர்களும் காலங்கடத்த முற்படுவார்களேயானால், அது இலங்கை மக்களை அதலபாதாளத்துக்கு இட்டுச்செல்லும் முயற்சியாகவே அமையும். இலங்கை உலக நாடுகளின் மேல் ஆத்திரப்படுவதா அல்லது பணிந்து செல்வதா என்பதைத் தீர்மானிப்பதற்கான நாள் வெகு தொலைவிலில்லை.

# பெற்றோரிடமிருந்து தொடங்குகிறது குழந்தைகளின் பாதை





குழந்தைகள் விடயத்தில் தவறு செய்யாத பெற்றோர் என்று யாரும் இல்லை. குழந்தைகளைத் திருத்துவதிலும் அவர்களைக் குற்றம் சொல்வதிலும்தான் பெற்றோர் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

குழந்தையின் வாழ்க்கையில் பெற்றோரின் பங்கு மிக முக்கியமானது. குழந்தைக்கு வெறும் தாய் தந்தையராக மட்டும் இல்லாமல் அந்த குழந்தையின் எதிர்காலத்தை வடிமைக்கும் சிறந்த பணியையும் பொறுப்பையும் கொண்டவர்கள்தான் பெற்றோர் ..!

சிறந்த பெற்றோருக்கு உரிய இலக்கணம் ஆளுக்கு ஆள் மாறுபடலாம். ஆனால் உங்களுக்கென ஒரு தனிப் பாணியில் நீங்கள் செயல்படவேண்டியது முக்கியம்.

ஒரு சிறந்த பெற்றோராக இருப்பவர்கள் தங்கள் குழந்தைகளின் பிடித்தமான நடவடிக்கைகள், கனவுகள், அச்சம் போன்றவற்றைத் தெரிந்து வைதிருக்க வேண்டும்.

குழந்தைகள் விடயதத்தில் தவறு செய்யாத பெற்றோர் என்று யாரும் இல்லை. குழந்தைகளைத் திருத்துவதிலும் அவர்களைக் குற்றம் சொல்வதிலும்தான் பெற்றோர் அதிக கவனம் செலுத்துகின்றனர். குழந்தைகளின் தவறுகளில் இருந்து பெற்றோர் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். குழந்தைகளின் பிறப்பிடம் மட்டுமல்ல , சில நேரங்களில் குழந்தைகள் செய்யும் தவறுகளின் பிறப்பிடமாகவும் பெற்றோர் இருக்கிறார்கள். இதை புரிந்துகொள்ளும் போதுதான், குழந்தைகளைச் சரியாக வழிநடத்தமுடியும்.

பெற்றோர் தங்கள் பல்வேறு பணிகளுக்கு இடையில் குழந்தை களுக்கென நேரம் ஒதுக்குவதிலும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அலுவ லக வேலை நேரம் போக குடும்ப நலன், குழந்தைகளின் தனித்திறன் போன்ற விட யங்களிலும் அதிக கவனம் செலுத்தினால்தான் குழந்தைகளின் மன ஓட்டத்துக்கேற்ப அவர்களை வழி நடத்த முடியும்.

குழந்தைகளின் கல்வி, பள்ளி மற்றும் கல்லூரி நண்பர்கள் பற்றய அக்கறை எடுத்துக் கொள்வதோடு, அவர்களின் வெளி வட்டார பழக்கவழக்கங்களிலும் கவனம் செலுத்தி அவர்கள் திசை மாறாமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் பெற்றோருக்கு இருக்கிறது. எதையும் அறிவுரையாகச் சொல்லாமல், அவர்களை ஒத்த வயதுடைய தோழனாக, தோழியாக, பெற்றோர் இருந்து கருத்துக்களையும் ஆலோசனைகளையும் சொன்னால்.. குழந்தைகள் நிச்சயம் புரிந்துகொள்வார்கள்.

குழந்தகளுடன் நீங்கள் எவ்வளவு அதிகமான நேரம்செலவிடுகிறீர்களோ அவ்வளவு அதிகமாக அவர்களை உங்களால் புரிந்துகொள்ள முடியும். எனவே உங்கள் குழந்தைகளோடு அதிக நேரம்செல விடுங்கள். அவர்களுக்கான பாதை உங்களிடம் இருந்துதான் தொடங்குகிறது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்..!

# உங்களை உயர்த்தும் உணர்வுகள்

மனதில் எழுகின்ற உணர்வுகள் என்றாலே முதலில் எமது நினைவுக்கு வருபவை. நமக்கு நன்கு தெரிந்த சராசரி உணர்வுகள்தான். கோபம், அச்சம், சந்தோஷம், பதற்றம், பிரியம் போன்றவற்றையே அதிகம் அனுபவித்திருக்கிறோம்.

இவை மட்டுமில்லாமல், நம்மை உயர்த்தக்கூடிய உன்னதமான உணர்வுகள் நம்மில் அவ்வப்போது எழுகின்றன. அவற்றின் அருமை புரியாமல் கோட்டை விட்டு விடுவதால், அந்த நுட்பமான உணர்வுகளை நாம் வளர்த்தெடுப்பதில்லை. அவை நாம் வளர்க்க வேண்டிய உணர்வுகள் மட்டுமல்ல. நம்மை வளர்க்கக் கூடிய உணர்வுகளும் கூட

**பரவசம்**

இந்த நிலைக்கு எம்மில் பலரும் அடிக்கடி ஆட்படுகிறோம். மனதுக்குள் ஆயிரம் மலர்கள் மலர்ந்து, மேனிசிலிர்க்க, கண்கள் நிறைந்து பொங்கும் ஆனந்தத்தில், புதிய உணர்வைப் பெறுவது நமக்கு அடிக்கடி நிகழ்வதுதான்.

தொலைக்காட்சி பார்க்கிறீர்கள். சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் யாரோ ஒரு குழந்தை பாடிப் பாராட்டைப் பெறுகிறது. பார்த்துக்கொண்டிருக்கிற உங்களுக்குக் கண்கள் நிறைகின்றன. சிலிர்ப்பு எழுகிறது என்றால் இது மிக நல்ல விடயம். நல்ல அதிர்வுகள் எங்கே இருந்தாலும், அவற்றைப் பெறுகிற விதமாய் உங்கள் உள்ளம் பக்குவப் பட்டிருக்கிறது.

இந்தக் குணம் வளர்ந்தால் நல்ல விடயங்கள் உங்களை ஈர்க்கத் தொடங்கும்.

ஆனால், எம்மில் பலர், பிறர்முன் ஆனந்தத்தில் கண்ணீர் சிந்துவதையே கூச்சத்துக்குரிய விடயமாய் நினைத்து உணர்வுகளை வெளிப்படுத்தத் தயங்குகிறோம். இது பூமியைக் கீறி வெளிவரும் முளையைப் பலவந்தமாக் உள்ளே அழுத்துவது போலத்தான்.

பரவசத்தை உணருங்கள். உணர்த்துங்கள். பரவசமான அனுபவங்களைத் தொடர்ந்து பெறுவீர்கள்.

**ஈடுபாடு**

உங்களுக்கு ஈடுபாடு இருக்கிற விடயங்களுக்காக எவ்வளவு நேரம் ஒதுக்குகிறீர்கள் என்று உங்களை நீங்களே கேளுங்கள். இசை உங்களுக்குப் பிடிக்கும் என்று வைத்துக் கொண்டால், முன்பெல்லாம் நல்ல இசை நிகழ்வுகளைப் பாடல்களை ரசிப்பேன், இப்போது இதற்கெல்லாம் நேரமே இருப்பதில்லை என்று ஆதங்கத்தோடு நினைக்கிறீர்களா? உடனே உங்கள் இசைத் தொடர்பைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

எதில் உங்களுக்கு ஈடுபாடு இருக்கிறதோ, அதுதான் உங்கள் எல்லைகள் தாண்டி உங்களை வளர்க்கப் போகிறது. இவ்வளவுதான் நீங்கள் என்று நீங்கள் பொதுவாகவே ஓர் எல்லையை வைத்திருப்பீர்கள். ஆனால் அந்த எல்லையையும் தாண்டி உங்கள் திறமை, ரசிப்புத் தன்மை, கற்பனை ஆகியவை வளர்வது எப்போது தெரியுமா? உங்களுக்கு ஈடுபாடுள்ள துறையில் நீங்கள் ஆர்வமுடன் பங்கேற்கின்ற போதுதான்!! உங்கள் ஆர்வம் உரிய முறையில் வெளிப்படும் போதெல்லாம்நீங்கள் உயர்கிறீர்கள்.

எத்தனையோ சம்பவங்களின் கண்ணிகளால் இணைக்கப்பட்டிருக்கிறது நம்முடைய வாழ்வு. ஒரு கண்ணி அறுந்தாலும் உயர்வுகள் சாத்தியமில்லை. இந்த நன்றியுணர்வு யாருக்குப் பெருகுகிறதோ, அவர்கள் முயலும் காரியங்கள் எளிதில் நடந்தேறி விடுகின்றன.



**நன்றியுணர்வு**

ஒரு மனிதனுக்குள் இருக்கும் தெய்வீகக் குணத்தை வெளிப்படுத்த வல்லது நன்றியுணர்வுதான். சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் நாம் நன்றி சொல்வது நம்மை உயர்த்திக் கொள்வதற்கு அல்ல.

எமது நலனுக்குத் தெரிந்தும் தெரியாமலும்எவ்வளவு பேர் துணை செய் கிறார்கள் என்பதை உணர்கிற போதெல்லாம் நாம் மேலும் பலம் பொருந்தியவர்கள் ஆகிறோம்.

ALUMNI ASSOCIATION
JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

CONGRATULATIONS!

Tele:-0213206542 E-mail:-jatialumni@

HNDA



திருமதி. அஜந்தா இராஜதுரை | செல்வி. அகிலானந்தி மாணிக்கவாசகர் | செல்வி. அமிர்தநிவாஷினி சிவராஜதேவா | செல்வி. அனுசியா தர்மராசா | திருமதி. அனுசூயா இராஜேஸ்வரன் | திரு. அருமைராசா கோகிலன் | செல்வி. பவனுஷா தர்மகுலசிங்கம் | செல்வி. பிருந்தா லோகநாதன் | செல்வி. கா... இராஜேந்...



செல்வி. ஜெனித்தா தங்கராஜா | திரு. ஜெயந்திரன் நிசாந்தன் | செல்வி. ஜெயரஞ்சினி இரத்தினராஜா | திரு. கைலாசதுரை ரமணகரன் | செல்வி. கஜிதா செல்லக்கதிர்காமு | செல்வி. கல்பனா பாலசுப்பிரமணியம் | செல்வி. கல்யாணி சோதிரூபன் | திரு. கந்தசாமி நிஷாந்தன் | செல்வி. காந்திகா செல்வராஜா | செல்வி. கார்த்திகா சோதிராசா



திரு. முத்துமாணிக்கம் நிமலேந்திரன் | திரு. நாகேந்திரம் சிவரூபன் | திரு. நல்லமுத்து ரமேஷ் | செல்வி. நிரஞ்சனா லிங்கரட்ணம் | செல்வி. நிரைஞ்ஜினி இராஜதுரை | செல்வி. நிரோஜினி செல்வரத்தினம் | செல்வி. நிசானி சரவணபவன் | திரு. கூபசிறி நிஷாந்த கமல்சிறி | திரு. பத்மநாதன் விஜூஷியன் | திருமதி. பிரகாசினி தனபாலசிங்கம்



செல்வி. சங்கீதா செல்வம் | திரு. சந்திரலிங்கம் சுவர்ணன் | செல்வி. சாருஜா ரங்கராஜா | திரு. செல்வராசா சசிகரன் | திரு. செல்வராசா சிவகுமார் | திரு. செல்வரத்தினம் சுமணதாஸ் | செல்வி. செல்வவதி செயகுமாரலிங்கம் | திரு. சந்திரன் தனேந்திரன் | திரு. சண்முகநாதன் பிரதாபன் | செல்வி. சர்மிலா கனகநாயகம்



செல்வி. சௌமியவாணி ஜெகதீஸ்வரன் | திரு.ஸ்ரீகந்தராசா ஷலமோன்ராஜா | செல்வி. ஸ்ரீரேகா செல்லத்துரை | திரு. சிறிஸ்கந்தராஜா ரூபாகரன் | திரு. ஸ்ரீஸ்கந்தராசா கோகுலன் | செல்வி. சுகந்தினி சுந்தரலிங்கம் | செல்வி. சுகந்தி ரவீந்திரன் | செல்வி. சுகன்யா இராமநாதன் | செல்வி. சுமனா இரவீந்திரரட்ணம் | செல்வி. சுமணா சுப்பிரமணியம்



திரு. தாசியஸ் வலன்ரைன் அனஸ்ரன் | செல்வி. தயாளினி கணபதிப்பிள்ளை | செல்வி. துர்க்கா இராசலிங்கம் | செல்வி. வலன்ரீனா நஞ்சினி யோசப் செல்வராஜா | செல்வி. வர்சினி பத்மநாதன் | திரு. வீரசிங்கம் தர்சன் | திரு. விக்ரர் றொபேட்சன் செஸ்ரர் ஜோண்சன் | திரு. விஜயரத்தினம் சுதாகரன் | செல்வி. விஜித்தா துரைசிங்கம் | திரு. வில்வமூர்த்தி சிரஞ்சீவி



திரு. பாலச்சந்திரன் துஷ்யந்த் | செல்வி. ஜேன் நிரோஜினி மரியதாஸ் | செல்வி. கோகிலவதனி கணேசலிங்கம் | திரு. மகேந்திரன் ஜெயமிதுன் | திரு. மனுவேல் மக்ஸ்வெல் றொபின்சன் | செல்வி. மேரி ஜெஸ்மினா இலங்கைநாதன் | செல்வி. மதனா ஞானச்சந்திரன் | செல்வி. மதுரா செல்வராசா | செல்வி. நர்மதா ஜெகநாதன் | செல்வி. நதியா நவரட்ணம்

HNDIT



திரு. உதயகுமார் தனுஷ்சாந் | திரு. விக்னேஸ்வரன் தயாபரன் | திரு. காரிளசிங்கம் விக்னேஸ்வரன் | திரு. செல்வராசா பிரபாகரன் | திரு. அரசநாயகம் ஜெயகாந் | திரு. விஜயராஜா இரவீந்தர் | திரு. ஜோசப் ராஜரட்ணம் டானியல் நிதர்ஷன் | திரு. பி.கு. ஜேம்ஸ் பஸ்ரியன் | திரு. குழந்தைவேல் சசிகரன்



செல்வி. துஷ்யந்தி கந்தராஜா | செல்வி. யசோதினி பத்மநாதன் | HNDBS | செல்வி. அனுசியா அரியசீலன் | செல்வி. காருண்யா சர்வேந்திரன்



செல்வி. அஜனா சுந்தரலிங்கம் | திரு. பாலசிங்கம் காண்டீபன் | திருமதி. பாமினி பிரதீபன் | திருமதி. டைமன் சுனேத்திரா றொட்னு சில்வெஸ்ரர் | திருமதி. சுஜனி பிரதீபன்

ALUMNI ASSOCIATION

இன்று ( 18.12.2013 ) புதன்கிழமை
மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்
நிறுவன 10 வது பட்டமளிப்பு வைபவ
HNDE, HNDBS பட்டம் பெறும் யாழ்
பழைய மாணவர் சங்க அங்கத்துவ மா
மாணவர்களையும் மேலும் பல பட்டங்கள்

TIONS!

# ALUMNI ASSOCIATION

## JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE

## No.665/2, BEACH ROAD, JAFFNA

**...mni@gmail.com Website:-www.jatialumni.org**

SLIATE



செல்வி. காயத்திரி இராஜேந்திரன் | செல்வி. கோபிகா இராசநாயகம் | செல்வி. கௌரிகா வரோதயன் | செல்வி. கௌசிகா சபாரட்ணம் | செல்வி. கௌசிகா மனோகரன் | செல்வி. கௌசிகா செல்வரட்ணம் | செல்வி. கிறேஸ் நிமலதர்சினி வீரசிங்கம் | செல்வி. ஜனனி யோகச்சந்திரன் | செல்வி. ஜெகதீபா இராஜதுரை | செல்வி. ஜெஜனி கருணாம்பிகைபாகன்



...கார்த்திகா ...திராசா | திருமதி. காதிகா இந்திரன் | செல்வி. கீர்த்திகா இராசரட்ணம் | செலவி. கோபினா நாகராசா | செல்வி. தாயினி லோகேஸ்வரன் | செல்வி. லோஜினி விவேகானந்தன் | திரு. மகேந்திரன் பிரதாப் | செல்வி. மேரிஜெனோவா யேசுதாஸ் | செல்வி. மேரி கவீர்சினி மரியநாயகம் | செல்வி. மயூரி தனபாலசிங்கம் | திரு. முருகையா முகுந்தராஜ்



...பிரகாசினி ...லிங்கம் | திரு. பூபாலசிங்கம் கோகிலன் | திரு. பூதத்தம்பி ரஜீவன் | திருமதி. இந்துஷா பிரகாஷ் | திருமதி. பிரியதர்சினி தவயோகம் | செல்வி. புளோரிஸ்டிபா செல்வராசா | திருமதி. ஜீவம் பத்மமாலினி | திரு. இராசலிங்கம் ஜெபகரன் | திரு. இராஜரட்ணம் வசீகரன் | திரு. இராசநாயகம் திரிபாலா | திருமதி. ரேவதி சிவநாதன்



...சர்மிலா ...நாயகம் | செல்வி. சர்மினி அமிர்தலிங்கம் | செல்வி. சிந்துஜா கனகரத்தினம் | திரு. சிதம்பரநாதன் ரங்கதாஸ் | திரு. சிதம்பரப்பிள்ளை ஸ்ரீரகுராம் | திரு. சிதம்பரப்பிள்ளை சுருதிலபன் | திரு. சிவகுமார் ராஜ்குமார் | திரு. சிவகுரு சுபதீபன் | செல்வி. சிவதர்சினி தியாகராஜக்குருக்கள் | செல்வி. சோபிகா ஸ்ரீஜீவா | திரு. சோதிலிங்கம் உருத்திரகுமரன்



...கமலா ...ணியம் | செல்வி. சுதர்ஷினி தங்கராசா | திரு. தங்கவடிவேல் கீதாரமணன் | திரு. தாசீயஸ்தேவராசா ஜெயடினேஸ் | திரு. தர்மராசா கிருஷ்ணராஜா | செல்வி. தர்ஷலா தயாளந்தம் | செல்வி. தர்சினி மகேஸ்வரன் | செல்வி. தர்சினி சுந்தரம்பிள்ளை | செல்வி. தர்சினி தம்பிராஜா | திருமதி. தர்சிகா குணரட்ணம் | செல்வி. தர்சினி குணரட்ணம்



...லமூர்த்தி ...சீவி | திரு. விநாயகமூர்த்தி கருணதாசன் | செல்வி. விஜயமனோகரி பசுபதி | செல்வி. விநோதினி கந்தையா | திரு. வில்பிரட் நிரோஜன் | திரு. யோகலிங்கம் சிவசங்கர் | செல்வி. யாழினி செல்லத்துரை | HNDM | செல்வி. அலன் கிறேசியா ஆரோக்கியராஜா | செல்வி. அபிராமி சின்னத்துரை | திரு. அமிர்தலிங்கம் மதன்ராஜ்



...நதியா ...ரட்ணம் | செல்வி. நிருஷா விக்னராஜா | செல்வி. நிக்ஷலா நாகலிங்கம் | செல்வி. பிரதாயனி இரகுநாதன் | செல்வி. பிரியா சரவணமுத்து | செல்வி. சஜிதா சிவானந்தராசா | செல்வி. சரண்யா அருணகிரிநாதன் | செல்வி. ஷாமினி யோகநாதன் | செல்வி. சிந்துஜா ஜெயராஜா | செல்வி. சிவமுினி சிவபாதம் | திரு. தணிகாசலம் பத்மநிகேதன்



...ந்தைவேல் ...கரன் | திரு. சிவரத்தினம் வினேத் | திரு. தனபாலன் சுதர்சன் | செல்வி. மினோபா தர்மலிங்கம் | செல்வி. மேகனவாணி இராஜயோகன் | செல்வி. நித்தியா நித்தியானந்தன் | செல்வி. ரஜிதாங்கினி நாகேந்திரம் | செல்வி. சோபனா பரமானந்தன் | திருமதி. சிவரஞ்ஜினி கபிலன் | செல்வி. சுபாசினி நடராசா | செல்வி. தர்மிலா முருகேசு

...ழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச
...பெறும் இலங்கை உயர் தொழில் நுட்பவியல்
...வைபவத்தில் HNDA, HNDM, HNDIT,
... யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன
...வ மாணவர்களையும், பட்டம் பெறும் ஏனைய
...டங்கள் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

SLIATE



செல்வி. கிரிஜா இரகுநாதன் | செல்வி. நிருஜா செல்வராசா | செல்வி. ஸ்ரெபிகிரவ் ஜேசுதாசன் | செல்வி. தர்சிகா இரத்தினம்

HNDE



செல்வி. ஜெனிதா ஜெயரத்தினம் | செல்வி. பிரியராஜனி சிவஞானம் | திரு. இராசையா ஸ்ரீதான் | செல்வி. சோபிகா சூரியகுமாரன் | செல்வி. ஸ்ரீவிக்னேஸ்வரி கணபதிப்பிள்ளை

(C 10304)(10.6.3)

**மேடம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறு வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் ஏற்படும்.

**இடபம்:** மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டு மென நினைப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக் கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படு வீர்கள்.

**மிதுனம்:** வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறை வேற்றுவீர்கள்.

**கடகம்** : வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரி யமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தி யோகத்தில் வேலைச்சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**சிங்கம்**:சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. யாரையும் முழுமையா்க நம்ப வேண்டாம். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**கன்னி:** புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**துலாம்:** வெளிவட்டாரத்தில் கௌரவம் கிட்டும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்களது பலம், பலவீனத்தை உணர் வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**தனுசு:** இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். உத்தி யோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

**மகரம்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனு பவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தி யோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மீனம்:** எவரும் உங்களைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். எவருக்காகவும் சாட்சிக் கையெ முத்திட வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் தலையிட வேண்டாம்.

தருவது வித்தியா

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

# கடமை என்பது என்ன?



விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து


கர்மயோகத்தைப் பற்றி ஆராயும் போது கடமை என்றால் என்ன என்பதை அறிய வேண்டியது அவசியமாகும். நான் எனது கடமை என்ன என்பதைத் தெரிந்து கொண்டால்தான் அதை என் னால் செய்ய முடியும். கடமை என்பது ஒவ்வொரு நாட்டிற்கும் வெவ்வேறாக அமையும். முகம்மதியர்கள் குரானின் என்ன எழுதப் பட்டிருக்கிறதோ அதுதான் தங்களுடைய கடமை என்று கூறுகிறார்கள். வேதத்தில் என்ன சொல்லப்பட் டிருக்கிறதோ அது தான் தங்கள் கடமை என்று இந்துக்கள் சொல்கிறார்கள். கிறிஸ்தவர்கள் பைபி ளில் கூறப்பட்டது தான் தங்களுடைய கடமை என்று கூறுகிறார்கள். அது வாழ்க்கை நிலைக்கும் காலதேச நிலை மைகளுக்கும் ஏற்ப மாறுபடுவதைக் காண்கிறோம்.

உலகம் முழுவதற்கும் பொதுவான கடமைகளை மிக நுட்பமாக உணர்த்தும் ஏனைய சொற்களைப் போலவே கடமை என்னும் சொல்லின் பொருளையும் முழுமையாக எம்மால் உணர்த்த முடி யாது. நடைமுறையில் அந்தக் கடமை யினால் விளையும் பயனைக் கண்டே நாம் கடமையைப் பற்றித் தெரிந்து கொள்கிறோம். சில குறிப்பிட்ட காரி யங்கள் நம்முன் நிகழும்பொழுது, நம்மிடம் இயல்பாகவோ அல்லது பழக்கத்தின் காரணமாகவோ ஒரு குறிப்பிட்ட வகையில் நடந்து கொள் ளும் உள்ளுணர்வு தோன்றுகின்றது. இத்தகைய உள்ளுணர்வு தோன்றி யதும் மனம் அந்தச் சூழ்நிலையைப் பற்றிச் சிந்திக்கிறது.

சில நேரங்களில் அந்தச் சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட வகையில் நடந்து கொள்வது சிறந்தது என்று மனம் நினைக்கிறது. வேறு சில நேரங்களில் அதே சூழ்நிலையில் முன்புபோல நடந்து கொள்வது தவறு என்று நினைக்கிறது. கடமையைப் பற்றிப் பொதுவான கருத்து என்னவென்றால் ஒவ்வொரு நல்லவனும் தன்னுடைய மனச்சாட்சிக்கு ஒப்ப நடந்துகொள்ள வேண்டும் என்பதாகும்.

## மூளையால் கட்டுப்படுத்தப்படும் செயற்கைக் கரத்தை பொருத்தி மருத்துவர்கள் சாதனை

ஒஸ்திரியாவிலுள்ள வியன்னா மருத்துவ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மருத் துவர்கள் மேற்படி மனதால் செயற்படுத்தக்கூடிய செயற்கைக் கரத்தைப் பொருத்தியுள்ளனர்.



மூளையால் கட்டுப்படுத்தக்கூடிய செயற்கைக் கரம் ஒன்று பிரிட்டன் இராணுவ வீரரொருவருக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் சேவையாற்றிய போது தாக்கு தலுக்கு இலக்காகி கையொன்றை இழந்த பிரிட் டனைச் சேர்ந்த அன்ட்றூகார்த் வெயிட் என்ற படை வீரருக்கே இந்தச் செயற்கைக் கரம் பொருத்தப் பட் டுள்ளது.

ஒஸ்திரியாவிலுள்ள வியன்னா மருத்துவ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் மேற்படி மனதால் செயற்படுத்தக்கூடிய செயற்கைக் கரத்தைப் பொருத்தி யுள்ளனர். இதற்கென 7 மணித்தியால நேரம் செல விடப்பட்டுள்ளது.

அன்ட்றூ தனது செயற்கைக் கரத்தை எவ்வாறு அசைப்பது என நினைக்கும் போது அவரது மூளை யிலிருந்து இலத்திரனியல் அதிர்வுகள் நரம்புகளுடன் இணைக்கப்பட்டுள்ள மின் வயர்களைச் சென்ற டையும்.

அங்கிருந்து அவை செயற்கைக் கரத்தில் பொருத்தப்பட்ட நுண் கணினிகளுக்கு செய்திகளை அனுப்ப அதற்கேற்ப கையில் அசைவுகள் ஏற்படுத் தப்படும்.

தற்போது அன்ட்றூவால் தனது கரத்தைத் திறக்கவும், மூடவும், விரல்களை மடிக்கவும் விரிக்கவும் மணிக் கட்டைச் சுழற்றவும் முடிகிறது.

இந்த அறுவைச் சிகிச்சைக்காக 60 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாளை

மார்கழி-04
வியாழக்கிழமை 19.12.2013
திதி: துதியை மு.இ.06.56 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் முழுவதும்
சுபநேரம்: 07.53- 09.23 வரை
இராகுகாலம்:01.53 -03.23 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 2 | 1 | 6 | 4 | 7 | 9 | |
| 6 | 1 | 7 | | | 3 | | | |
| | | 3 | | 5 | | | | |
| 4 | | | 5 | 9 | | | | |
| | | 5 | | | | 2 | | |
| | | | | 4 | 1 | | | 6 |
| | | | | 3 | | 6 | | |
| | | | 2 | | | 4 | 8 | 5 |
| | 5 | 4 | 6 | 8 | 7 | 3 | | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 7 | 1 | 5 | 3 | 4 | 8 | 6 |
| 6 | 4 | 5 | 8 | 2 | 7 | 9 | 1 | 3 |
| 3 | 1 | 8 | 4 | 9 | 6 | 5 | 2 | 7 |
| 8 | 5 | 1 | 3 | 6 | 2 | 7 | 9 | 4 |
| 4 | 7 | 3 | 9 | 8 | 5 | 1 | 6 | 2 |
| 2 | 6 | 9 | 7 | 1 | 4 | 8 | 3 | 5 |
| 7 | 9 | 4 | 2 | 3 | 1 | 6 | 5 | 8 |
| 1 | 3 | 6 | 5 | 4 | 8 | 2 | 7 | 9 |
| 5 | 8 | 2 | 6 | 7 | 9 | 3 | 4 | 1 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் [illegible] பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய [illegible]றுவன நீ[illegible]கி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




கென்யா தனியார் துறை கூட்டணியின், 10 ஆவது வருடாந்த நிகழ்வில் இருநாட்டு ஜனாதிபதிகளுடன் வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் மற்றும் கென்ய வெளிவிவகார அமைச்சர் ஆமினா மொஹமட் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# மக்களைச் சிறைப்படுத்த முயற்சிக்கின்றது அரசு

## *சரத் பொன்சேகா குற்றச்சாட்டு*

கொழும்பு,டிசெ.18
தரமற்ற தொடர் மாடி வீடுகளை அமைத்து மக்களைச் சிறைப்படுத்த அரசு முயற்சிக்கின்றது என்று ஜனநாயகக் கட்சி தலைவர் சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.



சரத் பொன்சேகா உள்ளிட்ட குழுவினர் நேற்று செவ்வாய்க்கிழமை வனாதமுள்ள , சரனபால மாவத்தை பகுதிகளுக்கு சென்று மக்கள் பிரச்சினைகளை கேட்டறிந்தனர்.
இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.
தரம் இல்லாமல் தொடர் மாடி வீடுகளை அமைத்து அதற்குள் மக்களை சிறைப்படுத்தும் முயற்சியில் அரசு செயற்பட்டு வருகிறது என்று அவர் கூறினார். (ச)

# பொருள்களுக்கு விலைக் கட்டுப்பாடு

## *விதியை மீறினால் நடவடிக்கை என்கிறார் பெர்னாண்டோ*

கொழும்பு,டிசெ.18
பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருள்களினதும் விலைகள் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளன என்று கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.



சதொச, லங்கா சதொச மற்றும் கோப் சிற்றிகளில் அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் தடையின்றி பெற்றுக்கொள்வதற்கு வழி செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
மனித நுகர்வுக்குப் பயன்படுத்தப்படும் உணவுப் பொருள்களின் தரத்தை உறுதிசெய்யும் முகமாக நுகர்வோர் அதிகாரசபையின் அதிகாரிகள் நாடு முழுவதுமுள்ள சில்லறை மற்றும் மொத்த விற்பனை நிலையங்களிலும் களஞ்சிய சாலைகளிலும் விசேட சுற்றிவளைப்புகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

"–"

**பண்டிகைக் காலத்தில் விலை அதிகரிப்புக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதில் அரசு உறுதியாகவுள்ளது.**

பண்டிகைக் காலத்தில் விலை அதிகரிப்புக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதில் அரசு உறுதியாகவுள்ளது. தரமான பொருள்களை தடையின்றிப் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.
அத்தியாவசியமான உணவுப் பொருள்களான அரிசி, கிழங்கு, பருப்பு, உப்பு, சீனி, நெத்தலி, கடலை, பயறு, ரின் மீன் உட்பட அனைத்து உள்நாட்டுத் தயாரிப்பு மற்றும் வெளிநாட்டு இறக்குமதிப் பொருள்களினதும் தரம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்று அவர் தெரிவித்தார்.
விதிகளை மீறிச் செயற்படும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ச)

# பண்டிகையை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள்

கொழும்பு,டிசெ.18
பண்டிகைக் காலத்தில் பயணிகளின் நலன் கருதி கால அட்டவணைக்கு புறம்பாகவும் தூரப் பிரதேசங்களுக்கான பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.
நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் இந்த பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளன என்று ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன தெரிவித்துள்ளார்.
பண்டிகைக் காலத்தில் பயணிகளை சிரமத்துக்குள்ளாக்கும் வகையில் கூடுதல் கட்டணம் அறவிடும் பஸ் ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

"–"

**தூரப் பிரதேச பஸ் சேவைகளைக் கண்காணிப்பதற்காக அதிகாரிகள் குழு கடமையில்.**

உரிய பஸ் கட்டணங்களை விட அதிகமாக பணத்தை அறவிடும் நடத்துநர்கள் குறித்து 1955 என்ற இலக்கத்துக்கு முறைப்பாடு செய்யுமாறும் பயணிகளிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
தூரப் பிரதேச பஸ் சேவைகளை கண்காணிப்பதற்காக அதிகாரிகள் குழு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)




# கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னதாக வெட்டுப்புள்ளிகள், பெறுபேறுகள்

## *கல்வி அமைச்சர் தகவல்*


கொழும்பு,டிசெ.18
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை புதிய பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் மற்றும் ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களின் பெறுபேறுகள் ஆகியன கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னர் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.



பெறுபேறுகள் மற்றும் வெட்டுப்புள்ளிகள் என்பன ஏற்கனவே தயாராகியுள்ளபோதும், தற்போது அவை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.
அதற்காக கல்வியமைச்சினதும் பரீட்சைகள் திணைக்களத்தினதும் அதிகாரிகள் செயலாற்றி வருகின்றனர் என்று அவர் கூறினார்.
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை புதிய பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
கிடைத்த விண்ணப்பங்களுக்கமைய கல்வி அமைச்சு வெட்டுப்புள்ளிகளை தயாரித்து மீள்பரிசீலனை செய்து வருகிறது என்று அமைச்சர் கூறினார்.
இதேவேளை ஏற்கனவே கணினி உதவியுடன் கணிப்பிடப்பட்டிருக்கும் இஸட் புள்ளிகள் ஒவ்வொன்றையும் தாமாகவே மீண்டுமொரு முறை சுயமாக கணிப்பீட்டுக்கு உட்படுத்தி வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு. ஜே. எம். புஸ்பகுமார தெரிவித்தார். (ச)

# நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## தர்மலிங்கம்
## தர்மேந்திரன் (பாபு)



(பிரபல "தர்ம்சன்ஸ்" கட்டட
ஒப்பந்தகாரரும்
உரிமையாளரும் - அரியாலை)

**பிறப்பு** 12.05.1953 **இறப்பு** 28.12.2012

ஆண்டு ஒன்று ஆகிவிட்டதே
ஆறுது இல்லை எம்மனம்
வேண்டுதல் செய்கிறோம்
வேறு வழியின்றி
சோறு அள்ளி உண்கின்றோம்
வேகிறது நெஞ்சமோ
ஆறுதல் கூற யாரும் இல்லை
அவலப்படுகின்றோம்

உங்களின் பிரிவு பெரு நெரிவாய்க்கிடக்கிறது
காலை எழுந்து நீர் வாசலில் நிற்பது
கண்ணுக்குள் நிற்கிறது
கனவுகள் பல கண்டோம்
நினைவுகள் பல எண்ணினோம்
எல்லாம் கற்பனை நினைவாகிவிட்டது

அப்பா என்று அழைத்த வாயால்
ஐயோ என்று அலற விதி வந்ததோ எமக்கு
பொய்யோ உங்கள் சாவு
புரிய முடியவில்லை எம்மால்
ஆண்டுத் திவசத்திற்கு ஆட்களைக் கூட்டி
அன்னதானம் வழங்க காலமாச்சு

நீங்கள் சொன்னது எல்லாம் நினைவிலிருக்கிறது
சொன்னபடியே நாம் நடப்போம்
உருகி மனம் வெந்து அழுகின்றோம்
உங்கள் உருவம் எங்கள் மனதை விட்டகலாது

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

*என்றும் உங்கள் நினைவுடன் வாழும்*

**- குடும்பத்தினர்.**

இல.11, கதிரவேல் ஒழுங்கை,
கனகரட்ணம் றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.

(சி/10341)(2-6-3)

# பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனங்களைப் பதிவு செய்யவும்

*வவுனியாவில் அறிவுறுத்தல்*

பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் வாகனாங் களைப் பதிவுசெய்ய வேண்டு மென வவுனியா மாவட்ட சிறு வர் பாதுகாப்பு அதிகாரசபை, வவு னியா தெற்கு பிரதேச சபை, வவுனியா பிரதேச செயலகம் ஆகியவை அறிவு றுத்தல் வழங்கி வருகின்றன.

பாடசாலை மாணவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுவதில் இருந்து தடுக்கும் நோக் குடன் இத்தகைய பதிவு நடவடிக்கை அடுத்த ஆண்டு முதற் பகுதி யில் இருந்து துரிதப்படுத் தப்ப டும் பதிவு செய்யப்பட்ட ஆட்டோ, மினி பஸ்கள், ஹை-ஏஸ் வாகனங்கள் மட்டுமே பாடசாலை சேவை யில் ஈடுபடமுடியும். மாறாக பதிவு செய்யப்படாத நிலையில் பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் நடவடிக்கையில் வாகனங்கள் ஈடுபடுமா யின் உடனடி யாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் பொலிஸாரின் கவனத் துக்குக் கொண்டுவரப்படும். இதனால் வீதி விபத் துக்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் என்ப வற்றை மட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

இதேவேளை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத் துவதற்கு இந்த நடவடிக்கை இலகுவாக இருக்குமெனப் பெற்றோர் நம்பிக்கை தெரி வித்துள்ளனர். (க-402)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு செல்லத்துரை

(ஓய்வுபெற்ற மின்சாரசபை உத்தியோகஸ்தர் - சாவகச்சேரி)



வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும், குடமியன் வரணியை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு செல்லத்துரை 16.12.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், கனகம்மா வின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்துரை (உத்தியோகத்தர் ப.நோ.கூ.ச) மற்றும் தவத்துரை (கனடா), அருமைத்துரை (சுவிஸ்), ராஜேஸ்வரி ஆகி யோரின் அன்புச் சகோதரனும், பாஸ்கரன் (லண்டன்), ரமேஸ்கரன் (லண்டன்), சுரேஸ்கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரணியாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2013) புதன்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குடமியன் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

குடமியன் வரணி. (சி10350)(12)(6.3) 0774358586

### நாகநாதி பசுபதி

நெடுந்தீவு மேற்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் தற்போது இல.407, பூவரசங்குளம் நட்டாங்கண்டலில் வசித்தவருமான நாகநாதி பசுபதி நேற்று (17.12.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி-செல்லம்மா தம்பதிய ரின் அன்பு மகனும், கனகம்மாவின் பசாமிகு கணவரும், தருமலிங்கம், (நெடுந்தீவு), தனலட்சுமி(ஆசிரியை, மு/பொன்னகர் தமிழ் வித்தியா லயம்), கேதீஸ்வரன்(சமுர்த்தி முகாமையாளர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மசோதி, பகிரதன், தயாநிதி(சமுர்த்தி உதவி முகாமையாளர், சமுர்த்தி மகாசங்கம்,கரைச்சி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நாகமுத்து,பொன்னம்மா, கதிர வேலு, கதிராசி, வள்ளியம்மை, சோமசுந்தரம்,மாணிக்கம், தங்கம்மா, பொன்னையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னலட்சுமி, பராசக்தி, சரஸ்வதி, சந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும், பிரசாத், பிரதீப், சஜீவன், லோஜிதன், தனுசிகா, யதுசிகா, துவாரகா, துஷாரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.12.2013) புதன்கிழமை மு.ப10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் ஒட்டன்குளம்,பாலிநகர் இந்துமாயனத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இல.407, பூவரசங்குளம், நட்டாங்கண்டல். (42712) (5.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## மீன் சந்தை அமைக்க அனுமதி கிடைத்தது

மீன் எழுச்சித் திட்டத்தில் வலி.மேற்கு மீன் சந்தை அமைப்பதற்காக மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அனுமதி கிடைத்துள்ளது.

இதற்கான அனுமதிக் கடிதத்தை மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வழங்கியுள்ள தாக பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங் கரன் தெரிவித்தார்.

தற்போது இதற்கான எண்ணக்கரு முன்மொழி வுப் பத்திரம் உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


சங்கானை நகர அபிவிருத்தி சபை புதிய மீன் சந்தைக் கட்டடம் அமைப்பதற்கான காணியை முறைப்படி வழங்கியுள்ளது. வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளன. 2014 இல் இந்தத் திட்டத்தின் கீழ் உட்கட்டுமான அபிவிருத்தி இடம்பெறும்.

சுமார் 35 முதல் 40 மில்லியன் ரூபா வரையான நிதியில் நவீன மீன் சந்தை, உள்ளக வீதி-வெளி யக வீதி, இறைச்சிக்கடைத் தொகுதி, கழிவு வாய்க் கால், நீர்த்தாங்கி என்பன அமைக்கப்படும்.

இதேவேளை சபை நிதியின் ஊடாக சங்கானை பொதுநூலக உட்கட்டுமானமும் இடம்பெறும்.

இதற்கான மதிப்பீடுகள் தற்போது தயாரிக் கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரி வித்தார். (ந-41)

## மரண அறிவித்தல்



### முருகன் இரத்தினம்

இமையாணன் கிழக்கைப் பிறப்பிடமாகவும், அறிவாலயம் கரணவாய் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட முருகன் இரத்தினம் 2013.12.16 திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஐயன் தம்பதியினரின் அன்பு மருமகனும், பூரணம் (மணி) அவர்களின் பாசமிகு கணவரும், உமாவின் (கனடா) அன்புத் தந்தையும், யோகலிங்கத்தின் (சத்தி - கனடா) பாசமிகு மாமனாரும், பிரியங்கா, உமையங்கா, வாரணன் (கனடா) ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2013) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப.10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அறிவாலயம், கரணவாய் மேற்கு, கரவெட்டி. (43005)(12)(6.3) தகவல்: குடும்பத்தினர்.

## தொடரும் மாட்டுக் களவு

சுன்னாகம் தெற்கில் பட்டப் பகலிலும் இரவு வேளைகளிலும் தொட ரும்மாட்டுக்களவுகளால் தோட்ட வெளிகளில் மாடுகளை மேய்ச்சலுக் காகக் கட்டுவதற்கு மக் கள் அஞ்சும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வார காலத்தில் இந்தப் பகுதி யில் உள்ள தோட்ட வெளிகளில் இருந்த ஏழுமாடுகள்தொடர்ந்து களவாடப் பட்டுள்ளன. இது தொடர்பாக சுன் னாகம் பொலிஸிலும் முறைப்பாடுகள் செய் யப்பட்ட போதிலும் இது வரை யாரும் கைது செய்யப்படவில்லை.

இதேவேளை கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் மூன்று மாடு களை திருட்டுக் கொடுத் தவர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் செய்த முறைப் பாட்டினைத் தொடர்ந்து நாவாந் துறையில் உள்ள பாழ டைந்த வீட்டில் மறைத் துக் கட்டப்பட்ட நிலை யில் இரண்டு மாடுகள் மீட்கப்பட்டபோதிலும் மற்றைய மாடு இறைச் சிக்காக வெட்டப்பட் டமை உறுதி செய்யப் பட்டுள்ளது.

மாடுகள் மீட்கப்பட்டுள்ள போதிலும் இந்தக் களவு களுடன் தொடர்புடைய எவரும் கைது செய் யப்படவில்லை. (ந-86)

## கண்ணீர் அஞ்சலி


யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் முன்னாள் ஓய்வுபெற்ற அதிபர்

**ஆறுமுகம் குருசாமி** அவர்கள் 10.12.2013அன்று இறைபதமடைந்த செய்தி அறிந்து துயர் அடைவதோடு அன்னாரின் குடும் பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை (42703) (45.3.6)

## கண்ணீர் அஞ்சலி

ஓய்வுநிலை தலைமை ஆசிரியர்
**வேலுப்பிள்ளை கந்தசாமி** (JP) (மாப்பான வாத்தியார்)



எமது வலயக்கல்விப்பணிப்பாளர் **க.முருகவேல்** அவர்களின் பாசமிகு தந்தை

**வேலுப்பிள்ளை கந்தசாமி அவர்கள்**


16.12.2013 அன்று இறைபதம் அடைந் துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக் கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி விப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சன்னதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
கிளி/உமையாள்புரம்,
அ.த.க.பாடசாலை,
கிளிநொச்சி. (42713) (12.6.3)

## கண்ணீர் அஞ்சலி

### வேலுப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வுநிலை தலைமை ஆசிரியர்)




வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சியின் வலயக்கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேல் அவர்களது பாசமிகு தந்தை

**வேலுப்பிள்ளை கந்தசாமி**

அவர்கள் 16.12.2013 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பிரதமகுரு
**சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீ ரங்கநாதக்குருக்கள்**
அவர்களின் அன்புத் தந்தை
**சிவஸ்ரீ சுப்பிரமணிய சுந்தரராஜக்குருக்கள் (பிரதமகுரு)**

இறைபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கலட்டிஎச்சாட்டி மகாமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பரிபாலனசபையினர், கலட்டி எச்சாட்டி மகா மாரி அம்மன் தேவஸ்தானம், கலட்டி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி லூர்த்தம்மா



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி லூர்த்தம்மா 16.12.2013 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், றோசலின், டெலினா, புனிதம், பவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பர்ணபாஸ் துரைமணி (கட்டட ஒப்பந்தகாரர்), இராசகிளி, இராசநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், கமிலஸ் (லண்டன்), செல்வி (சுவிஸ்), சசி (பிரான்ஸ்), ஜெஸ்ரின் (சுவிஸ்), றெக்ஸ் (யாழ்.தபாலக ஊழியர்), மெசியா (பிரான்ஸ்), எடிசன், ஜஸ்மின், ஜான்சி (யாழ்.பிரதேச செயலகம்), ஜஸ்ரன், தர்ஷன் கெலன்சோபியா (லண்டன்), ஜோர்ச் (சுவிஸ்), யூட் (பிரான்ஸ்), ரவி (சுவிஸ்), சோபியா ஜெயந்தினி, அன்ரனி றோய் (பிரான்ஸ்), ரவுண்சன் ஆகியோரின் பேர்த்தியும், நெவின், அஸ்வினி, விற்றோ, மொன்ரோ, சாள்ஸ், டன்சன், டயான், மதுஷா, நிதுஷா, அபிஷன், ஜறிசா, இனிஷா, ஜொலின், சரோன் சமீரா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.12.2013) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு சென்மேரிஸ் 2ஆம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்மேரிஸ் 2ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை. (42693)(12)(6.3)

தகவல்: E.M.துரைமணி (மருமகன்)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 21.03.1934 உதிர்வு 20.11.2013

அமரர் செல்லர் நடராசா



கடந்த 20.11.2013 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.12.2013) புதன்கிழமை காலை 6 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். 20.12.2013 வெள்ளிக் கிழமை அன்னாரின் இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம் பெறும். இந்த இரு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு இருகரம் கூப்பி அழைக்கின்றோம்.

(42720)(2.6)

செந்தூரி மல்ரி பேப்பெஸ் மார்ட்
ராஜன் எலக்ரோனிக்ஸ் அச்சுவேலி. - குடும்பத்தினர்.
T.P. 077 322 2712 kavinaya20@gmail.com
அச்சுவேலி வடக்கு

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி சிவபாக்கியம் சிவப்பிரகாசம்

பிறப்பு 1926 . 02 . 02

இறப்பு 2012 . 12 . 29





திதி:18.12.2013

என்றும் நினைவு கூரும்: மருமக்கள்.

# 45 ஆம் நாள் நினைவுநாளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் முருகுப்பிள்ளை தயானந்தன் (கோபி கிருஷ்ணா)

மலர்வு 1944.08.24 உதிர்வு 2013.11.05



கடந்த 05.11.2013 அன்று இறைவனடி சேர்ந்த முருகுப்பிள்ளை தயானந்தன் அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (19.12.2013) வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கொத்தாங்கலட்டி,
வலிவெட்டி. குடும்பத்தினர்.

# தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் தேவஸ்தானக் குருமணி சிவஸ்ரீ சுப்பிரமணிய ஐயா சுந்தர ராஜக் குருக்களின் சிவபதப்பேறு குறித்த பக்தி மலர்க் காணிக்கை



வழக்கம்பரை உறையும் மகாமாரி அன்னைக்கு குருப்பணிகள் செய்யக் குல விளக்காய் உதித்தீரே வலிகாமம் மேற்கின் சைவத்தின் காவலனாய் சமயச் சடங்குகளால் சிவ ஒளியைப் பரப்பி சான்றோர் சபை நடுவே சற்குருவாய் திகழ்ந்து நால்வகை மொழி களையும் நன்றாகவே பயின்று கும்பாபிஷேக கொடியேற்றக் கிரியைகளின் சோழியபுரம் உறை ஐம்பு நாதேஸ்வரற்கும் சங்கரத்தைப்பதிப் பத்திரகாளி அம்பிகைக்கும் பல்லாண்டுகாலம் குருமணியாய்த் திகழ்ந்தும் பல்வேறு ஆலயத்தின் குடமுழுக்கு நிகழ்வுகளும், அலங்கார உற்சவமும் அன்பாகவே புரிந்தீர், உற்றார், உறவினர்க்கோர் கற்பகமாய்ப் பொலிந்தீர், நற்குருவாய் ஒரு சற்புதல்வனைத்தந்து பற்பல தேசமெல்லாம் கிரியை நெறிபரப்பி சைவநெறி தழைக்க தளராது உழைத்தீரே சாத்துப்படிகளிலும் சான்றுபல பெற்றீரே சைவக்குருமார்க்கோர் தண் நிழலாய் நின்றீரே வழக்கம்பரைப் பதியும் வானளாவ மிளிரக் குருப்பணியோடு நற் திருப்பணிக்கும் உரம்சேர்த்து புகழ் உடம் போடு நல் இறையருளில் திழைத்த குருமணியின் பதம் போற்றும் ஆர்வலர் தம் பக்தி மலர்க் காணிக்கை செலுத்தி என்றும் உம் வழியில் நாம் தொடர உறுதி கொள்வோம்.

அன்னாரின் பிரிவால் அல்லலுறும் அனைவர்க்கும் ஆழ்ந்த அனுதாபங்கள் கூறி அமைகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பு மைத்துனர் சிவஸ்ரீ சுந்தர நடராசாக் குருக்கள்
(சில்லையூர் முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்)

(42689) (41.8.3)

# திறப்பை விழுங்கிய சிறுமி

வலி.வடக்கு. டிசெ.18

திறப்பை விழுங்கிய நிலையில் இரண்டு வயதுச் சிறுமி ஒருவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு வைத்தியர்களின் முயற்சியினால் திறப்பு வெளியே எடுக்கப்பட்டது.

அளவெட்டி தவளகிரி முத்துமாரி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த இரண்டு வயது சிறுமியான கிருஷ்ணராசா கோபிகா என்பவரே விளையாடும் போது சிறிய திறப்பை வளையத்துடன் விழுங்கியவராவார். (ந-86-36)

## கட்டுரைப் போட்டியில் முதலிடம்

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் சமூகக் கலந்துரையாடல், வேலைத்தலக் கூட்டுறவு அலகினால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட தமிழ்மொழியிலான கட்டுரைப் போட்டியில் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த தங்கராசா தமயந்தி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ந)

## சிவில் பாதுகாப்பு கூட்டம்

கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது என்று நிர்வாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ந-35)

# கடை வாடகைக்கு

அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரம் பிரதான வீதியில் புதிதாக கட்டப்பட்ட 4 கடைகள் வாடகைக்கு உள்ளன. (சிகை அலங்கரிப்புக் கடை Saloon) நடத்துவதற்குரிய சகல வசதிகளும் உண்டு.

தொடர்பு:076 603 9334

(40892)(4.8.3)

# Personal / Group Classes (English/ Tamil)

A/L Chemistry & Biology
(35 வருட Past Papers செய்விக்கப்படும்)
தொடர்பு: 077 023 2782

(42716)(2.6)

# காசோலை தவறிவிட்டது

சுன்னாகக் கிளை, யூனியன் வங்கி காசோலை ஒன்று இல.578815 (36500/=) கே.கே.எஸ் வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தர்கள் தொடர்பு கொள்ளவும்.

(40714)(2.6) தொடர்பு -0774986237

# இதய அஞ்சலி



எங்கள் தேவஸ்தான நிர்வாக சபையில் இந்து இளைஞர் சங்கப் பிரதிநிதியாக இணைந்து தொண்டாற்றிய

நடராஜா சிவயோகராசா

அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகசபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(இ/10355)(2.6)

# தவறிவிட்டது

யதுர்ஜீன் மொகமட் மிஸ்லார் என்பவருடைய தே.அ.அட்டை (902461108V) சாரதி அனுமதிப் பத்திரம் என்பன பேர்சுடன் ஸ்ரான்லி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு:-
071 220 6423,
077 94 0349

(42723)(2.6)

# மணமகன் தேவை

லண்டன் பிராஜாவுரிமையுடைய 32 வயது MBA படித்த அழகிய பெண்ணுக்கு அவரது உறவினர்கள் படித்த நல்லொழுக்கமுள்ள மணமகனைத் தேடுகின்றனர்.


தொடர்பு: விளம்பர இல. 4480,
மே/பா, உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(#.10548)(40.6.3)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 20.04.1953

உதிர்வு 20.11.2013



அமரர் விஸ்வகீர்த்தி
லயன் குழந்தைவேலு நடராசா

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்தில் மிளிர்ந்தவரே
மக்கள் சமூகத்துக்காய் என்றென்றும் உழைத்தவரே
பாரினிலே பண்புயர் தெய்வமாய்த் திகழ்ந்தவரே
நாள்கள் பல சென்றிடினும் மறவோம் உங்களை!!

கடந்த 20.11.2013 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் விஸ்வகீர்த்தி லயன் குழந்தைவேலு நடராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (20.12.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவ ரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நகுலகிரி,
கச்சாய் வீதி, கொடிகாமம். (42700)(10.6.3) குடும்பத்தினர்.

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13.01.1932

உதிர்வு 16.12.2005

திதி:- அபரபக்க பிரதமை 18.12.2013



அமரர் முருகேசு தாமோதரம்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழி காட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் எட்டு மறைந்ததையா!
நம்ப முடியவில்லை!
எம் உள்ளங்களில் என்றும் நிறைந்திருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மசாந்திக்காய் எம் குல தெய்வமான
சங்கத்தானை முருகனை வேண்டி நிற்கின்றோம்

"கோகுலம்",
சங்கத்தானை. (C/10349)(2.6.3) - குடும்பத்தினர்.

உ சிவமயம்

# பாஷாணக் கிரியையும் சபிண்டீகரண அழைப்பும்



மாவை. கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார்- சிதம்பரேஸ்வர சுவாமி தேவஸ்தான பிரதம குருவும், தர்மகர்த்தாவும் எமது குடும்பத் தலைவருமாகிய

அமரர் சுப்பிரமணிய ஐயர்
சிவஷண்முகநாதக்குருக்கள்

அவர்களின் பாஷாணக்கிரியைகள் நாளை (19.12.2013) வியாழக்கிழமை காலை அன்னாரின் மேற்படி இல்லத்திலும், பாஷாண உத்யாவனம் கீரிமலையிலும் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும், 20.12.2013 வெள்ளிக்கிழமை மதியம் மேற்படி இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு உதவிகள், ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், தபால், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

(தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்).

பிள்ளையார் கோயில் வீதி,
கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை. (42705)(10.6.3)

சி. கமலாதேவி (மனைவி),
கணேசலிங்கம் மேகலாம்பிகை (சகோதரி)
மற்றும் குடும்பத்தினர்.

# வன்முறைகளால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுங்கள்

## நவாலி வடக்கு பெத்தனாச்சி அம்மன் ஆலய பிரதம குரு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

எமது பிரதேசங்களுக்கு தற்போது உள்ள ஆலயங்கள் போதுமானவை. வெளிநாட்டில் இருந்தும் மக்களிடம் இருந்தும் நிதி திரட்டி ஆலயங்களை அமைக்க முற்படாதீர்கள். கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைகளால் பாதிக்கப்பட்ட நடமாடும் தெய் வங்களுக்கு உதவ முன் வாருங்கள் என்று நவாலி வடக்கு பெத்தனாச்சி அம்மன் ஆலய பிரதம குரு சிவத்திரு இளையதம்பி சபாரத்தினம் தெரி வித்தார்.

நவாலியில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சிவத்திரு இ.சபாரத்தினம் மேலும் தெரிவிக்கையில்:

வலி.தென்மேற்கில் பல ஆலயங்கள் தற்போது மீள் புனரமைப்புச் செய்யப்படுகின் றன. பல ஆலயங்கள் இடித்து மீளக்கட்டப்படுகின்றன. இன்னும் பல ஆலயங்கள் அனுமதியின்றி கட்டப்படுகின்றன. ஆனால் 2009 இல் பாதிக்கப் பட்ட பல்லாயிரக் கணக்கான சிறுவர்கள், இளைஞர்கள், வயதானவர்கள் என பல்வேறு நிலைகளில் பாதிக்கப் பட்டவர்கள் இன்னும் மீளெழுச்சி பெறாத நிலையில் உள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப் பட்டு உதவி யின்றி உள்ள நடமாடும் தெய் வங்களுக்கு உதவுவதற்கு முன்வாருங்கள். -என்றார்.

(வ-50)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## 2014 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. கட்டளைச் சட்டத்தின் 160 (3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப் பெறுமதியின் 10% மான வரியொன்றினை 2014 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும்.
02. 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்கந்தாயத்திற்குரிய முதல் மாதத்துக்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5 % கழிவும் அனுமதிக்கப்படும்.
03. மேற்சொல்லப்பட்ட பந்தி 01 இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள், வதிவிடங்கள் மீது 15% மும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20 % மும் விறாந்துக் கட்டணம் அறவிடப்படும்.
04. ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளும் ஒவ்வொரு ஆதனத்துக்கும் தனித்தனியாக 31.01.2014 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
17.12.2013
(சி/7609)
(2.6

இ.தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

## வலி கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.

## மீள் கேள்வி அறிவித்தல் - 2014

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை. இறைச்சிக் கடைகளினை 2014 ஆம் ஆண்டிற்கு (01.01.2014 - 31.12.2014) குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 18.12.2013– 26.12.2013.
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 26.12.2013 ந.ப 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 26.12.2013 பி.ப 02.00 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு,மூலப்பிரதியை "தவிசாளர், வலி கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்"எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும், எதிர்வரும் 26.12.2013ஆம் திகதி ந.ப 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ,அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம்(வரி நீங்கலாக) | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (வரிநீங்கலாக) | மாதாந்த வாடகை (வரிநீங் கலாக) |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டித்தரிப்பிடம், மின்சாரக்கட்டணம் உட்பட) துவிச்சக்கர வண்டி 5/=மோட்டார்சைக்கிள் 10/= | 2000.00 | 10,000.00 | 4,893,000.00 | |
| 02 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 46,500.00 | 500.00 |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 01 | ஆவரங்கால் பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 15,750.00 | |
| | நீர்வேலி உப அலுவலகம் | | | | |
| 02 | நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| 03 | நீர்வேலி மீன்சந்தை | 300.00 | 1000.00 | 10,000.00 | |
| 04 | நீர்வேலி பொதுச்சந்தை | 300.00 | 1000.00 | 10,000.00 | |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 01 | கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 630,850.00 | 500.00 |
| 02 | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 01 | உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 128,000.00 | 500.00 |
| 02 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 94,500.00 | 500.00 |
| 03 | உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 200,000.00 | |
| 04 | ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 76,650.00 | 500.00 |
| 05 | ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1000.00 | 22,000.00 | 500.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலி கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
புத்தூர்.
17.12.2013

அன்னலிங்கம் உதயகுமார்,
தவிசாளர்
வலிகிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.


(சி/10354)(10.6.3)

துன்பம் தீர அருள் வாக்கு கேட்கலாம்

அருள் வாக்கு வெள்ளவத்தை அருள்மிகு நாகபூசணி அம்மன் ஷேஸ்திரம், நாகபூசணி அம்மா அவர்கள் யாழ். வருகிறார் திருமணத்தடை, கல்வித்தடை, தொழிற்தடை, நாகதோஷம், குழந்தைப்பேறு இல்லாதவர்கள் ஏனைய துன்பம் உள்ளவர்கள் வந்து அருள்வாக்கு கேட்கலாம். அருள் வாக்கு கூறப்படும் திகதி 21.12.2013 இல் இருந்து 23.12.2013 வரை நேரம் மு.ப. 10.30 - 12 மணி வரை பி.ப. 4.30 - 6 மணிவரை 22.12.2013 அன்னதானம் நடைபெறவுள்ளது.

யாழ். ஆலய முகவரி:
ஞானவைரவர் ஆலயம் 2 ஆவது ஒழுங்கை
கலாசாலை வீதி (கலாமன்றம் முன் ஒழுங்கை)
திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 077 8012226

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பிரதம குரு
சிவ ஸ்ரீ சுந்தர ஸ்ரீ ரங்கநாதக் குருக்கள்
அவர்களின் பாசமிகு தந்தை

### சிவஸ்ரீ சு.சுப்பிரமணிய சுந்தரராஜாக் குருக்கள்

(வழக்கம்பரை அம்மன் தேவஸ்தான பிரதமகுரு) அவர்கள் இறைபதமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஏழாலை.
(42660)(4.6.3)
தேவஸ்தானம், ஏழாலை அத்தியடி
முருகமூர்த்தி ஆலயம்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## BENN CONSORTIUM (PVT)

No.14-1/1, 37th Lane, Wellawatta, Colombo-06

5 வருடங்கள் உத்தரவாதம்

BEN COOL உயர் வினைத்திறன் கொண்ட வளி சீராக்கிகள்

SALES - இணைப்பு சேவை இலவசம்

ஒரு வருடத்துக்கு இலவச பராமரிப்பு சேவை

RESIDENTIAL - COMMERCIAL

| Capacity | Price |
|---|---|
| 9000 BTU | 52800.00 |
| 12000 BTU | 60500.00 |
| 18000 BTU | 73700.00 |

Mobile No: 077 1550967,
Logendran : 077 9134292.

(42717)(10.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (18.12.2013) புதன்கிழமை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெறும் எமது அலுவலகத்தில் கடமையாற்றும்

செல்வி

### இராஜேந்திரன் காயத்திரி

அவர்களைப் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பிரதித் திட்டப்பணிப்பாளர்,
சக உத்தியோகத்தர்கள்,
மீள்எழுச்சித்திட்டம்,
வடக்கின் துரிதமீட்சித் திட்டம், யாழ்ப்பாணம்.
(42715)(10.6.3)

## கனத்த இதயத்துடன் கண்ணில் நீர் மல்க அஞ்சலி கூறுகின்றோம்



சிவஸ்ரீ

### சு.சுந்தரராஜ குருக்கள்

எமது தேவஸ்தான குரு சிவஸ்ரீ சு.சுந்தரராஜ குருக்கள் அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார். அன்னார் தேவஸ்தான மேன்மைக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியவை. பெருந்தகையின் ஆன்மா சாந்தியடைய அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

பரிபாலன சபை,
தொல்புரம்,வழக்கம்பரை
முத்துமாரியம்மன்
தேவஸ்தானம்
தொல்புரம், சுழிபுரம்.

# மனிதவுரிமை மீறல்களைத் தடுக்க ஐ.நாவால் செயற்றிட்டம் தயாரிப்பு

## எந்தவொரு தனிநாட்டையும் இலக்குவைத்துஉருவாக்கவில்லை என்கிறார் பான்கீ மூன்

யாழ்ப்பாணம், டிசெ 18

இலங்கையில், ஐக்கிய நாடுகள் சபை செயற்பட்டதைப் பாட மாகக் கொண்டு, எதிர்காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறா மல் இருப்பதற்குரிய வகையில் செயற்திட்டம் ஒன்றை ஐ.நா உருவாக்கியுள்ளதாக குறிப்பிட் டுள்ள அதன் பொதுச் செயலாளர் பான்கீ மூன், இது எந்தவொரு தனிநாட்டையும் இலக்கு வைத்து உருவாக்கப்படவில்லை என் றும் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டின் இறுதிச் செய்தியா ளர் சந்திப்பை நியுயோர்க்கில் நேற்றுமுன்தினம்நடத்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட 'முன்னிலைத் திட்டம் ' எந்த அளவில் உள்ளது என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன்,

இந்த உரிமைகள் முன்னிலை நடவடிக்கைத் திட்டம், நாம்(ஐ.நா) இலங்கையின் அண்மைய நில வரங்களில் இருந்து என்ன கற் றுக்கொண்டோம் என்பதை அடிப் படையாக கொண்டது. இலங் கையின் இறுதிப் போரில் ஐ.நா வின் பங்கு என்ன என்பதை ஆராய, நான் ஒரு நிபுணர் குழுவை நியமித்தேன் என்பது உங்களுக்குத் தெரியும்.


அந்தக்குழு, ஐ.நா இலங்கை விடயத்தில், சரியானமுறையில் செயற்பட்டதா என்று ஆராய்ந்து பார்க்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டது.

இதனையடுத்து நாம் ஒரு தீவிர மான உள்ளக ஆய்வை மேற் கொண்டோம்.

இதன் பெறுபேறாகவே, நாம் மிகவும் முக்கியமான செயற்றிட் டத்தை உருவாக்கியுள் ளோம். நிச் சயமாக, இந்த செயற்றிட்டம், குறிப் பிட்ட ஒரு நாட்டையோ அல்லது ஒரு விடயத்தையோ இலக்கு வைத்து உருவாக்கப்பட்டதல்ல.

இது எல்லா நாடுகளுக்கும், எல்லா விவகாரங்களுக்கும், எல்லா சூழ்நிலைகளுக்கும் பயன்படும். அதனால் தான், இதனை நான் ஐ.நா பொதுச்சபையில் எனது பலமான பரிந்துரைகளுடன் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது.

ஐ.நா பொதுச்சபைத் தலைவர் உறுப்பு நாடுகளுக்கு அதை விநி யோகித்து வருகிறார். எனவே இது மனித உரிமைகளைப் பாதுகாக் கவும், எந்த விடயத்திலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறு



வதைத் தடுக்கவும், வழிகாட்டியாக இருக்கும். இதில் நான் உறுதியாக இருக்கிறேன். இந்த விடயம் தொடர் பாக, நான் எனது மூத்த அதிகாரி களுடன் இன்று(நேற்று முன் தினம்) காலையில் கூடக் கலந்துரை யாடியுள்ளேன்.- என்றார். (ச-5)

## மீனவரை மீட்குமாறு டில்லியில் போராட்டம்

டில்லி, டிசெ.18

இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மற்றும் புதுவையைச் சேர்ந்த மீனவர் களையும் அவர்களது உடைமைகளையும் உடனடியாக மீட்க மத்திய அரசு உதவ வேண்டும் என்று வலியுறுத்தி மீனவர் ஐக்கிய முன்னணி சார்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை புதுடில்லியில் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தலைமை வகித்த மீனவர் ஐக்கிய முன்னணி தலைவர் ஜி.ஆர்.அப்பா ராஜ் தெரிவித்ததாவது:-

இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக, புதுவை மீனவர்களின் விசைப்படகுகள், மீன்பிடி வலைகள், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றை உடனே மீட்க வேண்டும். இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்தவும், கச்சதீவை மீட்கவும் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காகா கலேல்கர் குழு, லோக்குர் குழு, மண்டல் குழுவினர் பரிந்துரைப்படி, மீனவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண் டும்.

இந்தக்கோரிக்கைகளை வலியுறுத்தி பிரதமர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் மூத்த அமைச்சர்களை, மீனவர் சங்க பிரதிநிதிகள் சந்தித்து வலியுறுத்த உள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் தேசிய மீனவர் சங்கத் தலைவர், மற்றும் தமிழகம், புதுச்சேரி, ஆந் திரா, பீகார், ஒரிசா, மராட்டியம் ஆகிய மாநிலங் களில் இருந்து மீனவர் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (வ)

## சேமமடு வீதியை புனரமைக்குமாறு வேண்டுகோள்

வவுனியா, டிசெ.18

30 ஆண்டுகளாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படும் சேமமடு வீதியைப் புனரமைத்து வழங்குமாறு குறித்த வீதியைப் பயன்படுத்தும் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுமார் 20 கிலோமீற்றர் நீளமான இந்த வீதியை 800 க்கும் மேற்பட்ட இந்தப் பகுதி யைச்சேர்ந்த குடும்பங்களும் வெளியூர் மக்களும் பயன்படுத்தி வருகின்றனர். ஓமந்தைப் பாடசாலை, மருத்துவமனை, சந்தை ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கே மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின் றனர். போர், கனரக வாகனங்களின் அதிக நடமாட்டம்போன்றவை ஆகிய காரணங்களால் இந்த வீதி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் தாமதமாகவே ஓமந்தை பிரதான வீதியை வந்தடைகின்றன. இதனால் பாடசாலை மாணவர்கள், நோயா ளிகள் உட்பட பல்வேறு அவசர தேவைகருதி வருவோர் பெரிதும் பாதிக்கப்பட்டுவருகின்றனர். தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் வீதி மேலும் மோசமாகச் சேதமடைந்து காட்சியளிக்கின்றது. (க-402)

## படகுமூலம் இந்தியாவுக்கு சென்ற இலங்கையர் கைது

இராமேஸ்வரம், டிசெ.18

இலங்கையிலிருந்து படகு மூலம் சட்ட விரோதமாக இந்தியா சென்ற இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இராமேஸ்வரம், தனுஷ்கோடி அரிச்சல்முனைக் கடல் பகுதியில் மண்டபம் கடலோர காவல் படையினர் ரோந்து சென்ற போது இரண்டாம் தீடையில் மர்மநபர் ஒருவர் நின்றுள்ளார். அவரைக் கடலோரக் காவல் படையினர் பிடித்துவந்து தனுஷ்கோடி பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைத்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில், தாம் அம் பாறை மாவட்ட பகுதியைச் சேர்ந்த இந்திரன் மகன் இந்திரரூபசாந்தன் என்றும், இந்தியா வந்தால் எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம் என்று படகுக்கு 75 ரூபா ஆயிரம் கொடுத்து வந்ததாகவும் கூறினார்.

இராமேஸ்வரத்தை நெருங்கும்போது கடற் படையினரைப் பார்த்ததால், 2 ஆம் தீடையில் இறக்கிவிட்டுவிட்டு படகோட்டிகள் தப்பிச் சென்று விட்டதாகவும் அவர் மேலும் கூறினார். (வ)


யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்

அருள் ஒளிதர்ஷன மாலையும் சங்கட சதுர்த்தி விசேட பூஜையும்









பூத்தவளே, புவனம் பதினான் கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே?

வரமருளிக் காத்தருளும் வராகி அம்பாளாக அவதாரமெடுத்து டென்மார்க் - பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையாரின் கார்திகை விளக்கீட்டு பூஜை யாழில் இடம்பெற, ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மையாரின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

நடமாடும் தெய்வமாகவும், அன்பான தாயாகவும், நல்வழிகாட்டும் குருவாகவும் விழங்கும் அபிராமி உபாசகித் தாயாரின் திருவடி பூஜையில் கலந்துகொள்ளும் பக்தர்கள் அனைவருக்கும் நல்லெண்ணமும், உள்ளத்தில் சாந்தியும், வாழ்க்கையில் நம்பிக்கையும், நோய் நொடியற்ற சுபீட்சமான வாழ்வும், தெய்வத்தின் அருட்கடாட்சமும் நிறைவாக கிட்டும்.
அம்மாவிடம் அருள்வாக்கு கேட்க விரும்பும் பக்தர்கள், அன்றைய தினம் நேரடியாகக் கேட்டுக் கொள்ளலாம்.

இடம் :
திவ்வியஜீவன சங்க மண்டபம்,
சட்டநாதர் கோயிலடி, நல்லூர்
காலம் : 21.12.2013
ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 10.00 மணி

(C/10245)

திருவருள் நிகழ்வுகள்:

- மங்கள வாத்தியக் கச்சேரிகள்
- தெய்வீக பஜனை நிகழ்வுகள்
- அவதார நிகழ்வுகளின் ஒளித்திரைக் காட்சி
- அன்னையாரின் திருவடிகளுக்குப் பாத பூஜை
- அன்னையாரின் திருக்கரங்களால் பூஜிக்கப்பெற்ற தேசிக்காய்.
- காவல் பொருட்கள், திருவருட் பிரசாதம் ஆகியன வழங்கப்படும்
- அன்னதான நிகழ்வும் இடம்பெறும்

அன்னையாரின் ஆலயத்தில் பூஜையில் வைத்துப் பூஜித்து தருவிக்கப்பட்ட காவல் தேசிக்காய், திருவுருவப் படம், அம்மையாரின் திருவுருவம் பொறிக்கப்பட்ட பென்ரன்கள், திறப்புக் கோர்வைகள், அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட யாகநீர் போன்ற அருட் பொருட்களை மண்டபத்தில் பெற்று அம்பாளின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஆலயத் தொடர்புக்கு: Tel: 0045 97180192, 0045 40413431 Fax: 0045 97184192

யாழ் தொடர்புக்கு: 077 699 3861, 077 982 5004

www.abiramiamman.dk

www.nisaart.com

# விசேட அதிரடிப் படைக்கு போருக்கு பின் ஆள் சேர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 18

போர் முடிவடைந்து 4 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இலங்கை விசேட அதிரடிப் படைக்குப் ஆள்சேர்ப்பு செய்யும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகச் சிறப்பு அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி எம்.சி.ரணவான தெரிவித்துள்ளார்.

7 ஆயிரத்து 800 பேரே தற்போது சிறப்பு அதிரடிப்படையில் உள்ளனர். ஆகக் குறைந்தது 10 ஆயிரம் பேராவது இருக்க வேண்டும்.

கட்டுக்குருந்தவில் தற்போது ஒரு தொகுதி சிறப்பு அதிரடிப் படையினருக்கான பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பயிற்சி முடிவடைந்த பின்னர் 300 பேருக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அடுத்த ஆண்டு மேலும் 600 பேருக் குப் பயிற்சிகள் வழங்கி அவர்கள் படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் சிறப்பு அதிரடிப் படையினர் எல்லா மாவட்டங்களிலும் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் யாழ்ப்பாணத்தின், பண்ணைப் பகுதிக்கு அருகில் சிறப்பு அதிரடிப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். (த-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தொண்டர்களுக்கு

துக்கு ஆதரவாக இன்று முற்பகல் 11 மணி தொடக்கம் மருத்துவர்கள் கவனவீர்ப்பில் ஈடுபடவுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். கிளையின் தலைவர் மருத்துவர் எஸ்.நிமலன் தெரிவித்தார்.

இதே நேரத்தில் தாதியர்கள், நிறைவுகாண் தொழில் வல்லுநர்கள் ஆகியோரும் கவனவீர்ப்பில் ஈடுபடவுள்ளனர் என்று தாதியர் சங்கத்தினரும் நிறைவுகாண் தொழில் வல்லுநர்களும் தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் சிற்றூழியர்கள் இன்று முற்பகல் 9 மணி தொடக்கம் 10 மணி வரை தொண்டர்களுக்கு ஆதரவாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என சிற்றூழியர் சங்கத்தின் செயலாளர் ஆர். ஜெயரூபன் தெரிவித்தார்.

பல வருடங்களாக தொண்டர்களாக பணிபுரிந்து வருபவர்களுக்கு கல்வித் தரம் போதாது என்று காரணம் காட்டி நிரந்தர நியமனம் மறுக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக அவர்கள் கடந்த 6 நாள்களாக வைத்திய சாலை வளாகத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொண்டர்களின் போராட்டத்தால் வைத்தியசாலையில் பல பணிகள் முடங்கியுள்ளன. உரிய நேரத்தில் சிகிச்சை அளிப்பதில் தாமதம் ஏற்படுவதால் நோயாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந் நிலையிலேயே வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவினரும் ஒன்றிணைந்து இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (த-4-17)

### கடுமையான

அமைப்புகள் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கு அனுப்பி வைக்கவுள்ளன எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, பொதுநலவாய மாநாட்டுக்காக கொழும்பு வந்து யாழ்ப்பாணம் சென்ற பிரிட்டன் பிரதமரைச் சந்திப்பதற்காக கடந்த மாதம் 15ஆம் திகதி யாழ். பொது நூலகத்திற்கு முன்னால் அணிதிரண்டு நின்ற காணாமற்போனோரின் உறவினர்கள், மத குருமார்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் மீது பொலிஸார் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலின் புகைப்படங்கள் மற்றும் காணொலிகளும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடம் ஏற்கனவே சமர்ப்பிக் கப்பட்டுள்ளன என அறியமுடிகின்றது.

அத்துடன், அண்மையில் சிறிகொத்தாவில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற மனித உரிமைக் கண்காட்சி மீது காடையர்கள் நடத்திய தாக்குதலின் புகைப்படங்கள் மற்றும் காணொலிகளும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கு இலங்கை யிலுள்ள மனித உரிமை அமைப்புகளால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, அண்மையில் இலங்கை வந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் பெயானி மற்றும் அமரிக்காவின் உயர் குழுவினர் ஆகியோர் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், போரால் பாதிக்கப்பட்ட மற்றும் இடம்பெயர்ந்த தமிழ் மக்களையும், தமிழ் சிவில் சமூகத்தினரையும் நேரடியாகச் சந்தித்து தகவல்களைத் திரட்டிக் கொண்டு சென்றுள்ளனர்.

அதுமட்டுமன்றி, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னர் சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக் கூடிய சுயாதீன விசாரணையை இலங்கை அரசு நடத்தாவிட்டால் சர்வதேச விசாரணையைக் கோருவோம் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, ஐ.நா. அதிகாரிகள், பிரிட்டன் பிரதமர், கனேடியப் பிரதமர் மற்றும் அமெரிக்க உயர் அதிகாரிகள் உள்ளிட்ட சர்வதேச தலைவர்களும், பிரதிநிதி களும் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், சர்வதேச சமூகத்தினரின் கருத்துகளுக்குச் செவிசாய்க்காமல் இலங்கை அரசு, தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகின்றது என்ற குற்றச் சாட்டு தற்போது வலுத்துவருகின்றது.

இந்நிலையில், எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக கடுமையான பிரேரணையை சர்வதேச நாடுகள் நிறைவேற்றுவது உறுதியாகியுள்ளது என்று சர்வதேச இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

### தமிழர்களின்

மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2013ஆம் ஆண்டில் 35 ஆயிரம் அரச ஊழியர்களுக்கு மொழிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தமிழர்களுக்கு சிங்களமொழியும், சிங்களவர்களுக்குத் தமிழ்மொழியும் பயிற்சியாக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், அரச அறிவித்தல் பலகைகள், அதனால் வழங்கப்படும் கையேடுகள் போன்றவற்றில் இரு மொழிகளும் கட்டாயம் இருக்க வேண் டும். எனினும், முழுமையாக சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் தமிழ்மொழியிலும், முழுமையாக தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் சிங்களமொழியிலும் கருமங்களை முன்னெடுத்துச் செல்வது பொருந் தாது. அவற்றுக்கு நிதி செலவழிப்பதும் வீண்விரயமாகும். கொழும்புக்கு மும்மொழிக் கொள்கை அவசியமாகும்.

நாம் அழைப்பு நிலையமொன்றை அமைத்துள்ளோம். பயனாளிகளுக்குத் தங்களுடைய மொழியில் சேவையைப் பெறமுடியாவிட்டால், 1956 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி எங்களின் கவனத்துக்குக் கொண்டு வரலாம். அவ்வாறு எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதானிகளுக்கு அழைப்பை ஏற்படுத்தி நாம் அறிவுறுத்தல்களை வழங்குவோம். பின்னர் குறித்த பயனாளிக்கு உரிய சேவை கிடைத்ததா என நாம் அவரிடமும் வினவுவோம்.

அதேவேளை, அரச நிறுவனங்களில் மொழிபெயர்ப்பு வசதி இருக்கவேண்டும். ஏனெனில், தமிழ் மட்டும் தெரிந்த ஒருவருக்கு சிங்களத்தில் மாத்திரமும், அதேபோன்று சிங்களவருக்கு தமிழில் மாத்திரமும் கடிதம் எழுதுவது கத்தியால் குத்தும் செயல் போன்றதாகும். நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் பிரதேச மட்டங்களில் மொழி விவகாரங்களைக் கையாள்வதற்கு எமது அமைச்சின் கிளைகள் அமைக்கப்படும். 2014இல் கிளிநொச்சியில் கிளையொன்று திறக்கப்படும்.

குறிப்பாக, இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசியல் தீர்வு அவசியமாகும். வடமாகாணசபை நிறுவப்பட்ட பின்னர் முதல்வர், ஜனாதிபதியின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்திருந்தார். இவ்வாறான நல்லிணக்கப் பணிகள் தற்போது முடக்கமடைந்துள்ளன. பிரச்சினைகளைப் பேசித் தீர்த்து சுமுகமாகப் பயணிக்கவேண்டும்.

இறுதியாக ஒன்றைக் கூறுகின்றேன். சிங்கள மக்களின் ஒத்துழைப்பு - இணக்கப்பாடு இல்லாமல் தமிழர்களின் அரசியல் உரிமை சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. அதேபோன்று தமிழர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியாது என்றும் வாசுதேவ நாணயக்கார கூறினார். (த-சி)

### கமல்

வழக்குரைஞர் முடியப்பு றெமிடியஸ் அவரை விடுவிக்குமாறு விடுத்த கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம் கமலின் விளக்கமறியலை மேலும் 14 நாள்களுக்கு நீடித்தது.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளரான டானியல் றெக்ஷயன் நவம்பர் மாதம் 26ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலைக்குக் காரணமானவர்கள் என்ற குற்றச்சாட்டில் வட மாகாணசபை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளருமான கமலேந்திரன், ஈ.பி.டி.பியைச் சேர்ந்த லண்டன் யசிந்தன், றெக்சியனின் மனைவியான அனித்தா ஆகிய மூவரும் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அவர்களை 14 நாள்கள் காவலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. முதலாவது சந்தேகநபரான கமல் சார்பாக சட்டத்தரணி முடியப்பு றெமிடியஸ் முன்னிலையானார். இரண்டாவது சந்தேகநபரான யசிந்தனுக்கு சார்பாக சட்டத்தரணிகள் எவரும் முன்னிலையாக வில்லை. மூன்றாவது சந்தேக நபரான அனித்தா சார்பாக சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா முன்னிலையானார்.

"குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கமலைக் கைது செய்து விடுதலை செய்துவிடுவோம் என்று பொய் கூறியே விசாரணை செய்துள்ளனர். வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளனர். பின்னர் விடுதலை செய்யாது வழக்குத் தொடுத்துள்ளனர். கமல் ஓர் அப்பாவி. அவரை வழக்கிலிருந்து விடுதலை செய்யுங்கள்" என்று கோரினார்.

பொய்கூறி கமலிடம் விசாரணை செய்யப்பட்டதாக றெமிடியஸ் தெரிவித்த குற்றச் சாட்டை பொலிஸார் முற்றாக மறுத்தனர். குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தமிழிலேயே பெறப்பட்டு சிங்களத்தில் பதிவு செய்யப்பட்டதாகப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். அதனால் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவு செய்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரை அடுத்த தவணையின்போது மன்றில் முன்னிலையாகுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு கமலேந்திரன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள போதும் வடமாகாணசபை அமர்வுகளில் பங்கேற்க அவருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்க வேண்டுமென்று றெமிடியஸ் விடுத்த கோரிக்கை தொடர்பில் மன்று நேற்றைய தினம் பதிலெதுவும் வழங்கவில்லை.

சந்தேகநபரான அனித்தா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, சந்தேகநபரை அவரது உறவினர்கள் பார்வையிடுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று மன்றிடம் விண்ணப்பித்தார். சந்தேகநபர்களை அவர்களது இரத்த உறவினர்கள் மட்டும் பார்வையிட அனுமதி வழங்கியது. வழக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான கமலின் மனைவி மற்றும் பிள்ளைகளும் நேற்று மன்றுக்கு வந்திருந்தனர். (உ-4)

### விக்கி

நாட்டின் இனப் பிரச்சினை அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேசித் தீர்க்க வேண்டும். அதுவரை மாகாணசபை தனது நிர்வாகத்தை நடத்தாமல் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. வடக்கு மாகாண சபையில் பல முடிவுகள் தன்னிச்சையாக - ஒரு தலைப்பட்சமாகவே எடுக்கப்படுகின்றன. இது வடக்கு மாகாணசபையின் செயற்பாட்டுக்கு நல்ல தல்ல.

வடக்கு முதல்வரும், ஆளுநரும் முரண்பட்டுக் கொள்கின்றனர். இது நல்லதல்ல. இந்த முரண்பாட்டின் உச்சமாக விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகி விடுவாரோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது' என்று மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதவியில் இருக்க வேண்டும். நீங்கள் சொல்வதுபோல் அவர் பதவி விலகும் சாத்தியம் ஏற்பட்டால் அது நாட்டுக்கு நல்லது அல்ல. நான் யாழ்ப்பாணம் சென்று அவரைச் சந்திப்பேன். அல்லது விக்னேஸ்வரனைக் கொழும்பு வரும்படி அழைப்பு விடுப்பேன். எனது செயலாளர் லலித் வீரதுங்கவிடம் உடனடியாக இதுபற்றிப் பணிப்புரை விடுப்பேன்.

வடக்கு மாகாண சபை தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறும் என்று தெரிந்துகொண்டு தானே நான் வடக்குத் தேர்தலை நடத்தினேன். அந்த மாகாண சபை சுமுகமாக நடக்க வேண்டும் என்பதை நான் விரும்புகிறேன்.

ஆளுநரும், முதல்வரும் முரண்படக் கூடாது. ஒருவரை ஒருவர் அனுசரிக்க வேண்டும். செயலாளர்களை மாற்றுவது பற்றி எனக்குச் சரியான தகவல்கள் இல்லை. இவை என்னிடம் நேரடியாகச் சொல்லப்படவேண்டும். மாகாண சபை நிதி ஒழுங்கு கள் பற்றிய சட்டம் இருக்கிறது. அதை இரு சாராரும் கடைப் பிடிக்க வேண்டும். இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷவும் அக்கறை கொண்டு என்னிடம் ஆரம்பத்தில், கூறி யுள்ளார். முதல்வரிடம் இது பற்றி நான் உடனடியாக உரையாடுகிறேன்.

வடக்கு மாகாண சபையை சேர்ந்த இரண்டு அமைச்சர்கள், வடக்கின் பாடசாலைகளுக்குச் சென்று இனவாதம் கக்கும் பரப்புரைகளைச் செய்கிறார்கள் என்று எனக்கு தெரியவந்துள்ளது. தமிழ், சிங்கள இனத்தவர் மத்தியில் இனவாத பிளவை ஏற்படுத்த இவர்கள் முயற்சி செய்கிறார்கள். இனவாதப் பிரசாரத்தை பாடசாலை மாணவர் மத்தியில் செய்ய வேண்டாம் என்று அவர்களுக்கு எடுத்து கூறுங்கள் - என்று தெரிவித்துள்ளார். (த-5)

### வடக்கு

பகுதிகளில் பல விடயங்களுக்கு தடங்கலாக இருக்க வேண்டி நேரிடும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையி லேயே அரியம் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனையில் தமிழ்ப் பிரதேச செயலகமொன்றை உருவாக்கும் முயற்சிக்கு தடங்கல் ஏற்படுத்தப்படுகின்றது. இதற்கு முஸ்லிம் தலைமைகள் தடங்கலாக இருப்பார்களானால் மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பகுதிகளில் பல விடயங்களில் நாம் தடங்கலாக இருக்கவேண்டிய நிலை ஏற்படும்.

அதேவேளை, மதம் பிடித்தவராகச் செயற்படும் மங்களராம விகாரை தேரரை மட்டக்களப்பிலிருந்து வேறொரு விகாரைக்கு மாற்றவேண்டும். வடக்கு, கிழக்கில் தமிழ்மொழி அரச கருமமொழியாக இருக்கின்றது என அமைச்சர் கூறுகின்றார். ஆனால், அங்கு தேசிய கீதத்தை தமிழ்மொழியில் பாட முடியாமல் உள்ளது. சிங்கள மொழியில் பாடுமாறு வற்புறுத்தப்படுகின்றனர். எனவே, வடக்கு, கிழக்கில் தேசிய கீதத்தை தமிழில் பாடுவதற்கு அனுமதி வழங்குங்கள். அவ்வாறில்லாவிட்டால் வடக்கு, கிழக்குக்கு தேசிய கீதமே தேவையில்லை.

அத்துடன், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய வீடமைப்புத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என அரசின் சுற்றுநிருபத் தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், இது விடயத்தில் அமைச்சரொருவரின் தலையீடு இருக்கின்றது. பாகுபாடு காட்டப்படுகின்றது - என்றார். (த-சி)

### ஐ.நா.

மின்னஞ்சல் மூலமாக கலந்துரையாடப்பட்ட விடயங்களைக் கேட்டிருந்தது.

அதற்குப் பதிலளித்துள்ள பிரதிச் செயலர், இந்தச் சந்திப்பு விசேடமான சந்திப்பு ஒன்றும் இல்லை. உறுப்பு நாடுகளுக்கிடையேயான வழக்கமான சந்திப்புக்களின் ஒரு பகுதியாகவே இது அமைந் திருந்ததாகக் கூறியுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை அரசு பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### கலைப் பீடத்துக்கு

நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

ஜனவரி 10 ஆம் திகதி அனைத்து பீடங்களினதும் மாணவர்களுக்குப் பட்டமளிப்பது என்று முன்னர் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் நேற்று நடந்த பேரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன்படி கலைப் பீட மாணவர்களுக்கான பட்டமளிப்பு மார்ச் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நிர்வாகத்தினரின் கவனவீனமே இதற்குக் காரணம் என்று மாணவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது பிற்போடப்பட்டமைக்கான காரணம் குறித்து துணைவேந்தரிடம் கேட்ட போது அவர் மேலும் தெரிவித்ததாவது.

பட்டம் பெற வேண்டிய மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் தாமதமாகவே கிடைத்துள்ளன. இது தவிர கிடைத்த பெறுபேறுகளை உரிய முறையில் பதிவு செய்து பட்டமளிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு கால அவகாசம் போதாதுள்ளது.

ஜனவரியில் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவுக்குச் சில மாணவர்களின் உறவினர்கள் வெளிநாடுகளிலிருந்து வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்துள்ளதனால் பட்டமளிப்புப் பிற்போட ஏனைய பீடாதிபதிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். எனவே இதனை இரண்டு பிரிவாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டது - என்றார். (த-4)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (மல்லாகம்)

## பொது அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள் / தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்நடைமுறைகளை பின்பற்றத் தவறுவோர்மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் அறியத்தருகிறேன்.

**1) வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2014**

சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்பவர்கள் 2014 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை 31.03.2014 ஆம் திகதிக்கு முன்பாகப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**2) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் - 2014**

1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக் கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் அல்லது புதுப்பித்துக் கொள்ளுதல் வேண்டும்.

**3) ஆதன வரி செலுத்துதல்-2014**

எமது சபையின் உப அலுவலகங்கள் மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி (குட்டியப்புலம்) ஆகிய இடங்களில் சேவையை வழங்கி வருகின்றது. மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி பிரதேசங்களில் வசிப்பவர்கள் அந்தந்த உப அலுவலகங்களிற்கு சென்று 31.03.2014 ஆம் திகதிக்கு முன் ஆதன வரியை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் 31.01.2014ஆம் திகதிக்கு முன்னர் ஆதன வரியைச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரி யில் 10% கழிவு வழங்கப்படும். 31.03.2014 ஆம் திகதிக்கு முன் வரி செலுத்த தவறின் 15% தண்டமும் வரியும் அறவிடப்படும்.

**4) வீடமைப்பு நாடு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்**

1) வலி வடக்கு பிரதேச எல்லைக்குள் புதிய கட்டடங்கள் அமைத்தல், எல்லைச்சுவர் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலிஅமைத்தல், கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைத்தல், கட்டடங்கள் விரிவாக்கல், திருத்தம், புதுப்பித்தல் என்பன பிரதேச சபையின் அனுமதிபெற்று செயற்பட வேண்டும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப் பட்ட மேற்படி கட்டுமானங்கள் அனுமதியற்ற கட்டடங்களாகக் கருதி சட்டநடவடிக்கை மேற் கொள்ளப்படும் அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும்.

11) கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டிமுடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக காலநீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

111) அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5) துவிச்சக்கரவண்டி உரிமம், மிருக வரி உரிமம் பெற்றுக்கொள்ளல்**

2014 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருக வரி உரிமங்களை 31.03.2014 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**6) விளம்பரங்களைக் காட்சிப்படுத்தல்**

சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களுக்கு பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியைப் பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள் / நிறுவனங்கள் / முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும்.

**7) கல், செம்மண் , மண் என்பவற்றினை அகழ்வது தொடர்பான அறிவித்தல்**

சபையின் எல்லைக்குள் கல், செம்மண், மண் அகழ்வினை மேற்கொள்ளும்போது உரிய ஆவணங்களை சமர்ப்பித்து சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**8) முச்சக்கரவண்டி தரிப்பிடம்**

சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் பிரதேச சபையில் பதிவு செய்யப்படலும் வேண்டும்.

**9) மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடைசெய்தல்**

வலி வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

**10) படவரைஞரைப்பதிவு செய்தல் / புதுப்பித்தல்**

2014 ஆம் ஆண்டுக்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் படவரைஞராக பதிவு செய்தவர்களும் 2014.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள அல்லது புதுப்பித்துக்கொள்ள முடியும்.

**11) பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருள்களைப் போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருள்களை சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணத்தைச் செலுத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**12) கழிவகற்றல்**

தங்கள் வீட்டில் அகற்ற முடியாதுள்ள கழிவுகளை பிரதேச சபையில் கட்டணம் செலுத்துவதன் மூலம் சபையால் அகற்றப்படும். அத்துடன் வீட்டில் உள்ள கழிவுகளை அகற்ற கழிவு தொட்டிகளை பிரதேச சபையில் விலைக்கு பெற்றுக் கொள்ள முடியும்.

**13) நீர் வழங்கல் சேவை**

குடிநீர் பற்றாக்குறையுள்ள பகுதி மக்கள் தங்கள் வீட்டின் நிகழ்வுகளிற்காக பிரதேச சபையில் கட்டணம் செலுத்துவதன் மூலம் குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**14) பொது சுகாதாரம் பேணல்**


சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்துக்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்புரவு செய்து பொது சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை (மல்லாகம்).**
**18.12.2013**

(சி/10614)(10.6.3)

# முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பொது மைதானம் வேண்டும்

### உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவரிடம் கோரிக்கை



முல்லைத்தீவு,டிசெ.18

முல்லைத்தீவு மாவட்டத்துக்கெனப் பொது மைதானம் ஒன்றை அமைத்துத் தருமாறு இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டார்.

அன்று காலை 8 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக்கினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்றில் அவர் கலந்து கொண்டார்.

இதன் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் உதைபந்தாட்டத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாகக் கலந்துரையாடப் பட்டது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பொதுவான உதைபந்தாட்ட மைதானத்தின் தேவை தொடர்பாக வலியுறுத்தப்பட்டது.

இதற்குப் பதில் அளித்த இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ முதற்கட்டமாக மைதானத்துக்கான காணி ஒன்றை அடையாளப்படுத்துமாறும், பின்னர் அது குறித்துத் தனக்கு அறிவிக்குமாறும் முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் நிர்வாகத்திடம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் நவநீதன், செயலாளர் மருத்துவர் சண்முகராஜா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த-23)

# இறுதியாட்டத்துக்கு டைமன்ஸ் அணி

பருத்தித்துறை, டிசெ.18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் வதிரி டைமன்ஸ் அணி இறுதியாட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் வதிரி டைமன்ஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது.

ஆட்டம் தொடங்கிய போது டைமன்ஸ் அணியினருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஆட்டம் தொடங்கி முதல் 5 நிமிடங்களில் றேஞ்சர்ஸ் அணியின் வீரர் கைலாஸ் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட டைமன்ஸ் அணி வீரர்கள் அதிர்ந்து போயினர். இதனால் றேஞ்சர்ஸ் அணி வீரர்கள் உற்சாகமடைந்து ஆட்டத்தைத் துரிதப்படுத்தினர். டைமன்ஸ் அணியினருக்கு முற்பாதியாட்டம் பெரும் சவாலாகவே அமைந்தது. முற்பாதி ஆட்டம் நிறைவடைவதற்கு முன்னர் 38 ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் அணிவீரர் அர விந் ஒரு கோலைப் போட இடைவேளைக்கு முன்னர் 2:1 என்றகோல்கணக்கில்றேஞ்சர்ஸ் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் தமது பந்துப் பரிமாற்றத்திலும், ஆட்டத்திலும் நிதானத்தை டைமன்ஸ் அணியினர் வெளிப்படுத்தினர். ஆனால் றேஞ்சர்ஸ் அணியினர் முன்னேறுவதைவிட தடுப்பாட்டத்திலேயே தமது கவனத்தைச் செலுத்தினர். ஆயினும் றேஞ்சர்ஸ் அணியின் தடுப்பு வீரர்களைத் தாண்டி டைமன்ஸ் அணியின் வீரர் பீமா 9 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட்டுச் சமப்படுத்தினார்.

இதன்பின் இரு அணிகளின் ஆட்டத்திலும் அனல் பறந்தது. இதன்போது 16 ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் அணியின் துசிகரனும், 24 ஆவது நிமிடத்தில் பீமாவும் அடுத்த டுத்து இருகோலைப்போடறேஞ்சர்ஸ் அணிநிலைகுலைந்தது. அதன் பின்னர் றேஞ்சர்ஸ் அணியின் கோல் பெறும் முயற்சிகள் தோல்வி யில் முடிந்தன.

இறுதியில் 4:2 என்ற கோல் கணக்கில் டைமன்ஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இந்தத் தொடரின் இறுதியாட்டத்துக்கு உடுப்பிட்டி நவஜீவன்ஸ்அணிஏற்கெனவே தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-422)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.18

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் அல்-மதீனா விளையாட்டுக் கழக அணி சண்சைன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளையாடவுள்ளது. (த-23)

## தாச்சிப் போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினால் மின்னொளியில் நடத்தப்படும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையாகவுள்ள உதய சூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலிட்டி பாரதி விளையாட்டுக் கழகம் மோதும். (த-86)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

நத்தார், புதுவருட விசேட விலைக்கழிவு!

→ 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.
→ வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட.

11Kg மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம்

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும் 0766858509




வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்துகொடுக்கப்படும்.

3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்



திருமுருகன் கொம் நெற்

இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7835

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 30, ... வீதி, கிளிநொச்சி
பிரதா... ...ங்கானை.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
(HNB வங்கிக்கு அருகாமையில்)
TO... XPRESS




## பெய்லி சாதனை

ஆஸ்திரேலிய மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஸ் தொடரின் மூன்றாவது போட்டி பேர்த் மைதானத்தில் நடைபெற்றது. போட்டியின் நாலாம் நாளான நேற்றுமுன்தினம் ஆட்டத்தின் போது இங்கிலாந்தின் ஜேம்ஸ் அண்டர்சனின் பந்துவீச்சில், ஒரே பந்துப்பரிமாற்றத்தில் ஆஸ்திரேலிய நடுக்கள வீரர் பெய்லி 28 ஓட்டங்களைக் குவித்தார்.

ஆட்டத்தின் 87 ஆவது பந்துப்பரிமாற்றத்தை அண்டர்சன் வீசிய போது, முதல் பந்தில் பவுண்டரியும், இரண்டாவது பந்தில் சிக்ஸரும், மூன்றாவது பந்தில் 2 ஓட்டங்களும், நான்காவது பந்தில் பவுண்டரியும், அடுத்த இரு பந்துகளில் சிக்ஸர்களும் அடித்து அசத்தினார் பெய்லி.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரே பந்துப் பரிமாற்றத்தில் 28 ஓட்டங்களைக் குவித்த மேற்கிந்திய வீரர் லாராவின் சாதனையை அவர் சமன் செய்துள்ளார். (த)




## பஸ்ஸுடன் போல்ட் போட்டி

பல ஓட்டப்பந்தயப் போட்டிகளில் பங்கு கொண்டு சாதனைகளை நிலை நாட்டியுள்ள உலகத்தின் வேகமான மனிதர் என்று கருதப்படும் உசைன் போல்ட் புதுமையான பந்தயம் ஒன்றில் பங்கு கொண்டு வெற்றி பெற்றுள்ளார்.

ஆர்ஜென்ரீனாவுக்கான பயணம் மேற்கொண்ட உசைன் போல்ட் பஸ் ஒன்றுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 80 மீற்றர் தூரம் கொண்ட இந்த போட்டியில் முடிவில் கருத்து தெரிவித்த போல்ட், பஸ் உச்சக்கட்ட வேகத்தில் செல்ல வில்லை என்று தெரிவித்தார். (த)



## விதிமுறைகளுக்கு முரணாக பந்து வீசிய ஷில்லிங்போர்ட்


மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் ஷில்லிங்போர்ட் விதிமுறைகளை மீறி பந்து வீசியதாகத் தெரிவித்து சர்வதேச கிரிக்கெட் சபை அவரை இடைநிறுத்தியுள்ளது. அந்த அணியின் மற்றொரு வீரர் சாமுவேல்ஸும் விதிகளை மீறிப் பந்து வீசியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி மும்பையில் கடந்த மாதம் நடைபெற்றது. அப்போது ஷில்லிங்போர்டின் பந்து வீச்சிலும், சாமுவேல்ஸின் பந்து வீச்சிலும் சந்தேகம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. களத்தில் இருந்த நடுவர்கள் இருவரது பந்து வீச்சுக்களையும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க ஐ.சி.சிக்கு பரிந்துரை செய்தனர். இதையடுத்து இருவரது பந்துவீச்சுக்கள் குறித்தும் சுய ஆய்வுக் குழு ஆய்வு செய்தது.



முடிவில், ஷில்லிங்போர்ட் ஐ.சி.சி விதிமுறைகளை மீறி பந்து வீசியது உறுதியானது. எனவே திங்கட்கிழமை ஐ.சி.சி சார்பில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஷில்லிங்போர்ட்டின் இரு வகைப் பந்து வீச்சிலும் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. எனவே அவர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார். அவர் தனது பந்து வீச்சு முறையைத் திருத்திக் கொண்டு புதிதாக அறிக்கை சமர்ப்பிக்கும் வரை இந்த நடவடிக்கை தொடரும் என்று ஐ.சி.சி அறிவித்துள்ளது. (த)

## சாதனையும் சோதனையும்




வரலாற்றிலேயே யாருக்கும் கிடைத்திராத அரிய பரிசு ஒன்று இங்கிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் அலெஸ்டர் குக்குக்கு கிடைத்துள்ளது.

ஆஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றன. இவ்விரு அணிகளும் மோதும் மூன்றாவது டெஸ்ட் போட்டி பேர்த்தில் நடைபெற்றது.

இதுவரை 99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய இங்கிலாந்து அணித் தலைவர் குக் 100ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடினார். இந்தப் போட்டியில் நுழைந்தபோது சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடித்தார். அதாவது மிகவும் இளம் வயதில் 100 டெஸ்ட் போட்டியில் ஆடிய வீரராக இதுவரை சச்சின் தான் இருந்தார். அதைத் தற்போது குக் முறியடித்துள்ளார்.

ஆனால் அவரது சந்தோஷம் சில மணிநேரம் கூட நீடிக்கவில்லை. காரணம், 2ஆவது இன்னிங்ஸில் குக் 'டக் அவுட்' ஆகிவிட்டார். உலக டெஸ்ட் வரலாற்றில் 100 ஆவது டெஸ்ட் போட்டியில் டக் அவுட் ஆன முதல் வீரர் என்ற பெயரும் குக்குக்குக் கிடைத்துள்ளது. (த)



ஈழத்துச் சிதம்பரம் திருவெம்பாவை
இன்று பத்தாம் திருவிழா தீர்த்த உற்சவம்- (18.12.2013)

திருச்சிற்றம்பலம்
போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்.
திருச்சிற்றம்பலம்



அனுசரணை: சிவகணேசன் ரெக்ஸ்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 2063

அமைதியின் சொற்கள்
**Words of peace**

Life is the song that plays through this breath.
It is the call that is buried in each and every heart.
It is the light that shines within us.
Life is a gift that will never repeat itself.
It is not the day that will not come back,
it is the moment that will not come back.
Of all the abilities we have,
it is the most precious to understand that life is a gift.
- Prem Rawat

தொடர்புகளுக்கு:
011 725 0001
(பி.ப 3.00 - 10.00 மணிவரை)
(42899)
(10.6.3)

**IELTS** Special Class

March - 8ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும்
IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள்
திங்கள் தொடக்கம் வரை காலை 7 மணி முதல் 8.30
மணி வரை 3 மணி – 5 மணி வரை நடைபெறும்
ஆரம்பம் 21-12-2013




* INDIVIDUAL TRAINING
* UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
* WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
* MORE THAN 10 YEARS EXPERIENCE
* VOCABULARY and GRAMMAR
* EXTENDED SPEAKING PRACTICE

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel 0755435089 0778803887

மாபெரும் விற்றுத் தீர்த்தல்
தவணைக் கொடுப்பனவில் மீள பெற்றதும் இல்லை
காட்சிக்கு வைத்து களங்கப்பட்டதும் இல்லை
புத்தம் புதிய
SINGER SISIL
தையல் இயந்திரங்கள்
குளிர்சாதனப் பெட்டிகள்
நம்பமுடியாத
விலைக்கழிவில்
10% முதல்
30% வரை



டிசெம்பர் முதலாம் திகதி முதல் கையிருப்பு உள்ள வரை
USHA AGENCY
No.62/32, Stanley Road, Jaffna.
Tel: 021 4923393, Fax : 021 222 2906
குறிப்பு:- தவணைக் கொடுப்பனவில் வழங்கப்பட மாட்டாது

## சந்தன மரக்கன்றுகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பிரதேசங்களில் இம்மாதம் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் சந்தனமரங்களை நட்டு பராமரிப்பதற்கான ஆலோசனைகளுடன் சந்தன மரக்கன்றுகள் விநியோகிக்கப்படும்.

**ஒரு கன்றின் விலை ரூபா 1000/= மட்டுமே**

Genesis **தொடர்பு: 077 3436927, 077 8979990**

## மரண அறிவித்தல்

### விநாசித்தம்பி தியாகராஜா (விசுவப்பா)



காரைநகர், களபூமி, சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும், இல. 105, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி தியாகராஜா நேற்று (17.12.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி-சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, வைத்திலிங்கம், சரஸ்வதி, நேசரத்தினம் பூமணி மற்றும் வாலாம்பிகை, சௌந்தராம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரோஜாதேவி, பாக்கியலக்சுமி (வ/ஓமந்தை மத்திய கல்லூரி), சுபலக்ஸ்மி (வ/தவசியார்குளம் அ.த.க. பாடசாலை) குபேந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், குலசிங்கம், ஹரிஹரன், தஜேந்திரன் (கணினி வளநிலையம்) அம்பிகை நேசன் (கட்டார்) ஆகியோரின் அன்பு மாமனும், ஹதுஷன், அபிதன், ஹரினி, ஹரிஷி, அபிந்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.12.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 105, மானிப்பாய் வீதி,**
**ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.**

(43001)
(7.8.3)

தகவல் :
**சு. செல்வரத்தினம் (மருமகன்)**

## தேவை

கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி மற்றும் யாழ்ப்பாண புகையிரத கட்டுமான பணிகளில் வேலை செய்வதற்கு உடனடியாக கீழ்வரும் தொழிலாளிகள் தேவை. சம்பளத்துடன் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். சம்பளம் இரண்டு கிழமைகளுக்கு ஒரு முறையே வழங்கப்படும். ஆனால் நாளொன்றுக்கு 300/= வீதம் சம்பள முற்பணம் வழங்கப்படும். உடனடியாக வேலைக்கு வரக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

- ✓ மேசன்
- ✓ கம்பி தொழிலாளிகள் (Barbenders)
- ✓ தச்சு தொழிலாளிகள் (Form work)
- ✓ மார்பிள் மேசன்மார்
- ✓ மொல்டிங் மேசன்மார்
- ✓ தொழிலாளிகள்

**மேலதிக விவரங்களுக்கு:**

| | | |
|---|---|---|
| கொடிகாமம் | - சாகர | 071 943 4923 |
| சாவகச்சேரி | - சத்துர | 071 943 4923 |
| நாவற்குழி | - கோபி | 077 229 3820 |
| யாழ்ப்பாணம் (முஸ்லீம் பள்ளி) | - ராஜ் | 077 639 3412 or 021 320 2726 |
| யாழ்நகர் | - ருமெய்ஸ் | 071 074 8166 |
| யாழ் ஹொட்டல் | - சாந்தபாலன் | 071 869 7269 |

**முழுவதற்கும் - 021 222 4840 சுகாசினி**

**சங்கென் கென்ஸ்ரக்சன்**
31, வைமன் றோட், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(C/10615)(10.14)

## ஆஷஸ் கிண்ணத்தைக் கைப்பற்றியது ஆஸி.



ஆஷஸ் தொடரில் இங்கிலாந்துஅணிக்கெதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியையும் ஆஷஸ் கிண்ணத்தையும் ஆஸ்திரேலிய அணி கைப்பற்றியுள்ளது.

பேர்த் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 385 ஓட்டங்களைப் பெற்றது.

தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 251 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

134 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆடிய ஆஸ்திரேலிய அணி சார்பாக டேவிட் வோணர் 112 ஓட்டங்களையும், ஷேன் வொற்சன் 103 ஓட்டங்களையும் குவிக்க அந்த அணி 6 இலக்குகளை இழந்து 369 ஓட்டங்களைப் பெற்றுதனது இனிங்ஸை இடைநிறுத்தியது.

504 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணி சார்பாக பென் ஸ்ரோக்ஸ் 120 ஓட்டங்களையும், இயன் பெல் 60 ஓட்டங்களையும், பெற்றுப் போராடிய போதிலும், அவ் வணி 353 ஓட்டங்களுக்குச் சகல இலக்கு களையும் இழந்து 150 ஓட்டங்களால் தோல் விய டைந்தது.

போட்டியின் நாயகனாக ஸ்டீவ் ஸ்மித் தெரிவானார். (த)

**கட்டாரில் உடனடி வேலை வாய்ப்பு**
**15 நாள்களில் பயணம்**
Electrician / Plumber / Carpenter/ Steel Fixer - 43000/= சம்பளம், விசா செலவு 35000/=, 7பேர் Labour 36000/= சம்பளம், விசா செலவு 25000/= , 10 பேர்
V2 Travels & Tours (pvt) Ltd
077 4836084, 021 2055043

**தரமான ஓடுகள் விற்பனைக்குண்டு.**
தரமான NO-01 STAR (WAYAMBA DEVELOPMENT TILES) ஓடுகள் யாழ், வன்னி போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்.
**பிரணவன் என்ரபிறைசஸ்** 0773818799
இல - 635, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சங்கிலியன் சிலைக்கு முன்பாக)

**அதிரடி மலிவு விற்பனை**
10% - 50% கழிவு
மங்களா
சகல தளபாடங்களுக்கும்
10% - 50% விலை குறைப்பு
தெரிவுக்கு முந்துங்கள்
இல. 536, கே.கே.எஸ் வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 - 2228367, 0777 286069
உள்ளூர் டெலிவரி இலவசம்

**வெற்றிப் பயணம் தொடர்கின்றது**
**ஆஸ்திரேலியா குடும்ப விசா வென்றார்**
காத்தாபாடி வீதி, நுணாவில் மத்தி சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. தர்மபாலசிங்கம் சுதர்சன் ஆஸ்திரேலியா குடும்ப விசா வென்றுள்ளார்.
எமது வலுவான சட்ட ஆலோசனையில் இது சாத்தியமாகியது.
**நீங்களும் தாமதம் வேண்டாம்**
**உங்கள் திசைகாட்டியிடம் விரைந்து வாருங்களேன்...**
**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com
(42707)(14)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். பிராந்தியக் காரியாலயத்தில் கடமையாற்றும் **இராமலிங்கம் ஜெயபாலன்** அவர்களின் தாயார்.

**திருமதி பஞ்சாமிர்தம் இராமலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய முகாமையாளரும் சக ஊழியர்களும்,
பிராந்தியக் காரியாலயம் (வடக்கு),
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

**உதயன்** விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

**வேலையாள் தேவை**
அலுவலகம் ஒன்றுக்கு கணினி துறையில் குறைந்தது இரண்டு வருட அனுபவம் உள்ள பெண் தேவை.
**தொடர்பு:**
**075 0416274**

**வேலை வாய்ப்பு**
**British Teaching Academy**
எமது அலுவலகத்துக்கு சரளமாக ஆங்கிலம் பேச, எழுதக்கூடிய இரண்டு பெண்கள் உடனடியாகத்தேவை. ஆர்வமுள்ளவர்கள் உங்கள் விண்ணப்பத்தை உடனடியாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
**British Teaching Academy**
**79, Chapel Street, Jaffna.**

**நேரடியாக கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பொருட்களை யாழ் விலையில் சாவகச்சேரி நகரில் பெற்றுக்கொள்ள....**
வாரீர் வந்து பெறுவீர்... தனங்கிளப்பு வீதியில்
**பொதிகை** புத்தகசாலை கொம்பியூட்டர் கிராபிக்ஸ்
இல. 03, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.(நவீனசந்தை அருகாமை)
14-01-2014 வரை ஞாயிறுகளிலும் வியாபாரம் இடம்பெறும்
பாடப்புத்தகங்கள் விசேட கழிவு விலையில்
வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்
Diary 2014
2014ம் ஆண்டு கலண்டர்கள், டயறிகள்...
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை புரியும்
T.P :0212270447
email : phothigai@gmail.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

எங்கும் மனிதன் விடுதலை பற்றிச் சிறிய அளவுக்குச் சிந்திக்கப்படுகின்றதோ, அங்கேதான் தியாகிகள் வணக்கம் பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது.
*ஹெர்பேட் ஸ்பென்சர்*

# புதன் பொய்கை A

உதயன் | டிசெம்பர் 18 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

எமது வாழ்க்கை என்பது பல அத்தியாயங்களைக் கொண் டதொரு புத்தகத்துக்கு ஒப்பானது. அங்கு மகிழ்ச்சி, கவலை, வேதனை, கோபம், ஏமாற்றம் ஆகியன கலந்து காணப்படும். எப்போதுமே மகிழ்ச்சியாக இருக்கும் மனிதர்கள் இவ்வுலகில் இல்லை. அதேவேளை தமது வாழ்நாள் பூராவும் தொடர் துன்பங்களை அனுபவிப்பவர்களும் இல்லை. எல்லாமே மாறி மாறித்தான் காணப்படுகின்றன.

# நிலையில்லாத உலகில் நிலை தடுமாறும் மனிதர்

ராஜராஜன்

மனிதர்கள் இந்த மண்ணை முதன்முதலில் எட்டிப்பார்க்கும் போதே அவர்களது இறுதிப் பயணமும் தீர்மானிக்கப்பட்டு விடுகின்றது. இந்த உலகில் தோன்றிய எவையுமே நிலைத்து நின்றதாக வரலாறு இல்லை. கால அளவுகளில் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் இறுதி முடிவு என்பது மாற்ற முடியாத ஒன்று என்பதுதான் யதார்த்தமாகும்.

மேலும் எமது வாழ்க்கை என்பது பல அத்தியாயங்களைக் கொண்டதொரு புத்தகத்துக்கு ஒப்பானது. அங்கு மகிழ்ச்சி, கவலை, வேதனை, கோபம், ஏமாற்றம் ஆகியன கலந்து காணப்படும். எப்போதுமே மகிழ்ச்சியாக இருக்கும் மனிதர்கள் இவ்வுலகில் இல்லை. அதேவேளை தமது வாழ்நாள் பூராவும் தொடர் துன்பங்களை அனுபவிப்பவர்களும் இல்லை. எல்லாமே மாறி மாறித்தான் அமைகின்றன.

மனிதர்களின் ஆயுள்காலம் 100 வருடங்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு சிலர் இதனையும் தாண்டி சில வருடங்கள் அதிகமாக வாழலாம். ஆனால் பெரும்பாலானவர்களுக்கு இதனை எட்ட முடிவதில்லை. ஆனால் எம்மில் பலர் தாம் ஆயிரம் ஆண்டுகள் இந்தவுலகில் வாழப் போகின்றவர்கள் போன்று நிலை தடுமாறி நடந்து கொள்கின்றனர். தமது மனம் போன போக்கில் வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர்.

சிலர் ஆசையின் வடிவமாகக் காணப்படுவர். கண்ணில் தென்படுகின்ற ஒவ்வொன்றையும் அடைந்து விட வேண்டுமென்றவெறியுடன் இவர்கள் அலைந்து திரிவார்கள். பாவ, புண்ணியங்களை இவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. தமது குறிக்கோள் நிறைவேற வேண்டும் என்பதற்காக எதைச் செய்வதற்கும் இவர்கள் தயங்க மாட்டார்கள். இறுதியில் இவர்களின் ஆசைகளே இவர்களை அழித்துவிடும்.

பெரியவர்கள் கூட 'ஆசைப்படு; அவற்றை அடைந்துவிடு' எனக் கூறுவார்கள். எந்தவொரு விடயத்திலும் நாம் செலுத்துகின்ற அக்கறையையே அவர்கள் ஆசை எனக் குறிப்பிட்டுள்ளார்கள். மனிதர்கள்தான் இதனைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்கள்.

வேறு சிலர் குறுக்கு வழிகளைப் பின்பற்றுவதால் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியுமென எண்ணிச் செயற்படுகின்றனர். வாய் கூசாமல் பொய் பேசும் இவர்கள் நல்லவர்கள் தொடர்பாகவும் தவறான தகவல்களைப் பரப்புவார்கள். இவர்களில் சிலர் தாம் பணிபுரியும் இடங்களில் மேலதிகாரியின் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்பதற்காக ஏனையவர்கள் தொடர்பாக அவரிடம் சமயம் பார்த்துத் தவறாகச் சொல்லி வைப்பார்கள். அந்த அதிகாரி தளம்பல் மனநிலை உள்ளவராக இருந்தால் இவரது முயற்சி வெற்றி பெற்று விடும். பாவம் அந்த அப்பாவிகள் பாதிப்புக்களை எதிர்கொள்வார்கள்.

சிலர் சிரிக்கச் சிரிக்கப் பேசுவார்கள். ஆனால் மனம் முழுவதும் நஞ்சு நிறைந்திருக்கும். சந்தர்ப்பம் வாய்க்கும் போது இவர்கள் தமது சுய ரூபத்தைக் காட்டுவார்கள். இவர்கள் தொடர்பாக நாம் அதிக விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும்.

எம்மில் பலர் ஊண், உறக்கத்தை மறந்து பொருள் தேடுவதிலேயே தமது ஆயுளைக் கரைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம் பொருள் தேடுவதைத் தவிர வேறு எந்த விதமான சிந்தனையும் எழுவதில்லை. மற்றவர்களிடம் இரக்கம் காட்டுவதை ஒரு பாவச் செயலாகவே இவர்கள் கருதுவார்கள். இவர்கள் பெரும் செல்வத்தைச் சேர்த்து விடலாம். ஆனால் மன நிம்மதி இவர்களை விட்டுத் தூர விலகியே நிற்கும்.

ஒரு சிலர் எப்போதுமே கோபத்தை வெளிப்படுத்திக் கொண்டிருப்பார்கள். ஏனையவர்கள் தமக்கு அடங்கி வாழ வேண்டும் என்பதே இவர்களின் குறிக்கோளாக இருக்கும். இதனால் வயது, தகுதி என்ற வேறுபாடுகளை ஒரு பொருட்டாக இவர்கள் மதிப்பதில்லை. தாம் சொல்வதை ஏனையவர்கள் மதித்து நடக்க வேண்டும். தமக்குக் கீழ்ப்படிபவர்களாக இருக்க வேண்டும். தாம் சொல்வதற்கு எதிர்வார்த்தை கூறக் கூடாது என இவர்கள் எதிர்பார்ப்பார்கள். இவர்கள் எப்போதுமே ஏனையவர்களுக்குத் தலையிடியாக விளங்குவார்கள்.

வேறு ஒரு சாரார் தத்துவ முத்துக்களை உதிர்த்துக் கொண்டிருப்பார்கள். தெய்வங்களின் மீது தமக்கு நம்பிக்கை இருப்பதாகவும் இவர்கள் காட்டிக் கொள்ள மாட்டார்கள். அப்போதுதான் தம்மையொரு முற்போக்குவாதியென இந்தச் சமூகம் ஏற்றுக் கொள்ளுமென்பது இவர்களின் நினைப்பாகும். இதற்கு ஏற்றாற் போன்று வெளித் தோற்றத்துக்குத் தம்மை மாற்றிக் கொள்வார்கள். கடவுள் நம்பிக்கை, சீதனம் என்பதெல்லாம் மூடப் பழக்கவழக்கம் என இவர்கள் வாதிடவும் செய்வார்கள். ஆனால் இவர்களது குடும்பங்களில் இத்தகைய வழக்கங்கள் இம்மியும் பிசகாது முறைப்படி இடம்பெறும். இதற்கு இவர்கள் கூறும் காரணம் விசித்திரமானது. 'எனக்கும் இதற்கும் ஒரு தொடர்புமில்லை. எல்லாவற்றையும் அவர்களே செய்கிறார்கள். இவற்றைத் தடுக்கும் சக்தி என்னிடம் இல்லை" மிகச் சுலபமாகத் தயாராக வைத்திருந்த காரணங்களைக் கூறி இவர்கள் தப்பித்து விடுவார்கள்.

உலகின் முதல் நிலை நாடான அமெரிக்காவில் கூட வீடு வசதிகள் இல்லாத நிலையில் பலர் நடைபாதைகளைத் தஞ்சமடைவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வளர்ந்து வரும் நாடுகள் என மார்தட்டிக் கொள்ளும் சீனா, இந்தியா ஆகிய நாடுகளில் வசிக்கும் பெருமளவு ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் ஒருவேளை உணவைக் கூட உண்ண முடியாத நிலையில் அல்லல்படுகின்றனர். எனவே வெளித்தோற்றத்தைப் பார்த்து நாம் எதனையும் எடை போட்டு விட முடியாது. ஆராய்ந்து பார்க்கும் போதுதான் உண்மைகள் வெளி வரும் எனவே ஏற்றத்தாழ்வு என்பது எங்குமே நிறைந்து காணப்படுகின்றது. மனிதர்கள்தான் தமது இயல்புக்கு ஏற்ற வகையில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.



நாம் எம்மால் இயன்ற வரை நல்லவர்களாக வாழ்வதற்கு முயற்சிப்போம். மற்றவர்களுக்கு எம்மால் இயன்றளவு உதவி செய் வோம். ஏனையோரைச் சங்கடப் படுத்துவதில் காணும் இன்பத்தை வெறுப்போம்.

எமது பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான குடும்பங்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றன. வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான வாய்ப்புக் கிடைத்ததால் மிகவும் ஏழ்மை நிலையிலிருந்த பல குடும்பங்கள் ஏற்றம் கண்டுள்ளன. இதுவொரு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஆனால் அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த சிலரின் நடவடிக்கைகள் வெறுப்பை ஊட்டுவனவாக அமைந்துள்ளன. இவர்கள் பழையதையெல்லாம் மறந்து ஏதோ பிறக்கும் போதே பணத்தில் உருண்டவர்கள் போன்று நடந்து கொள்கின்றனர். ஒரு குறிப்பிட்ட கிராமமொன்றைச் சேர்ந்த ஒருவர் குடிப் பழக்கமுள்ளவர். வருமானமும் அதிகமில்லாது அதிக குழந்தைகளையும் பெற்றுக் கொண்டதால் வறுமை இவரது வீட்டில் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. இதனால் இவரது மனைவி, பிள்ளைகள் சொல்லொணாத் துயரங்களை எதிர்கொண்டு வந்தனர். இந்த நிலையில் அவரது பிள்ளைகள் சிலர் வெளிநாடு சென்றனர். பணம் கிடைத்ததால் அந்தக் குடும்பத்தில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டன. குடும்பத் தலைவரும் பணத் தட்டிப்பாடின்றி விரும்பிய மதுவைச் சுவைத்து மகிழ்ந்தார். போதை தலைக்கேறியதும் "நான் இலங்கை ரூபாவுக்கு மது அருந்துவதில்லை. அமெரிக்க டொலரைக் கொடுத்தே அருந்துகின்றேன்" என்று உளறிக் கொட்டி வந்தார். இதுதான் மனிதர்களின் உண்மை முகம்.

நிலையில்லாத இந்த உலகில் வாழும் நாம் எம்மால் இயன்ற வரை நல்லவர்களாக வாழ்வதற்கு முயற்சிப்போம். மற்றவர்களுக்கு எம்மால் இயன்றளவு உதவி செய்வோம். ஏனையோரைச் சங்கடப் படுத்துவதில் காணும் இன்பத்தை வெறுப்போம்.

துன்பங்களையே எப்போதும் அசை மீட்டுக் கொண்டிருக்காது, இயலுமானவரை மகிழ்ச்சியாக இருப்பதற்கும் பழக்கப்படுத்திக் கொள்வோம். நாம் மட்டுமல்ல எம்மைச் சுற்றியிருப்பவர்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென மனதார எண்ணுவோம்.

# 'நொறுக்குத்தீனி' சாப்பிட்டால் மன அழுத்தம் குறையும்

நவீன உலகத்தில் நாம் நமது உடல் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறுகின்றோம். இதனால் நமது உடல் வலிமை குறைந்து பல நோய்கள் உண்டாகும் அபாயம் ஏற்படுகிறது.

எனவே, நமது உடல் ஆரோக்கியத்துக்கு மட்டுமல்லாது மனவலிமைக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இப்பொழுது எல்லோர் வாழ்விலும் மன அழுத்தம் என்பது அவர்களது வாழ்வின் ஒரு பகுதியாகவே ஆகி விட்டுள்ளது. மன அழுத்தம் ஒரு நோயாகவே மாறி மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் பிரச்சினைகளை உருவாக்குகின்றது.

மன அழுத்தம், மன மற்றும் உடல் வலுக் குறைகள் மற்றும் உணர்ச்சி வெளிப்பாடு போன்றவற்றுக்கு வழிவகுக்கும். இவ்வாறாக, மன அழுத்தம் பலரது வாழ்வில் பிரச்சினையாக மாறி வருகின்றது.

அதனால் இதனைத் தவிர்த்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மன அழுத்தம் மற்றும் அதன் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க பல வழிகள் உள்ளன. அதில் ஒன்று தான் நொறுக்குத்தீனி.





மன அழுத்தத்தை குறைக்கும் வழிகளில் நொறுக்குத் தீனி சாப்பிடுவது முக்கியத்துவம் பெறுகிறது.

சோகமாக இருக்கும்போது, உங்கள் மன அழுத்தத்தைக் குறைக்க ஏதாவது சாப்பிட வேண்டும். உங்கள் மன அழுத்தத்தைக் குறைக்கும் சிறந்த வழி நொறுக்குத் தீனி சாப்பிடுவது தான். இனிப்பு வகைகளும் மிகுந்த பலனை அளிக்கும்.

எனவே மன அழுத்தத்தைக் குறைக்கும் வழிகளில் நொறுக்குத் தீனி சாப்பிடுவது முக்கியத்துவம் பெறுகிறது. அத்தோடு புத்தகம் படிப்பது, தூங்குவது, பாட்டு கேட்பது, சுற்றுலா செல்லுவது போன்ற செயற்பாடுகள் மூலமும் மன அழுத்தத்தைக் குறைக்க முடியும்.




## ஈரலின் தொழிற்பாட்டை சீராகப் பேண....


மனித உடல் உறுப்புக்களில் இன்றியமையாத ஒன்றாக ஈரல் காணப்படுகின்றது. இன்று மனிதர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாக சர்க்கரை நோய் காணப்படுகின்றது. இத்தகைய நோய்களுக்கு ஈரலின் தொழிற்பாடு நலிவடைதல் பிரதான காரணமாக அமைந்துள்ளது.


இவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்த ஈரலின் தொழிற்பாட்டைச் சீராகப் பேணுவதன் மூலம் பல்வேறு வகையான நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

ஈரலின் தொழிற்பாட்டைச் சிறப்பாக பேணுவதற்கு சில எளிமையான வழிகளைத் தினமும் நாம் கடைப்பிடிப்பது அவசியமாகும். அவற்றில் சிலவற்றைநோக்குவோம். ஒவ்வொருநாளும் காலையில், எலுமிச்சைச் சாறு கலந்த நீரை அருந்த வேண்டும். எலுமிச்சையானது ஈரலில் நஞ்சு அகற்றும் ஆற்றலை அதிகரிக்கும். பீற்றூட், கரட், கோவா போன்றவற்றின் இலைகள் ஈரலைப் புதுப்பிக்கின்றன. குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு இரண்டு தடவை அவற்றை உணவில் சேர்த்துக் கொள்வது அவசியமானது. வெங்காயம், உள்ளி என்பவற்றை அதிகம் சாப்பிடுவதும் மிகவும் முக்கியமானது. நாளொன்றுக்கு 45 மில்லிக் கிராம் மஞ்சள் உட்கொள்வது நல்லது. போதுமான அளவு கனிமப்பொருள்களை உட்கொண்டால் ஈரலின் தொழிற்பாட்டைச் சிறப்பாகப் பேணலாம்.



பீற்றூட், கரட், கோவா போன்றவற்றின் இலைகள் ஈரலைப் புதுப்பிக்கின்றன. ஒரு நாளைக்கு இரண்டு தடவை அவற்றை உணவில் சேர்த்துக் கொள்வது அவசியமானது.





## கேடு தரும் பழக்கத்தை மாற்றினால் நன்மை

நாம் அனைவரும் ஒருசில பழக்கத்துக்கு அடிமையாகியிருப்போம். அப்படி நம்மை அடிமைப்படுத்தும் பழக்கங்கள் அனைத்துமே ஆரோக்கியத்துக்குக் கேடு விளைவிக்கக்கூடியவை. அதில் பெரும்பாலானோர் அடிமையாகியிருக்கும் செயல்கள் என்று சொன்னால், அது புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துதல் போன்றவைதான். இத்தகைய பழக் கங்கள் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடியவை. ஆகவே இவற்றை முற்றிலும் தவிர்ப்பது மிகவும் நல்லது.

இவை மட்டுமன்றி வேறு சில பழக்கங்களும் ஆரோக்கியத்துக்குக் கேடு விளைவிக்கின்றன. அந்த பழக்கங்கள் உயிருக்கு ஆபத்து நேராவிட்டாலும், ஆரோக்கியத்துக்குப் பிரச்சினையை ஏற்படுத்தும்.

அப்படி உடல் ஆரோக்கியத்துக்குக் கேடு விளைவிக்கும் சில பழக்கவழக்கங்களை நாம் தவிர்த்து வாழ வேண்டும்.

சாப்பிடும் போது வேகமாகச் சாப்பிடுவதும், தீய பழக்கம்தான். ஏனெனில் இவ்வாறு வேகமாகச் சாப்பிடும்போது, உடல் பருமன் ஏற்படக்கூடும். ஆகவே எப்போதும் சாப்பிடுவதாக இருந்தாலும், பொறுமையாக ரசித்து, ருசித்து சாப்பிட வேண்டும்.

இரவில் தாமதமாகத் தூங்கி, மறுநாள் காலையில் வேகமாக எழுந்து வந்தால், சோர்வுடன், கண்களில் வீக்கம் மற்றும் உடல் வலி போன்றவை எந்நேரமும் இருக்கும். அதனால் சந்தோஷமான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை இழக்கக்கூடும்.

'மேக்கப்'புடன் இரவில் தூங்கினால், சருமத் துளைகளில் அடைப்பு ஏற்படுவதோடு, கரும்புள்ளிகள், முகப்பருக்கள் சருமத்தில் ஏற்படும். எனவே இரவில் படுக்கும் முன், முகத்தை நன்கு கழுவி விட்டுத் தூங்க வேண்டும்.

சிலர் பதற்றம் அடைந்தாலோ அல்லது எதையேனும் யோசித்தாலோ, நகத்தைக் கடிக்க ஆரம்பித்துவிடுவர். ஆனால், அவ்வாறு நகங்களை கடித்தால், அது உடலில் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

தினமும் போதிய இடைவெளியில் உண்ணும் உணவுகளை தவிர்க்கக்கூடாது. குறிப்பாக காலை உணவை நிச்சயம் மறக்கக்கூடாது. அப்படி மறந்தால், செரிமான மண்டலமானது கடுமையான பாதிப்புக்கு உள்ளாகும்.

# 40 ஆண்டுகள் கூண்டு வாழ்க்கை: சீனாவில் பரிதாபம்



சீனாவை சேர்ந்த தாய் ஒருவர் தனது மகனை கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக கூண்டில் அடைத்து வைத்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் மத்திய ஹெனான் பகுதியில் உள்ள ஷென்சோ பகுதியைச் சேர்ந்தவர் பென்ங் வீகிங் (வயது 48). மனவளர்ச்சி குன்றிய பென்ங் தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை கூண்டிற்குள்ளேயே கழித்துள்ளார். இதற்குக் காரணம் இவரது பெற்றோர்தான். இவரது தந்தை தற்போது உயிரோடு இல்லை. 80 வயது மதிக்கத்தக்க தாய் தான் இவரை கவனித்து வருகிறார். தனது மகனின் பாது காப்பிற்காகவே அவனை கூண்டில் அடைத்து வைத்து வளர்த்தோம் என்று கூறுகின்றார் அவனது தாயார்.

இதுகுறித்து அவர் கூறுகையில் "அவனுக்கு 6 வயதாக இருந்தபோது ஏற்பட்ட தீவிர காய்ச்சலின் விளைவாக அவனது மூளை பாதிப்படைந்தது. அதைத் தொடர்ந்து அவனது மனநிலை பாதிக்கப்பட்டது.

வீகிங்கைப் பாதுகாப்பதற்காகவே அவனுக்கு கூண்டை வடிவமைத்தார் அவனது தந்தை. ஏனென்றால் அவன் சுதந்திரமாக வெளியே உலாவியபோது கத்தி போன்றப் பொருள்க ளால் தன்னைத் தானே தாக்கத் தொடங்கி னான். பல சமயங்களில் நடக்கத் தெரியாமல் கீழே விழுந்ததில் அவனது முகத்தில் காயம் ஏற்பட்டது. அது போன்ற அசம்பாவிதங்களில் இருந்து அவனைக் காப்பதற்காகவே, இத்தகைய இரும்புக் கூண்டு ஒன்றை வடிவமைத்தார்" என்று தெரிவித்துள்ளார்.

வயதாகிய காரணத்தால் அவர் தனது மக னைக் கவனித்துக் கொள்வதற்கு வேறு ஆள் ஒருவரைத் தேடியபோதுதான் இந்த உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது.



வயதாகிய காரணத்தால் அவர் தனது மக னைக் கவனித்துக் கொள்வதற்கு வேறு ஆள் ஒருவரைத் தேடியபோதுதான் இந்த உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

## 1,000 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட ஆழிப் பேரலை



சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட மிகப்பாரிய ஆழிப் பேரலை தொடர்பில் புதிய தகவல்கள் வெளி யாகியுள்ளன.

இந்த பகுதியில் ஆராய்ச்சியை மேற்கொண் டுள்ள புகழ்பெற்ற பூகோளம் மற்றும் கடல் சார்ந்த ஆராய்ச்சியாளர் பேரசிரியர் கெரி செய் இதனை தெரிவித்துள்ளார்.

சுமத்திராவில் ஏற்பட்ட நில அதிர்வின் விளைவாகவே 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஆழிப்பேரலை ஏற்பட்டது.

இந்தநிலையில் அதேபகுதியில் காணப்படும் குகை ஒன்று சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட ஆழிப்பேரலை ஒன்றின் விளைவாக ஏற்பட்டிருக்கலாம் என்று விஞ் ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆழிப்பேரலையானது இந்தியாவின் தென்பகுதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கக் கூடும் என்று நம்பப்படுகின்றது.

தமிழின வரலாற்றில், சங்க காலத்தில் ஏற்பட்ட பெரும் ஆழிப்பேரலை ஒன்றின் விளைவாக, கீழ் மதுரை எனப்படும் தற்போதைய மதுரை யின் உண்மையான பகுதி அழிவடைந்ததாக கூறப்படுகிறது.

அதனால் சங்கம் அமைத்து உருவாக்கப்பட்ட பல அரிய தமிழ் நூல்களும் கடலோடு இழுத் துச் செல்லப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.'

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆதாரங் களின் படி, ஒரு குறிப்பிட்ட அதிர்வெண்ணின் அடிப்படையில் இந்த பகுதியில் நில அதிர்வுகள் ஏற்பட்டு, குறிப்பிட்ட கால தவணையின் அடிப் படையில் ஆழிப்பேரலைகள் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி ஒரு சீரான கால இடைவெளிகளுக் குள், இந்த பகுதியில் ஆழிப்பேரலைகள் ஏற் படலாம் என்ற அடிப்படையில் தொடர்ச்சியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# வாய்ச்சுகாதார பிரச்சினைகளுக்கு தனித்துவமானதோர் தீர்வு

முதல் கோணல் முற்றிலும் கோணல் என்னும் ஓர் பழமொழி உங்களுக்கு நினைவிருக்கலாம். இப்போது நீங்கள் வாசிக்க ப்போவது கூட, கிட்டத்தட்ட அவ்வாறானதோர் விடயமாகும். இதனை நன்றாக வாசியுங்கள். சில நேரங்களில் இதனை வாசிக்கும் நீங்கள் கூட, ஆரம்பத்தில் பல்வேறுப்பட்ட பற்பசைகளை பாவித்து வாழ்நாள் முழுவதும் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய உங்கள் பல்வரிசையை, தேவையற்ற பல் சம்பந்தமான நோய்களுக்கு பலி கொடுத்தவராக இருக்கலாம். ஏனெனில் எமது நாட்டின் வளர்ந்தோரில் நூற்றுக்கு 90% வீதமானோர் பற்சிதைவுகளுக்கு உள்ளா கியுள்ளனர் என தேசிய வாய்ச் சுகாதார ஆய்வறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட, உலக சுகாதார சம்மேளனத்தின் அனுசரணையில், இலங்கை சுகாதார மற்றும் போஷனை அமைச்சினால் நடத்தப்பட்ட 2002/2003 தேசிய வாய்ச்சுகாதார ஆய்வுகளின் மூலம் தெரிய வந்தது என்ன? எமது சிறுவர்களில் 80% வீதமானோரும் வளர்ந்தோரில் 71% வீதமானோரும் பற்பசைகளால் பல் துலக்கினாலும், சிறுவர்களில் 52% வீதமானோரும் வளர்ந்தோரில் 90% வீதமானோரும் பற் சிதைவுகளுக்கு உள்ளாகியுள்ளதுடன், சிறுவர்களில் 75% வீதமானோரும் வளர்ந்தோரில் 90% வீதமானோரும் பல்லீறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தவிர மேலும் கவலையளிக்கும் விடயம் என்னவெனில், எம்மில் பெரும்பான்மையானோர் தாம் வாய் சம்பந்தமான நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளதை அறியாத வர்களாய் இருப்பதாகும்.

எமது அழகிய புன்னகையை எம்மிடமிருந்து பறித்துக் கொள்ளக்கூடிய பிரதான வாய்ச்சுகாதார பிரச்சினைகளாக பற்சிதைவு மற்றும் பல்லீறு பாதிப்புக்களை குறிப்பிடலாம். எமது வாயில் பெருகும் தீங்குள்ள பக்றீரியாக்கள் மற்றும் பற்களில் காவி படிதல் பாதிப்புகளுக்கான முக்கிய காரணிகளாக கருதப்படுகின்றன. எந்திர மயமான உலகில், எந்திரம் போல் சுழன்று சுழன்று வேலை செய்யும் நாம் உட்கொள்ளும் உணவுகளும், கடைபிடிக்கும் உணவு பழக்க வழக்கங்களும் வாய்சுகா தாரத்திற்கு அவ்வளவு சிறப்பானவை அல்ல. அதிகம் சீனி சேர்க்கப்பட்ட உணவுகள், இனிப்புப் பண்டங்கள், இனிப்பான பானங்கள் மற்றும் துரித உணவுகள் போன்றவற்றிற்கும் வேகமாக மாறி வருகின்றோம். உண்மையிலேயே எமது வாய் பல மில்லியன் கணக்கான பக்றீரியாக்களுக்கு வாசஸ்தலமாக உள்ளது. வாயினுள் பக்றீரியாக்களின் செயற்பாட்டினால் நித்தமும் பற்களில் காவி உருவாகி படிந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் வாயில் இருக்கும் பக்றீரியா சீனி மற்றும் காபோஹைதரேட்டை அமிலமாக மாற்றுகின்றது. அந்த அமிலம் காரணமாக எமது அழகிய புன்னகைக்கு காரணமான பற்களை தாங்கி கொண்டிருக்கும் முரசு கரைய தொடங்குகின்றன. பல்வரிசைக்கு பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. இதுவே பற்சிதைவுகளுக்கான ஆரம்ப மாகும். இதுதவிர பல்லீறு பாதிப்புகள் மூலமும் பல் முரசுகள் கரையவும் தொடங்கி மேலும் பற்களில் படியும் காவிகள் காரணமாக பல் முரசுகள் சிவந்து, வீங்கி இரத்த கசிவுகளுக்கு உட்படுகின்றது. இந்த நிலைமை பல் முரசு கரைவதை எடுத்துக் காட்டுகின்றது. இந்த நிலைமை சில காலத்திற்கு தொடர்ந்து, பின் பல் முரசு கரைந்து, பற்கள் பலமிழந்து இறுதியில் விழும் நிலைக்கு தள்ளப்படுகின்றன.

உணவு உண்ட அனைத்து நேரங்களிலும் பல்துலக்கி வாயை சுத்தப்படுத்தி கொள்வது, நடைமுறையில் சாத்தியமற்ற ஓர் செயற்பாடாகும். எனினும் தீங்குள்ள பக்றீரியாக்களை அழித்து ஒழிக்கக்கூடிய ஓர் பற்பசையை நீங்கள் பாவிப்பவராயின் இந்த குறையை நிவர்த்தி செய்துக்கொள்ளலாம். பேராதனை பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவ பீடத்தில்

> நாட்டில் பெரும்பாலானோர் பற்பசையால் பல் துலக்கினாலும், சிறுவர்களில் 52% வீதமானோரும் வளர்ந்தோரில் 90% வீதமானோரும் பற் சிதைவுகளுக்கு உள்ளாகியுள்ளதுடன், சிறுவர்களில் 75% வீதமானோரும் வளர்ந்தோரில் 90% வீதமானோரும் பல்லீறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நடத்தப்பட்ட விஞ்ஞான ரீதியான மருத்துவ ஆய்வுகளில், லிங்க் சுதந்த மூலம் நாளுக்கு இருமுறை தவறாது பல்துலக்கினால், பற்சிதைவுகள் மற்றும் பல்லீறு பாதிப்புகளுக்கு பிரதான காரணமான பக்றீரியாக்களையும் பற்களில் காவிபடிதலையும் வெகுவாக கட்டுப்படுத்தலாம் என உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும் லிங்க் சுதந்த பாவிப்பதன் மூலம், பல்முரசில் இரத்தம் கசிவதை வெகுவாக குறைக்கலாம் என உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்த தகவல் சர்வதேச பிரபல்யம் வாய்ந்த மருத்துவ சஞ்சிகையான Ceylon medical journal இன் 2011 மார்ச் மாத சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(Reference: 56/ 5-9)

லிங்க் சுதந்த பற்பசைக்கு இந்த ஆற்றல் கிடைக்க காரணம் யாதெனில், எமது முன்னோர்கள் தமது வாய்ச் சுகாதாரத்தை பாதுகாப்பதற்காக பயன்படுத்திய ஆயுர்வேத ஔடதங்கள் மற்றும் தேசிய மருத்துவ சிகிச்சை முறை குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய மருத்துவ மூலிகைகள் போன்றவை இந்த பற்பசையில் அடங்கியுள்ளமையாகும். இந்த அனைத்து ஔடதங்களும் பற்சிதைவு மற்றும் பல்லீறு பாதிப்புக்களுக்கு காரணமான தீங்கான பக்றீரியாக்களை அழிக்கக்கூடியன என பெரும்பாலான நாடுகளில் வெவ்வேறாக நடத்தப்பட்ட விஞ்ஞான ரீதியான ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்ட மைக்கான ஆதாரங்கள் உள்ளன. பல்முரசு நோய்களை நீண்ட காலத்திற்கு கவனிக்காமல் வைத்திருத்தல், இருதய மற்றும் நுரையீரல் சம்பந்தமான தாக்கங்களுக்கு பெருமளவில் வழியமைக்கலாம் எனவும் ஆய்வுகளின் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆரோக்கியமான உடல் சுகாதாரத்திற்கு மட்டுமல்லாது, அழகிய தோற்றத்திற்கும் வாய்ச்சுகாதாரம் முக்கிய பங்காற்றுகின்றது. ஆரோக்கியமான வாய்ச்சுகாதார பழக்க வழக்கங்களை பேண விரும்பும் நீங்கள், இலங்கையில் தைரியமாகவும் நம்பிக்கையுடனும் கொள்வனவு செய்யக்கூடிய மருத்துவ ரீதியில் நிரூபிக்கப்பட்ட சிறப்பான பற்பசை லிங்க் சுதந்தவாகும்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின், மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்ட ஆய்வுகளுக்கு அமைய, தீங்குள்ள பக்றீரியாக்கள், பல்லீறு பாதிப்புகள் மற்றும் பற்களில் காவி படிதலை கட்டுப்படுத்தும்




தனித்துவமான பற்பசை லிங்க் சுதந்தவாகும்

ரூ.50 இலிருந்து

சுதந்த



## விடுதியாக மாறுகின்றது சிறை

ஜேர்மனியில் ஒரே ஒரு கைதிக்காக மட்டும் இயங்கி வந்த சிறைச்சாலை தற்போது விடுதியாக உருவெடுக்க உள்ளது.

ஜேர்மனின் வடக்கு வெஸ்ட்பாலியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு மனநிலை பாதித்த கைதிகளுக் காக சிறைச்சாலையொன்று அமைக்கப்பட்டது.

அதன் பராமரிப்பிற்காக 1.3 மில்லியன் யூரோ செலவாகியுள்ளதுடன், பாதுகாவலர் கள், 20 பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வருடமொன்றுக்கு 2 மில்லியன் யூரோ செலவாகிறது. மேலும் சிகிச்சை, உணவு, மருத்துவ செலவு மற்றும் போக்குவரத்து செலவென 1.75 மில்லியன் யூரோ செலவாகிறது.

இங்கு ஒரே ஒரு கைதி மட்டுமே இருந்ததால், ஒருவருக்காக மட்டும் ஏன் இவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்ற விவாதம் நாடாளுமன்றத்தில் எழுந்தது. அதையடுத்து 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இந்தச் சிறைச்சாலை முடப்பட்டது.

தற்போது அந்தச் சிறைச்சாலைக் கட்டடங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி அதை நட்சத்திர விடுதியாக மாற்றுவதற்கு ஜேர்மனி அரசு தீர்மனித்துள்ளது.

அதற்கான வேலைத் திட்டங்களையும் ஆரம் பித்துள்ளது அந்நாட்டு அரசு.

## பூனைகளுக்கான நட்சத்திர விடுதி



பிரான்ஸில் முதன்முறையாக பூனைகளுக்காகவே விடுதி ஒன்று திறக்கப்பட் டுள்ளது. பிரான்ஸின் பரிஸ் நகரில் Aristide என்ற பெயரில் இந்த விடுதி திறக்கப்பட்டுள்ளது. வேலை விடயமாக அல்லது விடுமுறைக்காக வெளியூர் செல்பவர்கள் தங்கள் பூனையை இங்கே விட்டு செல்லலாம் என்ற நோக்கத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

அங்கு பூனைகளுக்கென பிரத்தியேக உணவுகள், படுத்து உறங்குவதற்கு பஞ்சு மெத்தைகள், விளையாடுவதற்காக மெத்தை மேடைகள் மற்றும் Cat Games என்ற பூனை விளையாட்டுகள் போன்ற பல்வேறு அம்சங்கள் உள்ளன.

இது பூனைகளுக்கான ஐந்து நட்சத்திர விடுதி (five Star hotel) என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது. அதன் மேலாளர் வளர்த்து வரும் பூனையின் பெயரே இந்த விடுதிக்கும் சூட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




Water-Based WOOD CARE
மிருதுவான மற்றும் ஒரே சீரான ஒப்பனைக்கு
நிப்போ:.பிளெக்ஸ் ஸ்கிம் கோட் புட்டி.
நிப்போன் பெயின்ற் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்;
நிப்போலக் டவர்ஸ், இல.69ஏ, புத்கமுவ வீதி, ராஜகிரிய, இலங்கை.
தொ: 0114 356 900-8 ஃபெக்ஸ்: 0114 356 909
உடனடி அழைப்பு : பிரபாகர் – 077 1067766
ரூ.650/- தொடக்கம்
பாதுகாப்பு உறுதியானது
Nippolac®



www.senfin.com

இவ் அனைத்து வேலைகளையும் மிக இலகுவாக செய்திடலாம்

இப்பொழுது செங்கடகல பினான்ஸிலுள்ள உங்களது சேமிப்பிற்கு உயர் வட்டியும், கூடவே VISA டெபிட் கார்ட்டினையும் பெற்றிடுங்கள்




உங்கள் சேமிப்பிற்கு உயர் வட்டி 9.5%
*சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1% மேலதிக வட்டி

ஒரு வருடத்திற்கான நிலையான வைப்பிற்கு உயர் வட்டி 13.75%
*சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1% மேலதிக வட்டி

45 வருட கால அனுபவத்துடன் அசையாத ஸ்திரத்தன்மையுடன்

நவீன வசதிகளையும், உயர் அனுகூலங்களையும் பெற்றிட இன்றே செங்கடகல பினான்ஸினை நாடுங்கள்.

நிலையான வைப்புத் திட்டங்களுக்கான தற்போதைய வட்டி விகிதங்கள்

| காலம் | மாதாந்தம் | A.E.R. | முதிர்வுறும் போது | A.E.R. |
|---|---|---|---|---|
| 1 மாதம் | | | 12.00% | 12.68% |
| 3 மாதங்கள் | | | 12.75% | 13.37% |
| 6 மாதங்கள் | | | 13.00% | 13.42% |
| 1 ஆண்டு | 12.75% | 13.52% | 13.75% | 13.75% |
| 2 ஆண்டுகள் | 12.75% | 13.52% | 14.25% | 13.36% |
| 3 ஆண்டுகள் | 12.75% | 13.52% | 14.25% | 12.60% |
| 4 ஆண்டுகள் | 12.75% | 13.52% | 14.50% | 12.12% |
| 5 ஆண்டுகள் | 12.75% | 13.52% | 14.75% | 11.68% |

விபரங்களை அறிய: ஈஷா - 077 3 090 370, நுவன்திகா - 077 3 090 350, ஷெரின் - 077 3 090 356

*நிபந்தனைகள் உண்டு

செங்கடகல பினான்ஸ்
நேர்த்தி தவறாதது

SL BBB + (lka), OUR RATING IS BY FITCH

கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு 29.12.1968. 2011 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் அளிக்கப்பட்டது. நிறுவனப் பதிவு இல. PB 238 PQ

பதிவுபெற்ற அலுவலகம்: இல.267, 2வது மாடி, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: (011) 2 301 301 தொலைநகல்: (011) 2 301 937 மின்னஞ்சல்: senk@senfin.com

# நாவலை திரைக் கதையாக மாற்றி வெற்றி கண்டவர் மகேந்திரன்

ஆரம்ப கால தமிழ் சினிமாவை அடுத்த கட்ட நகர்வுக்கு எடுத்துச் சென்ற பிர பலமான இயக்குநர் வரிசையில் மகேந்திரனும் பெயர் சொல்லும் அள வில் பிரசித்தி பெற்று விளங்கினார். திரைக் கதை எழுதுவதில் இருந்து வசன கர்த்தா வாகவும் இருந்து இயக்கு நராக உயர்ந்தவர். இவரின் இயக்கத்தில் வெளிவந்த 1978 இல் 'முள்ளும் மலரும்' 1979 இல் 'உதிரிப் பூக்கள்' என்ற இரு படங் களுமே இவரை சினிமா உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது என லாம். அந்தளவுக்கு இரு படங்களும் கூடுத லான நாள்கள் திரையரங்கு களில் ஓடியது மட்டுமல்ல மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண் டும் அள வுக்கு ரசிகர்களை ஈர்த்தன.

தமிழ் நாடு இளையான்குடி என்ற இடத்தில் 1939 இல் பிறந்த இவர் நடிகர் எம்.ஜி.ஆர். மூலமாக திரையுலகில் நுழைந்தார். இளை யான் குடியில் பள்ளிப் படிப்பை முடித்த மகேந் திரன் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இண் டர் மீடியட் படித்தார். அதன் பிறகு காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம் படித்துக் கொண்டு கையெழுத்து பத்திரிகை ஒன்றையும் நடத்தினார். கல்லூரி நாடகங்களி லும் பங்கு பற்றினார். பின்னர் திரு வல்லிக் கேணி சட்டக் கல்லூரியில் சட்டம் படித்தார். 7 மாதங்கள் கடந்த நிலையில் தொடர்ந்து படிக்க பண வசதி இல்லாமையால் படிப்பை பாதியில் இடை நிறுத்தி விட்டு தனது ஊருக்குத் திரும்பி விட்டார். இந்தக் காலப் பகுதியில் இன முழக்கம் பத்திரி கையில் உதவி ஆசிரியராக தொழில் புரிந்தார். அந்தக் காலப் பகுதியில் ஒரு நாள் எம்.ஜி. ஆருடன் சந்திப்பு ஏற்பட்டது. மகேந்திரனுக்கு வேலை தருவதாக எம்.ஜி.ஆர். இரா யப் பேட்டை லாயிட்ஸ் வீதியில் அமைந்த தனது வீட்டுக்கு அழைத் தார். தனது வீட்டில் தனி அறை ஒதுக் கிக் கொடுத்தார். பின்னர் கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலை எடுத்து வந்து மகேந்திரனிடம் கொடுத்து நான் இதை படமாக எடுக்கப் போகிறேன். நீங்கள் திரைக் கதை எழுத வேண்டும் என்று கூறினார். அந்த நாவலுக்கான திரைக் கதையை 3 மாதத்தில் மகேந்திரன் எழுதி முடித் தார். அதற்காக 100 ரூபாயை எம்.ஜி.ஆர். கொடுத்தார். சிறந்த நாடகங்களை எழுதியதால் சிவாஜி கணேசனிடம் இருந்து மோதி ரத்தைப் பெற்றார். இவரின் திறமை யைப் பார்த்த எம்.ஜி.ஆர். தான் நடித்த காஞ்சித் தலைவன் என்ற படத்தின் இயக்குநர் காசிலிங்கத்திடம் உதவி இயக்குநராக மகேந்திரனைச் சேர்த்து விட்டார். 1966 ஆம் ஆண்டு 'நாம் மூவர்' என்ற படத்துக்கு கதை எழுதி னார். படம் வெற்றி பெற்றது. தொடர்ந்து சபாஷ் தம்பி, பணக்காரப் பிள்ளை ஆகிய படங்களுக்கும், சிவாஜி கணே சன் நடித்த படமான நிறைகுடம் படத்துக்குக் கதை எழுதினார். தங்கப் பதக்கம் நாடகத்தை படமாக எடுத் தனர். கதை வசனம் இவரே எழுதி னார். இந்தப் படம் வெற்றியடைந்ததால் தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளிலும் டப்பிங் செய் யப்பட்டு இந்தப் படம் வெளியானது.

அதனைத் தொடர்ந்து திருடி என்ற படத்துக்கு கதையும், மோகம் முப்பது வருஷம் படத்துக்கு திரைக் கதை வசனமும் எழுதினார். ஆடு புலி ஆட் டம், வாழ்ந்து காட்டுகிறேன், வாழ்வு என் பக்கம், ரிஷி மூலம், தையல் காரன், காளி, அவளுக்கு ஆயிரம் கண்கள், சக்கரவர்த்தி, சொந்தமடி சொந்தம், நம்பிக்கை நட்சத்திரம் ஆகிய படங்களுக்கு கதை வசனமும், பருவ மழை, பகலில் ஒரு இரவு, கள்ளழகர், கங்கா, ஹிட்லர் உமாநாத், சேலஞ்ச் ராமு (தெலுங்கு), தொட்டதெல்லாம் பொன்னாகும் ஆகிய படங்களுக்கு கதையும் எழுதினார். அதன் பின்னர் முள்ளும் மலரும் படத்தை எடுத்தார். அந்தப் படத்தின் கதை, வசனம், இயக்கம் இவரே இந்த ஒரே படத்தின் மூலம் மிகச் சிறந்த இயக்குநர் என்று புகழும் பெற்றார்.

இந்த பட வெற்றிக்குப் பின்னர் படத் தயாரிப்பாளர் கள் மகேந்திரனை மொய்த்தார்கள். ஆனால் சினிமாத் தனம் இல்லாமல் யதார்த்தமான கதை ஒன்றை படமாக்க விரும்பினார். இதற் காக தன் மகள் பெயரில் டிப்பிள் கிரியேஷன்ஸ் என்ற படக் கம்பனியை ஆரம்பித்தார். தனது மாணவப் பருவத்திலேயே கல்வி, புதுமைப்பித் தன், த.ஜானகிராமன் போன்ற எழுத் தாளர்களின் கதைகளை விரும்பிப் படித்தவர். புதுமைப் பித்தனின் குறு நாவலில் வரும் ராஜா, குஞ்சு என்ற இரு குழந்தைகளை வைத்தே புதிதாக ஒரு கதையை 1979 ஆம் ஆண்டு உருவாக்கினார் மகேந்திரன். அது தான் உதிரிப் பூக்கள்.

இயக்கமாக யதார்த்தமாக எடுக்கப்படும் கலைப் படங்கள் ஆமை வேகத்தில் நகர்வதும், வசூலில் தோல்வி அடை வதும் வழக்கம். படம் யதார்த்த மாகஇருக்கவேண்டும். அதேசமயம் அனைவரும் ரசிக்கும் படியாகவும் இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார். இந்த விஷப் பரீட்சையில் மகேந்திரன் வெற்றி பெற்றார். 1982 இல் இவர் இயக்கிய நெஞ்சத்தைக் கிள்ளாதே படமும் பெரும் வரவேற் பைப் பெற்றது. அதிகாலைப் பனி மூடத்தில் 'பருவமே புதிய ராகம் பாடு' என்ற பாடல் பின்னணியில் ஒலிக்க மோகனும், சுகா சினியும் வோக்கிங் செல்லும் காட்சி முதன் முதலில் பட மாக்கப்பட்டது. இந்தப் படத்தின் ஆரம் பக் காட்சிக்கே பெரும் பாராட்டைப் பெற் றவர் மகேந்திரன். மிகுதி காட்சியமைப் புக்களை சொல்லவா வேண்டும்.


இதே ஆண்டில் சிறந்த மாநில மொழித் திரைப் படத்துக்கான தேசிய விருதை இந்தப் படம் பெற்றது. 1982 இல் மொஸ்கோவில் நடந்த இந்திய கலாசார விழாவிலும் நெஞ்சத்தைக் கிள்ளதே. படம் திரையிடப்பட்டது. ரஷ்ய அரசு இந்தப் படத்தை வாங்கி அந்த நாட்டின் தியேட் டர்களில் திரையிட்டது. 1980 பூட்டாத பூட்டுகள், 1981 ஜானி, 1981 நண்டு, 1982 மெட்டி, 1982 நெஞ் சத்தைக் கிள்ளாதே, 1982 அழகிய கண்ணே, 1984 கை கொடுக்கும் கை, 1986 கண்ணுக்கு மை எழுது, 1992 ஊர்ப் பஞ்சா யத்து, 2006 சாசனம் போன்ற படங்களுக்கு திரைக் கதை வசனம் எழுதி இயக்கினார்.

நாவலை திரைக் கதையாக மாற்றி அமைப் பதில் வெற்றி கண்ட இயக்குநர் மகேந்திரன் இவர் தனது மகன் ஜானையும் திரைப்படத் துறைக்குள் இயக்குநராக இறக்கி விட்டிருக்கிறார். ஜான், விஜய் நடித்த சச்சின் படத்தை இயக்கி யிருக்கிறார். நண்டு, மெட்டி, எனக்கு நானே எழுதிக் கொண்டது முதலான புத்தகங்களை மகேந் திரன் எழுதியுள்ளார். உதிரிப்பூக்கள் திரைக் கதை வசனம் புத்தகமாக வெளிவந் துள்ளது. போர் நடந்த காலப் பகுதியில் மகேந் திரன் வன்னிக்கு வந்த போது விடு தலைப் புலிகளின் தலைவர் வே.பிர பாகரனை சந்தித்து உரையாடி விட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது, பிரபாகரன் தன்னுடன் சினி மாவைப் பற்றியே பேசினார். அதாவது பிரபாக ரன் யாருடன் எதைக் கதைக்க வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். அதனால் என்னுடன் அரசியல் பேசவில்லை. சினிமாவைப் பற்றிப் பேசினார் என்றார். வன்னியில் இருந்து ஈழத்து சினிமாவை வளர்ப்பதற்கு முயற்சி எடுத்தார். ஆனால் அங்கு நடந்த போரினால் அது கை கூடாமல் போய் விட்டது.

*பார்வையாளன்.*



## தேடலின்றி வாழ்க்கை இல்லை



'தேடல் உள்ள ஒருவனுக்கே தினமும் பசியிருக்கும்' என்ற சினிமாப் பாடலிற்கமைய 'தேடல்' முக்கியமானதொன்றாக விளங்குகின்றது. 'ஒரே புத்தகத்தை மட்டும் படித்தால் போதாது. தேடலும் அவசியம் தேவை.

மாணவர்களாகிய நாம் நூலகத்திலே பல்வேறு நூல்களைத் தேடிப் படிக்கலாம். மற்றும் செய்தித் தாள்களில் வரும் செய்திகளையும் தேடிப் படிக்கலாம். எவனொருவன் நல்ல நூல்களை தேடித் தேடிப் படிக்கின்றானோ அவனே வாழ்க்கையில் நல்ல நிலையை அடைவான் எனவும் கூறலாம்.


சி.கஜானி தரம்-9டி
கிளி/இந்துக் கல்லூரி.

## அறிந்து கொள்வோம்

1. மாட்டின் வயதை அறிவது எப்படி?
   பற்களைக் கொண்டு
2. தென்னை மரத்தின் வயதை அறிவது எப்படி?
   வரைகளைக் கொண்டு
3. பசுவுக்கு எத்தனை இரைப்பைகள் உள்ளன?
   நான்கு
4. சிறிய இதயம் கொண்ட மிருகம்?
   சிங்கம்
5. தேனீக்களுக்கு எத்தனை கண்கள்?
   நான்கு
6. தோலினால் சுவாசிக்கும் உயிரி எது?
   மண்புழு
7. நாய்க்கு எத்தனை பற்கள்?
   42
8. எந்தப் பறவை மிகப் பெரிய முட்டையிடும்?
   தீக்கோழி
9. உப்பை விரும்பிச் சாப்பிடும் விலங்கு எது?
   முள்ளம்பன்றி
10. மூக்கில் பல் உள்ள விலங்கு எது?
   முதலை


த.சங்கீதன், தரம்-7ஈ
யா/இந்துக் கல்லூரி.

## தெரிந்து கொள்வோம்



நிறத்தை நிர்ணயிக்கும் மெலனின் சுரப்பி, சில சிறுத்தைகளுக்கு மிக அதிகமாகச் சுரப்பதால் அவை கறுப்பு நிறத்தில் இருக்கும். அவற்றுக்கு கருஞ்சிறுத்தைகள் என்று பெயர்.








எஸ்கிமோக்களின் வீடுகளை இக்ளு என்பர். குளிர்காலத்தில் வெவ்வேறு பகுதிகளுக்கு வேட்டையாடச் செல்லும்போது. தாற்காலிகமாகக் கட்டிக் கொள்ளும் வீடுகள்தான் இக்ளு எனப்படும். மற்ற நேரங்களில் திமிங்கல எலும்பு. விலங்குகளின் தோல், மரத்துண்டுகளைக் கொண்டு வீடு கட்டி, தரையில் புற்களைப் பரப்பிக் கொள்வர்.



வட அமெரிக்காவில் வாழும் மூஸ் என்ற மான் இனம் ஒவ்வொரு குளிர் காலத்திலும் தன்னுடைய கொம்புகளை உதிர்த்து விடும். பின்னர் வசந்த காலத்தில் மறுபடியும் கொம்பு வளர்ந்து விடும்.



ஐரோப்பாவின் ஆல்ப்ஸ் மலையில் வசிக்கும் அல்பைன் ஐபெக்ஸ் என்ற மலை ஆடுகள் செங்குத்தான பாறைகளில் ஏறுவதில் கை தேர்ந்தவை. சுமார் 15,000 அடி உயரத்தில்தான் இவை வசிக்கும்.



## ஏன் சிரிக்கிறாய்

ஒரு பண்ணையில் ஆண் கழுதையொன்றும், பெண் கழுதையொன்றும் வளர்க்கப்பட்டு வந்தன. ஆண் கழுதை பக லில் கடுமையாக உழைக்கும். பண்ணைக்குள் கொண்டு செல்ல வேண்டிய சரக்குகளை முதுகில் சுமந்து செல்லும். மாலை தங்குமிடம் வந்ததும் அங்கு கிடக்கும் காய்ந்த புல்லை மேய்ந்து பசியாறும். பெண் கழுதை எந்த வேலை யும் பார்ப்பதில்லை. பசுமையாகக் கிடைக்கும் புல் லைத் தின்று விட்டு, தொழுவத்தில் தூங்கி எழும். மிகவும் மகிழ்ச் சியாக, வேலை பார்க்காமல் பொழுதை கழித்தது அது. ஒருநாள் உழைத்த களைப்புடன் சோர்வாக ஆண் கழுதை வந்து சேர்ந்தது. களைப்பின் மிகுதியால் வந்தவுடனே படுத்தும் விட்டது. ஆண் கழுதை யைப் பார்த்து பெண் கழுதை பரிதாபப்பட்டது. 'உன்னைப் பார்க்கவே பாவமாக இருக்கிறது!' எனக் கிண்டல் செய்தது. 'என்ன செய்வது? என் நிலை அப்படி. உழைத்தால் தான் முதலாளி விடுவார்!' என்றது ஆண் கழுதை. இதைக் கேட்டதும் பெண் கழுதை சிரித்தது.


'ஏன் சிரிக்கிறாய்?' என்றது ஆண்கழுதை 'சிரிக்காமல் என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? நான் மட்டும் கஷ்டப்பட்டு வேலை செய்கிறேனா?' என்றது பெண் கழுதை.

ஆண் கழுதை அதை ஆச்சரியத்துடன் பார்த்தது. 'ஆமாம்... நானும் இதைப் பற்றி உன்னிடம் கேட்க வேண்டும் என்று தான் நினைத்திருந்தேன். அதை முதலில் கூறு!' என்றது ஆண் கழுதை.

'பண்ணையாள் வந்து உன் கயிறினை அவிழ்த்து விட்டதும், உடனே நீ வேலை செய்யப் போய் விடுவாய். நான் அப்படிப் போய் விடமாட்டேன்!' என்றது பெண் கழுதை. 'பிறகு என்ன செய்வாய்?' என்றது ஆண் கழுதை. 'அப்படியே படுத்திருப்பேன். நான் எழ வில்லை என்றதும் சாட்டையால் நான்கு அடி அடிப்பான். பொறுத்துக் கொண்டு படுத்துக் கொள்வேன். பிறகு என்னை விட்டு விட்டுச் சென்று விடுவான்! என்றது பெண் கழுதை'. 'இவ்வளவு தானா!' ஆச்சரியமாகக் கேட்டது ஆண் கழுதை. 'ஆமாம்... நீயும் அதுபோல சண்டித்தனம் செய். உன்னையும் பண்ணையாள் விட்டுவிட்டுப் போய் விடுவான். எல்லாம் நம் கையில்தான் உள் ளது!' என அறிவுரை வழங்கியது பெண் கழுதை.

காலைப் பொழுது வேலைக்குச் செல்லும் நேரம் பண்ணையாள் வந்தான். வழக்கம் போல் ஆண் கழுதையைப் பிடித்துக் கொண்டு செல்ல முயன் றான். இன்று ஆண் கழுதை படுத்துக் கொண்டு சண்டித்தனம் செய்தது. பண்ணையாள் சாட்டை எடுத்து அடித்தும் பார்த்தான். ஆண் கழுதை எழுவதாய்த் தெரியவில்லை. பண்ணையாள் பல விதங்களிலும் முயற்சி செய்து பார்த்து விட்டு, முதலாளியிடம் சென்றான்.

'ஐயா, இந்த ஆண் கழுதை என்று மில்லாமல் சண் டித்தனம் செய்கிறது!' என்றான். 'சரி பரவாயில்லை. இன்றைக்கு ஆண் கழுதைக்கு ஓய்வு கொடுத்துவிடு. தினமும் நன்றாகச் சாப்பிட்டுக் கொழுத்து சும்மா இருக்கும், அந்தப் பெண் கழு தையை அடித்து இழுத்துப் போ!' என்றார். பண் ணையாளும் வந்து ஆண் கழுதை சாப்பிட பசும் புல்லைக் கொண்டு வந்து போட்டான். பிறகு, பெண் கழுதையை இழுத்துச் சென்று வேலையில் ஈடுபடுத் தினான். கெட்டதைச் சொல்லிக் கொடுக்கப் போய் தன்னுடைய பிழைப்பே போய் விட்டதை எண்ணி மிகவும் வருந்தியது பெண் கழுதை.



# எம் எண்ணங்களும் செயல்களும் ஆழ்மனதின் பதிவுகள்

- இராம் மனோகர்


எமது எண்ணங்களும் செயல்களும் ஆழ்மனதில் பதிவுகளாகி விடுகின்றன. அவைகள் தக்க சூழ்நிலை வரும் போது கிளர்ந்தெழுந்து எண்ணங்களாக மலர்ந்து செயல் களைத் தூண்டுகின்றன. இந்தப் பதிவுகளை வித்துக்கள் என்றும் சம்ஸ்காரங்கள் என்றும் சொல்வார்கள். இந்த சம்ஸ்காரங்களைநாம்கட்டுக்குள்கொண்டு வர வேண்டுமானால் அவைகள் செயலாற்றும் விதத்தைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். எல்லா சம்ஸ்காரங்களும் ஒரே நிலையில் இருப்பதில்லை என்றும் அவை ஐந்து நிலைகளில் இருப்பதாகவும் பதஞ்சலி முனிவர் கூறுகிறார். அவை:-

*1. மந்த நிலை(ப்ரஸுப்தம்),*
*2. கிளர்ந்த நிலை(உதாரம்),*
*3. அமுக்க நிலை(விச்சின்னம்),*
*4. உறை நிலை(தனு),*
*5. வறுத்த விதை நிலை(தக்க பீஜம்) என்பனவாம்.*

இப்பொழுது இவை குறித்து தெரிந்து கொள்வோம். முதலில் படிக்கும் போது கொஞ்சம் புரியாதது போலத் தோன்றினாலும், சித்தர்கள் சொல்வது போல மீண்டும் மீண்டும் படிக்கும் போது தெளிவாகப் புரிய வரும்.
மந்த நிலையைப் பொறுத்தவரை சம்ஸ்காரங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ள விதையைப்போல செயலற்ற நிலையில் இருக்கின்றன. அதாவது நாம் பிறக்கும்போது நமது பழைய சம்ஸ்காரங்களோடு தான் பிறக்கிறோம். எனினும் நாம் குழந்தையாக இருக்கும் போது சில சம்ஸ்காரங்கள் மட்டுமே செயலுக்கு வருகின்றன. மற்றவை மந்த நிலையில் செயலற்று இருக்கின்றன. நாம் வளர வளர ஒவ்வொன்றாக செயல்படத் தொடங்குகின்றன.
இதில் முக்கியமான மற்றொரு விஷயம் என்னவென்றால் எமது சூழ்நிலைகளும் சம்ஸ்காரங்களைத் தூண்டுவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. அலைவரிசை என்கிறார்களே அது போலஒத்த அலைவரிசை உடைய சூழல் அமையும் போது அதை ஒத்த சம்ஸ்காரங்கள் கிளர்ந்தெழுந்து எண்ணங்களை உருவாக்கிச் செயற்படத் தூண்டுகின்றன. எனவே நல்ல சூழலில் வசிக்கும் மனிதனுக்கு நல்ல எண்ணங்களையும், செயல்களையும் தூண்டும் சம்ஸ்காரங்களே செயலுக்கு வரும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதற்கேற்றவாறு வீட்டு சூழலும், சமுதாய சூழலும் அமைய வேண்டும். அவ்வாறு அமையாதவர்கள் அத்தகைய சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இயம, நியமங்கள் தரப்பட் டுள்ளன. கிளந்த நிலையில் சம்ஸ்காரங்கள் சுதந்திரமாக கிளர்ந்தெழுந்து செயற்படுகின்றன. சில வகையான சூழல்களில் எம்மிடம் மறைந்துள்ள மனப்பாங்குகளெல்லாம் வெளிப்படுகின்றன.
இதைக் கட்டுப்படுத்த வல்லவர்கள் சமூகம் அங்கீகரிப் பவைகளைத் தவிர மற்றவற்றை அமுக்கி விடுவார்கள். மற்றவர்கள் எண்ணங்களின் போக்கில் போய் துன்பப்படுவார்கள். எனவேதான் "மனம் போன போக்கிலே போக வேண்டாம்" என்றார்கள். இவ்வாறு சமூக வாழ்வுக்கு ஒவ்வாத ஒதுக்கி அமுக்கப்பட்ட சம்ஸ்காரங்களையே அமுக்க நிலை என்பார்கள். மனதில் இரு பகுதிகள் உள்ளன. அதாவது உணர்வுப் பகுதி, உணர்வறு பகுதி என்று இரண்டு பகுதிகள். அதில் உணர்வறு பகுதியிலேதான் இந்த அமுக்க நிலை சம்ஸ்கராரங்கள் அடைக்கப்பட்டுக் கிடக்கின்றன. இது எரிமலை போன்ற மூன்றாவது நிலையாகும். உள்ளே அமுக்க நிலை சம்ஸ்காரங்கள் எரிமலைக் குழம்பைப் போல குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை அவைகளைவிட வலிமையான சம்ஸ்காரங்கள் அடக்கி, அமுக்கி வைத்திருக்கின்றன.
உதாரணமாக காமம் அல்லது பிற பாலினரோடு ஏற்படும் மோகம் காரணமாக தவறு செய்யாமல் இருக்கக் காரணம் பயமாகும். இந்தப் பயத்தை உருவாக்குவது அந்தக் காமத்தைத் தூண்டும் சம்ஸ்காரங்களை விட வலிமையான சம்ஸ்காரங்களாகும். அத்தகைய வலிமையான சம்ஸ்காரங்கள் செயற்படாத நிலையிலேதான் தவறு நிகழ்கின்றது. சிலர் மன நோயாளியாகக் கூட ஆகி விடுவார்கள். இதற்குக் காரணம் அமுக்க நிலை சம்ஸ்காரங்களுக்கும், வலிமையான சம்ஸ்காரங்களுக்கும் (கொஞ்சம் வலிமை குறைந்தவை) இடையில் ஏற்படும் போராட்டமே ஆகும். இத்தகைய போராட்டங்கள் எமது உணர்வறுபகுதியின்ஆழங்களில் நடப்பதால் எமக்குத் தெரிவ தில்லை. இதனால் எமது மனோசக்தி ஏராளமாக விரயமாகின்றது. தீவிர தியானப் பயிற்சி மற்றும் தற் சோதனைகளின் மூலமாகவே இதனைச் சரிப்படுத்த முடியும். ஏனென்றால் இந்தப் பயிற்சிகள் மூலமாகவே எம் மன ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள முடியும்.
அடுத்த உறை நிலை, இவ்வாறு அமுக்கப்பட்ட சம்ஸ் காரங்கள் உணர்வுப் பகுதிக்கும், உணர்வறு பகுதிக்கும் இடையில் உணர்வறு பகுதியின் மேற்பரப்பில் மிதந்து கொண்டிருக்கின்றன. அவை செயலற்று உறைந்த நிலையில் இருப்பதால் உறை நிலை என்கிறார்கள். ஆனால், எந்த நேரத்திலும் அவை மீண்டும் செயலுக்கு வந்து விடலாம்.
எனினும் மனோ சக்தியைப் பெருக்கிக் கொள்வதன் மூலம் அவற்றைக் கிளர்ந்தெழ விடாமல் செய்ய வேண்டும். உணர்வுப் பகுதியை வலிமைப்படுத்துவதன் மூலம் இதைச் செய்யலாம். ஆரம்ப நிலைச் சாதகர்களுக்கு இது ஒரு போராட்டமாகவே இருக்கும். ஆனால், விடா முயற்சியும், வைராக்கியமும் கொண்டு மன ஆற்றலைப் பெருக்குவதன் மூலம் உயர்ந்த உணர்வு நிலைகளை அடைந்து உறைநிலை சம்ஸ்காரங்களைக் கிளர விடாமல் செய்ய முடியும். அப்போது நாம் அடையும் அடுத்த கட்டமான இறுதி நிலை அதாவது வறுத்த விதை நிலை வாய்க்கும். சம்ஸ்காரங்கள் உறை நிலையில் தானே இருக்கின்றன என்று எண்ணினால் நாம் ஏமார்ந்து போவோம். ஏனென்றால், விதை சிவனே என்றுதான் கிடக்கும். ஆனால், தண்ணீர் பட்டுவிட்டால் முளை விட்டு விடும். அது போல உறை நிலை சம்ஸ்காரங்களுக்கும் தூண்டப்படக் கூடிய சூழல் வாய்த்து விடக்கூடும். அப்போது நமது சாதாரண சம்ஸ்காரங்களின் விளைவை விடமோசமானவிளைவுகளைஅவை ஏற்படுத்தி விடும். அதே விதையை நெருப்பில் வறுத்து விட்டோமானால் ! அவ்வளவுதான், அதற்குப் பிறகு எவ்வளவு தண்ணீர் விட்டாலும் முளைக்காது.
அது போலவே, துரிய நிலையை அடைந்து, உயர்ந்த ஆன்மிகப் பேரொளியைக் காணும் போது அந்தத் தூய அக்கினியில் இந்த விதைகளெல்லாம் வறுபட்டு விடுகின்றன. அதற்குப் பின்னர் இந்த சம்ஸ் காரங்கள் கிளர்ந்தெழுவதே இல்லை. அதாவது தொடர்ந்த ஆன்மிக அனுபவங்களின் மூலம் சாதகன் தன் ஆசைகளையும், உந்து வேகங்களையும், பழைய சம்ஸ்காரங்களையும் சுட்டெரித்து விடுகின்றான். எனவே சம்ஸ்காரங்கள் முழுவதையும் சுட்டெரித்து விட தியானமே சிறந்த ஒரே வழி.

# உதவி மருத்துவர்களாகும் தேனீக்கள்

எம்முடைய மோப்ப சக்தியை விட 100 மடங்கு நுகரும் சக்தி கொண்டவை தேனீக்கள். சில மைல்கள் தொலைவில் இருந்தே, குறிப்பிட்ட பூவின் வாசனையை அறிந்து கொள்ளும் திறமை பெற்றவை அவை. நாய்களின் மோப்ப சக்தியை வெடிகுண்டுகளை, போதை மருந்துகளைக் கண்டுபிடிக்க பயன்படுத்துகிறோம். அதேபோல கூர்மையான மோப்ப சக்தி கொண்ட தேனீக்களையும் நாம் பழக்கிப் பயன்படுத்தலாமா என்ற சிந்தனையின் விளைவு தான் தேனீ பயோசென்ஸார்.
இதை வடிவமைத்தவர் போர்த்துக்கல் நாட்டு வடிவமைப்பாளர் சுஸானா ஸோரெஸ். இப்போது தேனீக்களும் மருத்துவர் களின் உதவியாளராக இருக்கின்றன. சுஸானா ஸோரெஸ் தற்போது லண்டன் சவுத்பேங்க் பல்கலைக்கழகத்தில முதுநிலை பேராசிரியையாக இருக்கிறார். ஸோரெஸ் இதற்கென பிரத்தி யேகமாக கண்ணாடிக் குடுவை ஒன்றை உருவாக்கி இருக்கிறார். அதனுள் அடுக்கடுக்கான கோளங்கள் உள்ளன. துளை வழியாகச் செலுத்தப்படும் காற்றை நுகரும் தேனீக்கள் நெருங்கி வருவதை அல்லது விலகி ஓடுவதை வைத்து அளவீடுகள் நிர்ணயிக்கப் படுகின்றன. நுகரும் தேனீக்களுக்கு தண்ணீர் கலந்த இனிப்புகள் கொடுத்து ஊக்குவிக்கப்படுகின்றன.
நோய்களை பழக்கப்பட்ட தேனீக்கள் இனம் கண்டறிகின்றன. நோய்களைக் கண்டுபிப்பதற்காக மட்டுமே இவற்றை நான் உருவாக்கவில்லை. மனிதன் இயற்கை யோடு இயைந்து இருக்க வேண்டிய அவசியத்தை, எம்மால் உணரமுடியாத இதுபோன்ற சாத்தியக் கூறுகளை வெளிப் படுத்துவதுமே எனது நோக்கம் என மேலும் தெரிவிக்கிறார் ஸோரெஸ். இது சோதனையின் முதற் கட்டம் மட்டுமே. மேம்பட்ட கருவி இனி மேற்தான் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்கிறார் அவர்.



# என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?

"வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம், கடல் வீசுகின்ற காற்றின் உப்பின் ஈரம், தள்ளி வலை ஏற்றி வள்ளம் போகும், மீன் அள்ளி வர நீண்ட நேரம் ஆகும்" என்ற கவிஞர் புதுவை இரத்தின துரையின் பாடல், மீனவர்களின் வாழ்க்கையை அழகாகச் சொல்லும் ஒன்று. நாள் கணக்காக, இரவு பகலாக, படகில் சென்று கடலில் தரித்து நின்று மீன் பிடிக்கும் தொழில் படு பயங்கர மானது. இது தெரிந்தும், தமது அன்றாட ஜீவனோ பாயத்தை நகர்த்துவதற்காக அந்த மீனவர்கள் படகேறுகிறார்கள். மழைக் காலங்களில்கூட கடலில் புயல் மையங் கொண்டிருந்தாலும் அதிகமான கடற்கொந்தளிப்பு ஏற்பட்டாலும் கூட அவர்கள் கடலில் இறங்கப் பின்னடிக்க மாட் டார்கள். எந்த இயல்பற்ற சூழலிலும் கடலில் இறங் கினால்தான் அவர்களுக்குத் தரையில் வாழ்வு.

இந்தக் கடலில் படகில் சென்று மீன்பிடிக்க முடியாத அளவுக்கு இவர்கள் மீது தடைகள் போடப்படுகின்றன; கட்டுப்பாடுகள் விதிக்கப்படு கின்றன. கடற்கரைப் பிரதேசங்களைக் கடற்படை யினர் அபகரித்து வைத்திருக்கின்றனர். தமது நிலங்களைக் கடற்படையினரிடம் இருந்து மீளப் பெற்றுக் கொள்ள நாதியற்று வாழ்கின்றனர். கடலில் என்ன விபரீதம் நடந்தாலும், அது உயிருக்கு ஆபத்து என்று தெரிந்தும், மீன் பிடித்தொழிலை மேற்கொண்டு வரும் கடற் றொழிலாளர்கள் இங்கு தரையிலும் அச்சத் துடனேயே வாழ வேண்டிய சூழலில் உள்ளனர்.

தொழிலுக்காகக் கடலுக்கு அனுப்பி விட்டு அவர்கள் திரும்பி வரும் வரை வழி மேல் விழி வைத்திருக்கும் உறவுகள் படும் சிரமத்தை வார்த்தைகளால் சொல்ல முடியாது. கரையும் கடலும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. ஆனால் அங்கு வாழும் மக்கள் வாழ முடியாது தவிக் கின்றனர். மழை காலங்களில் கடலில் புயல் மையங் கொண்டு கடல் கொந்தளிப்பு அதிகரித்து காணப்படும் வேளையில் மீனவர்களைக் கடலில் இறங்க வேண்டாம் என்று வானிலை அவதான நிலையம் அறிவித்தும், மீனவர்கள் கடலில் இறங்குகிறார்கள். கடலில் இறங்கிய மீனவர்களில் பலர் காணாமற் போகிறார்கள். பின்னர் சடலமாக கரை ஒதுங்குகின்றனர். கடலில் இறங்கவில்லையாயின் மீனவர்களின் அன்றாட வாழ்க்கை பட்டி னியுடன் கழியும் என்பதால்தான் உயிர் அபாயம் இருந் தும், புயலிலும் கடலில் இறங்குகிறார்கள்.

கோப்பாய் சண்முகம்

கதையோடு செய்தி

புயல் காரணமாக கடலில் இறங்க வேண்டாம் என்ற வெறும் அபாய அறிவிப் பினால் மட்டும் அந்த மக்களை நாம் காப்பாற்றி விடுவோமா? கடலில் இறங்கவில்லை என்றால் அந்த மக்களது வாழ்வு எப்படி நகரும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அதற்கான வழி முறைகளை ஏற் படுத்த முன்வர வேண்டும். கடற்கரைப் பிரதேச மான மாதகல் பிரதேசம் கடற்படையினரின் கண்காணிப்பும் முற்று முழுதான ஆக்கிரமிப்பும் கொண்டதாக மாற்றப்பட்டிருக்கிறது. யாழ். மாவட்டத்தில் வலிகாமம் பிரதேச சபையின் கீழ் மாதகல் கிராமம் அடங்குகிறது. காஞ்சிபுரம், மாரிசன் கூடல், சகாயபுரம், போதி, பொக்கணை, சம்பில்துறை முகம் என்கிற அழகிய கடற்கரைக் கிராமங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

மாது அகன்ற இடம் என்பதால் மாதகல் என்ற பெயர் உருவானதாகக் கூறப்படுகிறது. யார் அந்த மாது? வட இந்தியாவிலிருந்து சங்கமித்தை என்ற பௌத்த துறவியாகிய பெண்ணொருத்தி பௌத்த மதத்தைப் பரப்புவதற்காக இந்தியா விலிருந்து மாதகலில் வந்திறங்கி அங்கிருந்து அவர் மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பிச் சென் றதாக சிங்கள பௌத்த வாதமாக சங்கமித்தை யின் கதை தமிழர் மண்ணில் திணிக்கப்பட்டது.

இப்பொழுது சங்கமித்தை வந்திறங்கிய இடத்தில் பெரிய பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளது. ஒரு பட கில் பௌத்த துறவியாகிய பெண் ஒருத்தி வெள்ளரசு மரத்தோடு வந்திறங்குவதைச் சித்திரிக்கும் சிலை களும் படங்களும் கதைகளும் அங்கு காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மாதகல் மண்ணின் கதை மிகுந்த சோகம் மிக்கது. அங்கு வெகு நீண்ட கால மாக கடற்படையின் ஆதிக்கம் மிகுந்திருக்கிறது. 1992 ஆம் ஆண்டு மாதகல் பகுதியை கடற் படை யினர் கைப்பற்றினர். இன்று வரையும் அங்கு நிலை கொண்டுள்ளனர். இது ஏறக் குறைய மாதகல் பகுதி மக்களின் வாழ்க்கை வரலாற் றையே மாற்றிப் போட்டிருக்கிறது. பௌத்தம் வட பகுதியில் வந்து குடியேறிய கதையைச் சொல் லுகிறது. அதே வேளை அந்தப் பகுதியில் தமிழ் மக் களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது.

கடந்த புதன்கிழமை பிற்பகல் 2 மணி இருக்கும் அந்தப் பகுதியில் இருந்து ஒரு கடற்றொழி லாளியின் குடும்பம் கடலுக்குள் இறங்குவதற்கு ஆயத்தமானது. அந்தக் குடும்பத்தில் தகப்பனுடன் இரு மகன்கள் கடலில் இறங்கித் தொழில் செய்து வந்தனர். அன்றும் கடலில் இறங்குவதற்காக ஆயத்தமானார்கள். மூத்த மகனுக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் அவனை விட்டு விட்டு இரண்டாவது மகனுடன் தகப்பன் கடலில் இறங்கினார். மூத்த மகன் தங்கள் மீன் பிடிக்கச் செல்லும் படகை கடலில் தள்ளி விடும் வேளை அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் ஓடி வந்து அக்கடற்றொழிலாளியின் மூத்த மகனை அடித்து கடலுக்குள் விழுத்தி தண்ணீருக்குள் அமிழ்த் தினார். இதனைப் பார்த்த தகப்பனும் இரண் டாவது மகனும் படகில் இருந்து குதித்து வந்து அவனைத் தள்ளிவிட்டு மூத்த மகனை காப்பாற் றினார். இவர்களைத் தாக்கவென வந்தவன் தன்னுடன் பல பேரையும் கூட்டிக் கொண்டு வந்திருந்ததால் அவர்களும் அவனுடன் சேர்ந்து மூன்று பேரையும் தாக்கத் தொடங்கினர். அடி தாங்க முடியாத மூவரும் அங்கிருந்த கடற்படை முகாம் ஒன்றினுள் பாதுகாப்புத் தேடி ஓடினர். அவர்களைத் தாக்க வந்தவர்கள் அம் மூன்று பேரையும் கடற்படை முகாமைவிட்டு வெளியே வரும்படி கூச்சலிட்டனர். கடற்படையினரோ அந்த மூன்று பேருக்கும் பாது காப்பு கொடுக்க மறுத்து அவர்களை முகாமை விட்டு வெளியேறுமாறு கூறினர். அவர்களும் எதுவும் செய்ய இயலாமல். முகாமை விட்டு வெளியே வந்தனர். அங்கே அவர்களைத் தாக்கவென நின்றவர்களில் ஒருவன் கல்லால் அந்தத் தகப்பனின் முகத்தில் குத்தினான்.

அவ்வளவுதான்; மூக்கு உடைந்து இரத்தம் சீறிப் பாய்ந்தது. இந்தச் சம்பவத்தைத் தடுக்க முடியாது அங்கு கூடி நின்ற மக்கள் வேடிக்கை பார்த்தனர். கடற்படை யினராலேயே இந்த விபரீதத்தை தடுக்க முடியாமல் போன போது அந்த மக்களால் எப்படித் தடுக்க முடியும்? படுகாயத்துக்கு உள் ளான அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டார். அந்தப் பகுதி மக்களை பாதுகாக்க முடியாத கடற்படை யினர் ஏன் இந்த இடத்தில் முகாமிட்டு இருக்கின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். கடலிலும், தரையிலும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தி ருக்கும் இந்தப் பகுதி மக்களுக்கு எப்பொழுது விடிவு கிடைக்கும். அவர்கள் தமது பிரதேசத்தில் பாதுகாப்புடன் வாழ்ந்து தமது கடற்றொழிலை மேற்கொள்ள ஆவன செய்வது யார்? அந்தப் பிரதேசத்தில் இருந்து அந்த மக்களை அகற்று வதற்கு எந்த விதமான பிரச்சினைகளையும் முடுக்கி விடு வதற்கு ஆயத்தமாக இருப்பவர்கள் குறித்த எம்மால் என்ன கூற முடியும்? என்ன நடவடிக்கை எடுக்க முடியும்? இது குறித்து மக்கள் தான் சிந்திக்க வேண்டும்.

## வாசகர் திருமுகம்

### வாய்மொழி மூல அறிவித்தல் நடைமுறைக்குச் சாத்தியமா?

42 வைத்திய அதிகாரிகள் யாழ். மாவட்ட வைத் திய நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட் டிருக்கும் நிலையில் ஒப்பந்த அடிப்படையில் பலவருடங்களாக சேவையாற்றி வந்த 70 வயதைக் கடந்த வைத்தியர் களை 30.11.2013 இல் சேவையிலிருந்து நிறுத்தும்படி வட மாகாண அமைச்சு, பிராந்திய சுகாதார சேவைகள் யாழ். மாவட்ட பணிப்பாளருக்கு வாய்மொழி மூலம் அறிவித்தல் விடுத்தது.

பின்னர் வாய் மொழி மூலமாகவே சம்பந்தப் பட்ட வைத்தியர்களுக்கு அறிவிக் கப்பட்டுள் ளது. அவர்களை விடுவிக்க, சேவை யில் இருக்கும் வைத்தியர்களை பொறுப்பேற்கும்படியும் வாய் மொழி மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிர்வாகச் சீர்கேட்டினால் பாதிக்கப்படப் போவது வசதி குறைந்த நோயாளர்களே. அரச வைத்திய நிறுவனங்களின் வெளிநோயாளர் பகுதி காலை 8-12 மணி வரையும் மாலை 2-4 மணி வரையும் வைத்திய சேவை வழங்கி வந்த நிலையில் 02.12.2013 தொடக்கம் பல வைத்தியசாலைகளில் காலை அல்லது மாலை யில் மட்டுமே வைத்திய சேவையை வழங்க முடிகிறது. இதனால் கர்ப்பிணித்தாய்மார்கள், குழந்தைகளின் தடுப்பு மருந்து கிளினிக்குகளும் பாதிக்கப்படும்.

வயதெல்லைக் கட்டுப்பாடு வடமாகாண ஆளு நரால் விடுக்கப்பட்டுள்ளது என அறிகிறோம். ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற வைத்தியர்களை நியமிக்க அனுமதி வழங்குவதும் அவரே. எனவே ஆளு நரிடமிருந்து தான் சேவை நிறுத்தல் கடிதம் வர வேண்டும். இடையில் இருக் கும் நிர்வாகத்தினர் ஏன் அவசரப்பட்டு வாய்மொழி மூலம் சேவையை நிறுத்தி இலவச வைத்திய சேவையை சீர் குலைத்து மக்களுக்கு அசௌகரியத்தை ஏற் படுத்துகிறார்கள் என்பது தெரியவில்லை. மேலதிக வைத்தியர்கள் சேவைக்கு வந்த பின்னரே ஒப்பந்த அடிப்படையில் இருக்கும் வைத்தியர்களின் எண்ணிக்கையை குறைப் பதே சரியான நிர்வாக சேவையாக இருக் கும். பொது மக்களின் சேவைக்காக பொருத் தமான ஒருவர் வருவாரானால் வயதெல் லையைப் பார்ப்பது அவசியமில்லை என்பதைப் பலர் ஏற்றுக் கொள்வார்கள்.

இந்தப் பிழையான நிர்வாக ஏற்பாட்டை மத்திய அரச சுகாதாரத் திணைக் களம், சுகாதார அமைச்சர், தேவை ஏற்படின் ஜனாதிபதி ஆகியோரின் கவனத்துக்கு உடன் கொண்டு சென்றால் மட்டுமே நிவர்த்தி செய்ய முடியும்.

ம. வேலாயுதம், சுன்னாகம்.

### மாணவர்களின் நடத்தையில் கவனம் செலுத்தவும்

பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கல்வி பெறும் பொருட்டு பல சிரமங்களின் மத்தியில் கல்லூரி களுக்கு அனுப்பி வைக்கின்றார்கள். மாண வர்கள் கல்லூரிக்கு வருகை தந்ததை உறுதிப் படுத்த தினமும் வருகை தந்து வகுப்பாசிரியரால் இடாப்பில் வரவு பதியப்படுகின்றது.

கல்லூரி அதிபர்கள், வகுப்பாசிரியர்கள் கல் வியை வழங்கும் பெரியார்களுக்கு கீழ்ப்படிந் தும் ஒழுக்கம் பேணியும் நடக்க வேண்டி யவர்களாகவுள்ளனர். கல்லூரி வருகை நேரத்தின் பின்னர் தனியார் கல்வி நிலை யங்களிலும் கல்வி பெறுகின்றார்கள்.

இந்த நிலையிலே குறிப்பாக ஜி. சீ. ஈ. சாதாரண, உயர்தர மாணவர்கள், மாணவிகளில் சிலர் தவறான வழியில் செயற்பட்டு வருகின்றனர்; கல்வியைப் பெறுவதற்கு இவர்கள் கல்லூரி நாள்களில் கல்லூரிக்கு சமுகமளித்தார்களா? சமுகமளிக்கவில்லையா? என்பதை கல்லூரி வரவு இடாப்பு சான்று பகரும்.

மாணவர்களில் சிலர் சந்திகளிலும் மறை விடங்களிலும் நின்று மது அருந்தி வருவதை தினமும் காணக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு மது அருந்தியதும் மதுவின் வேகம் தலைக்கேறியதும் வீதியில் செல்பவர் களுக்கும் வீடுகளில் இருப்பவர்களுக்கும் தொல்லை கொடுக்கின்றனர். மறைவிடங்களில் கலாசார சீர்கேட்டிலும் ஈடுபடுகின் றனர்.

ஆற்றல்மிக்க இந்த மாணவ, மாணவிகள் காதல் வலையில் சிக்கிக் கொண்டு தமது வாழ்வைச் சீரழித்து வருகின்றனர்.

எனவே இந்த விடயத்தில் அக்கறை எடுத்து செயற்படுமாறு பெற்றோரையும், மற் றோரையும் வேண்டி நிற்கிறோம்.

சிவசண்முகம்.

### சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கும் உரும்பிராய் மீன் சந்தை

யாழ். உரும்பிராய் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் இருக்கும் மீன் சந்தையால் பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன. மீன் கழிவுகளை பிராணிகள் கொண்டு வந்து நீர்நிலைகளில் போடுகின்றன.

இது குறித்து வலி. கிழக்கு பிரதேச சபையின் கவனத்துக்கு கொண்டு வந்த போதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பிரதேச சபைக்கு நேரில் சென்று கேட்டபோது இதுவரை அவர்கள் எங்களிடம் "நீங்கள் முதல் வந்த னீங்களா?, மீன் சந்தை முதல் வந்ததா?" எனக் கேட்கிறார்கள்.

ஒன்றில் அவர்கள் இந்தச் சந்தையை அகற்ற வேண்டும். இல்லையேல், துர்நாற்றம் எழாத வகையில் சுகாதாரமான சூழலில் அதனைப் பராமரிக்க வேண்டும். இதனைப் பிரதேச சபை மேற்கொள்ளுமா?

உரும்பிராய் வாழ் மக்கள்.

# உலகின் இளவயதுப் பட்டதாரியாக இலங்கை தமிழ் மாணவி



**தகவல் தொழில்நுட்பத்தில் உலகின் மிக இளவயது பட்டதாரியாக கண்டியைச் சேர்ந்த 11 வயது தமிழ்ச் சிறுமியான வாசின்யா பிறேமானந்தா அறிவிக்கப்பட்டுள்ளார்.**

பிரிட்டன் கணினிச் சமூகம் (British Computer Society ) இதற்கான அறி விப்பை வெளியிட்டுள்ளது. கண்டியிலுள்ள கொழும்பு அனைத் துலகப் பாடசாலையில் 8 ஆம் வகுப்பில் கல்வி கற்று வரும் வாசின்யா, பிரிட்டன் கணினிச் சமூகத்தின் தகவல் தொழில்நுட்ப பட்டத்தை (BCS IT) ஈட்டியுள்ளார்.

இவரே உலகில் தகவல் தொழில் நுட்பத்தில் ஆகக் குறைந்த வயதில் பட்டம் பெற்றவர். எட்டு வயதில் இருக்கும் போதே, இவர் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் ஏ தரச் சித்தியைப் பெற்று சாதனை படைத்திருந்தார்.

அத்துடன் எட்டு வயதிலேயே கணினி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட இவர் உலகின் இளம்வயது இணையத்தள மேம்பாட்டாள ராகவும் அறிவிக்கப்பட்டிருந்தார்.

இவர் வர்த்தகரான பிறேமானந்தா நடராஜா மற்றும் லக்சிதா பிறே மானந்தா ஆகியோரின் மகளாவார்.